Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් நவ. 03-09, 2002

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 484



## என்ன செய்யப் போகிறார் ரணில்?

### இரண்டாவது சுற்றுப் பேச்சில் முஸ்லிம்களின் நிலை

### செக்ஸ் மியுசியம்

நெஞ்சங்கள் எரிய
நிகழ்ந்து முடிந்திட்ட
தீபாவளி எத்தனையோ
இதோ
வஞ்சங்களற்று
நம்பிக்கைத் தீபங்களோடு
ஒளிரும் தீபாவளியில்-நம்
மனமார்ந்த வாழ்த்துக்கள்!

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

## தீபாவளி தத்துவம்

தீபாவளி என்னும் நன்னாளைப் பொன்னாளாக நாம் அனைவரும் கொண்டாடுகிறோம். ஆனால், எதற்காக இந்தத் தீபாவளி கொண்டாடுகிறோம் என்பதை யாரும் சிந்திப்பதே இல்லை.


நரகாசுரன் என்ற அரக்கனைக் கண்ணபிரான் அழித்தார். அந்த அரக்கன் அழிந்த நாளைத் தீபாவளியாகக் கொண்டாடுகிறோம். என்று சிலர் சொல்வார்கள். ஆனால், இந்தக் கருத்துப் பொருத்தமற்றது.

கொடியவன் அழிக்கப்பட வேண்டியவன். ஒரு கொடியவனை அழித்த நாளைக் கொண்டாடுவது என்பது எந்தக் காலத்திலும் இல்லை. அப்படி இருந்தால் இரணியனைக் கொன்ற நாள், கம்சனைக் கொண்ற நாள், இராவணனைக் கொன்ற நாள், இடும்பன்-பகன்-துரியோதனன் போன்ற அரக்கர்களைக் கொன்ற நாள் எல்லாம் நாம் கொண்டாடுகிறோமா? அப்படிக் கொண்டாடினால் ஒவ்வொரு நாளும் நமக்குத் தீபாவளியாகவே இருக்கும்! எனவே, தீபாவளி கொண்டாடப்படுவதன் உண்மையான காரணத்தை பெருந்தகைகள் ஆராய்ந்து அறியத் தருவது நன்மை பயக்கும்.

வேலு பாக்கியராஜி-டுபாய்.

## ஆன்மீகம்

### இறையரசையடைய அவரோடிணைந்து வாழக் கற்றுக் கொள்வோம்



இன்று தொலைக்காட்சி, பத்திரிகைகள் வாயிலாக நாம் அறிந்து கொள்வது யாதெனில்:- உலகில் நடைபெறும் பயங்கரச் சம்பவங்கள், மிருகங்களை விட மனிதனால் புரியப்படும் மிகக் கீழ்த்தரமானதும் பயங்கரமானதுமான குற்றச் செயல்களாகும்.

உலகிலுள்ள அனைத்தையும் படைத்த இறைவன் முதல் மனிதர்களான ஆதாம் ஏவாளை அறிவு நிறைந்த அந்தஸ்தில் படைத்து "ஏதேன்" என்ற சிங்காரத் தோப்பில் வாழச் செய்தார். ஆனால், சாத்தான் அவர்களை ஏமாற்றி இறைவனின் கட்டளையை மீறச் செய்ததன் விளைவு பாவத்தில் வீழ்ந்தனர். இன்றும் அந்தப் பாவம் உலகெங்கும் தொடர்ந்து கொண்டே செல்கின்றது.

இயேசு இரக்கத்தின் பிதா. மனிதன் பலவீனமானவன் என்பதை நன்கறிந்தவர். அவர் படைத்த மனிதனைக் கைவிடவில்லை. அதனால்தான் யோவான் அதிகாரம் 15 வசனம் 5 இல் எடுத்துரைக்கின்றார்: "நானே திராட்சைச் செடி, நீங்கள் அதன் கிளைகள். ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார். என்னை விட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது."

ஆம். அன்புச் சகோதரங்களே! கிளைகளாகிய நாம் செடியாகிய இயேசுவோடு இணைந்தவாறே இருப்போம். தவறின் கிளைகளாகிய நாம் வெட்டி நெருப்பில் போடப்படுவோம். இறையரசையும் இழப்போம். இன்றே பாவச் செயல்களைக் கைவிட்டு அவரோடிணைந்து வாழ்ந்து இறையரசை எமதாக்கிக் கொள்ள ஆயத்தமாவோமாக. ஆயத்தம்தானே?

செல்வி. பிரகாசியம்மாள் அந்தோனிப்பிள்ளை, இரஜவெல்ல.

## உலக வாழ்வும் மறுமை வாழ்வும்

மண்ணறைகளுக்குச் சென்று வாருங்கள். இதனால் மரண நினைவு உண்டாகும். மையத்தைக் குளிப்பாட்டுங்கள். இது ஒரு படிப்பினையாகும். ஜனாஸா தொழுகையில் கலந்து கொள்ளுங்கள், இந்தத் தொழுகையினால் நீங்கள் துயரம் அடையக் கூடும். துயரம் அடைந்தோரை அல்லாஹ் நல்ல மனத்தோடு வரவேற்பார்.

நூல்-ஹாகிம்.

யா அல்லாஹ்! என்னை ஏழையாக வாழச் செய்வாயாக! என்னை ஏழையாக மரணிக்கச் செய்வாயாக! ஏழைகள் கூட்டத்தில் எழுப்புவாயாக! என்று திரு நபி (ஸல்) அவர்கள் இறைவனிடம் துஆ கேட்டார்கள்.

நூல்-திர்மிதி

ஒரு பயணி கொஞ்சம் ஓய்வு பெறுவதற்காக மரத்தின் நிழலில் அமர்ந்து விட்டுச் செல்கின்றானே அது போன்றே எனக்கும் இந்த உலகுக்கும் உள்ள உறவாகும்.

நூல்-அஹ்மத்.

செல்வி எம்.எல். நாஸ்ரத் நஸ்வின்-வாழைச்சேனை.

## கவிதைப் போட்டி இல. 481

### பரிசுக்குரிய கவிதை

### மழையின் சதி

எதிர்பாரா மழையொன்று
இடமறியாது பெய்ததினால்
சதிராட்டக் கூட்டத்தின்,
பந்தயப் பணம் கரைந்து
கான் வழியே ஓடிக்
கடலினுள் வீழ்ந்ததாம்.
சீ. தங்கவடிவேல், மட்டக்களப்பு.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### கொண்டாட்டம்

மழை தடுத்ததினால் யாருக்கு
கிண்ணம் என்று
இரு அணிக்கும் திண்டாட்டம்
விதைத்த பயிர்கள் மழையின்றி வாடிக்
கிடப்பதைக் கண்டு
ஏழையின் மனதில் போராட்டம்
மழையின் சத்தம் கேட்டு நித்தம் பயிர்
விதைத்தவர்களுக்கு கொண்டாட்டம்.
சிவலிங்கம் சுமதி, ஏறாவூர்-4.

### ஏமாற்றம்

வெற்றி வார்த்தைகளை முன்னமே
ஊடகங்களுக்கு தெரிவித்து
நீயா? நானா? என
களத்தில் குதித்த நீங்கள்
இப்படி சமாதானமாகிப் போனது
எங்களுக்கென்றால்
பெரிய ஏமாற்றம்தான்!
கிருஷ்ணன், சிவா மஸ்கெலியா.

### இயற்கையின் நியதி.

யாருக்கு இந்தக் கோப்பை என்று
இராப்பகலாகப் போட்டி
இருவருக்குமே என்பது தான்
இயற்கையின் நியதி
போருக்கு விடை கொடுக்க- எமக்கு
இது நல்ல அறிகுறி.
பி. ஜனா, கொச்சிக்கடை.

### இலஞ்சம்

இரண்டு நாட்களும் பெய்த மழையே
இலங்கையின் மானம் காத்த மழையே
இலங்கை அணியிடம் எவ்வளவு பெற்றாய்?
என்னிடம் மட்டும் மறைக்காமல் கூறு.
வி. கந்தசாமி, குருமன்காடு.

### சின்னம்

சந்தோஷ களிப்பினிடையே
சாகசங்கள் படைத்த வீரர்
சமரசத்தின் தீர்ப்பினிலே- கையில்
தவழ்கிறது வெற்றிச் சின்னம்
தெ. லோஜனா, கொழும்பு-6.


### சம உரிமை

சம உரிமைகள்
தேடும் இவ்வுலகில்
சரி சம வெற்றி.
பெற்றதை எண்ணி
பெருமிதமடையுமெம்
நிலைகண்டு நீங்கள்
திருந்திட வேண்டுமே.
பாண்டியூர்-ருக்ஷிகா.

### பாடம்

எட்டி மோதும்
உள்ளங்களின்
வெற்றி தோல்வி
போதுமென்று- ஓர்முறை
ஒட்டிக் கொள்
கரங்களையென
வெட்டிக் காட்டியதோ
காலம்?
லைலா அக்ஷியா அக்ரம்-குருணாகல்.

## கவிதைப் போட்டி இல.484



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 09.11.2002

கவிதைப் போட்டி இல.484
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### தளம்பாமல் இருப்பது...

ஒற்றுமை காட்டி
வெற்றியைப் பகிர்ந்து
சமத்துவம் ஏற்ற
தலைவர்கள் இங்கே
தளம்பாமல் இருப்பது...
சமத்துவப் பெருமை
காட்டிடத் தானோ....?
சி. மதியழகன், திக்கம்.

### எண்ணங்கள்

மழை தந்த விலை உங்கள்
புன்னகை விற்கப்பட்டதா?
நான்கு கரம் ஏந்த
நடுவில் நிற்கும் கிண்ணம்
என்றாலும் உங்கள் மனம்
எதற்கோ தவிக்கிறது
என்பது என் திண்ணம்.
பெ. விக்னேஸ்வரன், ஹட்டன்.

### சம(ா)தானம்!

சம(ா)தானம் இது போல;
சகலருக்கும் கிடைத்திட்டால்...
கலகமேதும் இல்லையே?
சந்தோஷமே எல்லையே!...
-மட்டுநகர் வாஹிட் குத்தூஸ், பதுளை.

### வெ(கொ)ல்!

மோதிக் கொள்ளாமல்
வெற்றி கொண்டீர் -இங்கு
மோதிக் கொன்றோர்
வெற்றி கொள்வாரோ?
ரி. ஜோர்ஜ்-நுவரெலியா.

## உங்கள் பக்கம்

### கௌரவத்திற்கு வழங்கப்பட்ட அகௌரவம்

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் உலக இஸ்லாமிய தமிழாராய்ச்சி மாநாடு சிறப்பாக நடைபெற்று முடிந்தது.

மூன்று தினங்கள் நடைபெற்ற மாநாட்டில் இரண்டு நாட்களில் படைப்பாளிகளைக் கௌரவிக்கும் நிகழ்ச்சிகள் நடந்தன.

இதில் கௌரவிக்கப்பட்ட சிலர் எதற்காகக் கௌரவிக்கப்பட்டார்கள் என்று எண்ணிப் பார்க்கும் போது அந்தக் கௌரவத்திற்கே களங்கம் ஏற்படுகிறது.

தமிழுக்குச் சேவை செய்த இஸ்லாமியர் எனக் கூறிக் கௌரவிக்கப்பட்டவர்களுள் சிலர் ஒழுங்காகத் தமிழ் பேசத் தெரியாதவர்கள். இன்னும் சிலர் தமிழுக்குச் செய்த தொண்டு வாரப் பத்திரிகைகளை ஆரம்பித்து அவற்றுக்கு ஆசிரியராகவும் இருந்து ஒரு வருடத்திற்குள் இழுத்து மூடியதுதான்.

ஏற்பாட்டுக் குழுவினர் தங்களுக்கு அறிந்த தெரிந்த நண்பர்கள், சகாக்கள், சொந்தக்காரர்கள் என்று யாரையும் விட்டுவைக்காமல் கௌரவித்திருக்கின்றனர். இவர்களைக் கௌரவிப்பதில் எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால் உலக இஸ்லாமிய தமிழாராய்ச்சி மாநாடு எனக் கூறி நடத்தப்பட்ட ஒரு முக்கியமான நிகழ்வில் தமிழுக்குத் தொண்டாற்றினார்கள் எனக் கூறிக் கௌரவிக்கப்பட்டது தான் தமிழ்த் தாய்க்குப் பொறுக்காத அம்சம். இன்னும் இந்த மாநாட்டின் போது சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற இஸ்லாமியத் தமிழ் அறிஞர்களான கலாநிதி எம்.ஏ. நுஹ்மான் போன்றோர்களின் பங்களிப்பு மிகவும் குறைவாகவே பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது. வழமை போலவே இந்த இலக்கிய மாநாட்டிலும் அரசியல்வாதிகளின் அறுவைகளுக்குக் குறைவிருக்கவில்லை. பலருக்குப் பொன்னாடைகள் போர்த்தப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன. அவை மாநாட்டு ஏற்பாட்டாளர்களைத் தங்களது அமைச்சுக்களில் இணைப்புச் செயலாளர்களாகவும், அரச கூட்டுத்தாபனங்களில் உயர் பதவிகளிலும் வைத்திருப்பதற்கான நன்றிக்கடன் என்றுதான் கருத வேண்டும்.

தமிழுக்குத் தொண்டாற்றிய மூத்த இஸ்லாமிய அறிஞர்கள் பலர் புறக்கணிக்கப்பட்டிருந்தார்கள். மாநாட்டை ஏற்பாடு செய்தோர் தங்களுக்கு வசதியான முறையில் விருப்பமானவர்களைக் கௌரவித்து, தாங்களும் ஒரு பொன்னாடை போர்த்தி மகிழ்ந்து கொண்டார்கள்.

வாழ்க இஸ்லாமியத் தமிழ்!!

எம். அஸ்லம்-கல்முனை

முரசுக்கோர் கவிதை
என் சொந்தம்
தினமுரசே-உனக்கொரு
புகழ் மாலை சூட்ட
தமிழ் வார்த்தை
தேடுகின்றேன்
என்கருள்ளே வார்த்தையில்லை
தேன் சொட்டும்
தேன்கிண்ணத்தால்
கவிதா நெஞ்சங்களை
ஊக்கம் கொடுத்து
பிரமிக்கவைக்கின்றாய்
நீ சுமந்து வரும்
அத்தனை அம்சங்களின்
அட்சரத்தில் கூட
சுவைமிகுதியே கலந்திருக்க
வாசக நெஞ்சங்களை-நீ
கொள்ளை கொண்டு விட்டாய்
வாரமொரு முறை என
லேட்டாக வந்தாலும்-நீ
லேட்டஸ்ட்டாகவே
வருகின்றாய்
உன் திறமைக்கு நிகர்
நீயே...!
எஸ். சிதீக், அட்டாளைச்சேனை-08.

அன்பின் முரசே, நீ சுமந்து வரும் அனைத்தும் சூப்பர். முரசில் வரும் அரசியல் அலசல்கள் பக்க சார்பின்றி நேர்மையாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் காணப்படுகின்றது. ஏனைய தமிழ் ஊடகங்களில் காணப்படாத விதத்தில் மாற்றுச் சிந்தனையுடன் நோக்கப்படும் அரசியல் கருத்துக்கள் எங்களை உற்சாகத்துடன் வாசிக்கத் தூண்டுகின்றன. என் வாழ்த்துக்கள்!

எஸ். லெஸ்லிகுமார், நோத்லண்ட் எஸ்டேட், தோளங்கமுவை.

மதிப்புக்குரிய தினமுரசு ஆசிரியர் அவர்களுக்கு,

நான் தினமுரசின் நீண்டகால வாசகர். உங்கள் பத்திரிகையில் இப்போது அடிக்கடி பலதரப்பட்ட மாற்றங்களைக் காணக்கூடியதாக இருக்கிறது. சம்பிரதாய பூர்வமான தமிழ் அரசியலை விமர்சிக்கும் தினமுரசு தமிழ் மக்களுக்கு மாற்றுக் கருத்துக்களை வழங்க முற்படுகிறது.

இந்த முயற்சியின் போது மூத்த தமிழ் தலைவர்களின் கௌரவத்திற்குக் குந்தகம் ஏற்படாத விதத்தில் கருத்துக்களை முரசு பிரசுரிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

எஸ். இந்திரன், இலண்டன்.

சிந்தியா கேள்வி பதில் பகுதிக்கு ஏராளமான கேள்விகள் அனுப்பியும் இதுவரை எனது தபாலட்டைகள் ஒன்றும் பிரசுரமாகவில்லை. பல முறை எனது அபிமான நடிகைகளின் முகவரி கேட்டு கடிதம் எழுதினேன். ஒன்றுக்கும் பதில் தரவில்லை. எனது தபாலட்டைகளுக்கு என்ன நடக்கிறது.

பி. கவிதா, பாலாவி, புத்தளம்.

என் அபிமான தினமுரசே,

நீ வாரம் தோறும் சுமந்து வரும் அனைத்து அம்சங்களையும் நான் விரும்பிப் படிப்பேன். அரசியல் விமர்சனங்களில் நீ கொண்டிருக்கும் கருத்து வித்தியாசமானது. முற்றிலும் மக்கள் சார்பானது. உன் பணி தொடர வாழ்த்துக்கள்.

எஸ். காந்திமதி, சண்டிலிப்பாய்.

## வாசக[ர்] சாலை

முத்தான முரசே,

உனது முத்துக்கள் சில நேரங்களில் சில பக்கங்களில் மிகவும் சிறிதாகக் காணப்படுகிறது. இது எம்போன்ற வாசகர்களுக்கு வாசிப்பதற்கு சற்றுக் கடினமாக இருக்கிறது. எனவே எழுத்தமைப்பை இன்னும் கொஞ்சம் பெரிதாக மாற்றினால் வாசிக்க வசதியாக இருக்கும்.

ஆர். சிவஞானம், யாழ்ப்பாணம்.



முரசில் நீண்டகாலமாக சினிமாப் பகுதியில் தென்னிந்தியாவில் இருந்து மயன் என்பவரால் எழுதப்பட்டு வந்த திரையுலக மறுபக்கம் என்ற சுவையான தொடர் சிறிது காலமாக இடம்பெறுவதில்லை. நான் விரும்பிப் படிக்கும் சினிமாப் பகுதியில் திரையுலக மறுபக்கத்தை மீண்டும் சேர்த்துக் கொள்வீர்களா?

எம். கபூர். கல்முனைக்குடி. கல்முனை.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களுக்கு ஜனாதிபதி வாழ்த்து!

## அடிப்படை விடயங்கள் ஆராயப்படவேண்டும் என்றும் வலியுறுத்து!

தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் இரண்டாவது சுற்றுப் பேச்சு வார்த்தைகளுக்கு வாழ்த்துத் தெரிவித்திருக்கும் ஜனாதிபதி பேச்சு வார்த்தைகளின்போது இனப் பிரச்சனையின் அடிப்படை விடயங்களை ஆராய வேண்டும் என்று கேட்டிருக்கிறார். செவ்வாய்க்கிழமை கருத்து வெளியிட்ட ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் ஜனாதிபதியின் பிரதிநிதி ஒருவரைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்துச் செல்லுமாறு அரசாங்கத்திடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இன்னமும் பதில் கிடைக்கவில்லை எனத் தெரிவித்திருக்கிறார். மக்கள் விரும்புவது போன்று அரசாங்கத்துடன் கருத்தொருமித்துச் செயற்பட ஜனாதிபதி விருப்பம் கொண்டுள்ளதாகக் கூறிய ஹரீம் பீரிஸ் இந்த நல்லிணக்கத்தின் முதற் படியாக ஜனாதிபதியின் பிரதிநிதி ஒருவரை பேச்சு வார்த்தைக்கு அரசாங்கம் அழைத்துச் செல்ல வேண்டும் எனக் கேட்டிருந்தார். ஜனாதிபதியின் பிரதிநிதியாக லக்ஷ்மன் கதிர்காமர் பிரேரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ■

## கொட்டகதெனிய சிஹல உறுமயவில் இணைகிறார்

பொலிஸ்மா அதிபர் பதவிக்காக ஆனந்தராஜாவுடன் தீவிர போட்டியில் ஈடுபட்டு அப் பதவி கிடைக்காத நிலையில் பொலிஸ் சேவையில் இருந்து ஓய்வுபெற்றுச் சென்ற சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஜி.எம்.பி.பி. கொட்டகதெனிய சிஹல உறுமய கட்சியினூடாக அரசியலில் பிரவேசிக்க இருக்கிறார். பொலிஸ் சேவையில் தான் செய்த பணியைத் தொடர்ந்து மக்களுக்கு வழங்கும் விதமாக அரசியலில் பிரவேசிக்க இருப்பதாகக் கூறியிருக்கும் கொட்டகதெனிய இந்த நாட்டில் பயங்கரவாதம் தொடர்பாக நிலையான கொள்கையை உடைய ஒரே அரசியல் கட்சி சிஹல உறுமய என்பதால் அக் கட்சியில் இணையத் தீர்மானித்திருப்பதாகக் கூறினார்.

பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் பயங்கரவாதிகளுக்கு விட்டுக்கொடுப்புகளைச் செய்து அதிகாரத்தைக் கைப்பெற்ற முயற்சி செய்வதாகக் குற்றஞ்சாட்டிய அவர் ஒரே நிலைப்பாடுடைய சிஹல உறுமய மூலம் தான் அரசியலில் ஈடுபட இருப்பதாகக் கூறினார். ■

## உலக உணவுத் திட்டம் மறுப்பு

உலக உணவுத் திட்டத்தினால் இடம் பெயர்ந்த மக்களுக்கு வினியோகிப்பதற்காகத் திருகோணமலை கூட்டுறவு சமாசத்திற்கு வழங்கப்பட்ட அரிசி மனிதப் பாவனைக்கு உதவாதது என அந்த சமாசத்தினால் தெரிவிக்கப்பட்டதை உலக உணவுத் திட்டம் நிராகரித்துள்ளது.

கூட்டுறவு சமாசம் இந்த அரிசி பழுதடைந்திருப்பதாகத் தெரிவித்ததை அடுத்து திருகோணமலை அரசாங்க அதிபரும் நேரில் சென்று பார்வையிட்டு ஆமோதித்திருந்தார். ஆனால் இதனை உலக உணவுத் திட்டம் முற்றாக நிராகரித்திருந்தது.

தமது அமைப்பினால் வழங்கப்பட்ட அரிசி சமீபத்தில் கொள்வனவு செய்யப்பட்டது என்றும் மிக அண்மைய பரிசோதனையின் போதும் அந்த அரிசி எவ்வித பாதிப்புமின்றி மனிதப் பாவனைக்கு ஏற்ற நிலையில் காணப்பட்டதாகவும் உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது. ■

**வாசகர்கள், முகவர்கள், விளம்பரதாரர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் முரசின் தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்.**

## மக்கள் சக்திப் போராட்டத்தில் கலந்துகொண்ட தோட்டத் தொழிலாளர்களின் ஒருநாள் சம்பளம் வெட்டு

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்து 2002.09.09ஆம் திகதி அன்று கொழும்பில் நடைபெற்ற மக்கள் சக்தி ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்துகொள்ள மலையகத் தோட்டப் புறங்களிலிருந்து கொழும்பு வந்த தோட்டத் தொழிலாளர்களின் ஒரு நாள் சம்பளம் வெட்டப்பட்டுள்ளதால், அதனைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு தொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்கு இ.தொ.கா. மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் கட்டாயத்தின் பேரில் பெருமளவிலான தொழிலாளர்கள் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டனர்.

அன்று கடமைக்குச் சமுகமளிக்காததால் அன்றைய தினத்திற்கான சம்பளத்தை தோட்ட நிர்வாகங்கள் வெட்டியுள்ளன.

நாள் சம்பளத்தில் மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் ஜீவிக்கும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை வெட்ட வேண்டாம் எனத் தொழிலமைச்சருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## "ஒருவருட காலத்திற்கு தமிழர்களைத் துன்புறுத்தலாம்" இது கூட்டணியின் கோட்பாடு!

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாகத் தமிழ் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இரண்டு அரசியல் கட்சிகள் கருத்து மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்கக் கோரியிருக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்குத் தமிழ் கூட்டமைப்பின் ஆதரவு தொடர்ந்து தேவையெனில் இந்தச் சட்டத்தை முழுமையாக நீக்குமாறு கோரிக்கை விடுப்பது குறித்துப் பரிசீலித்து வருவதாகத் தெரிவித்திருக்கிறார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய அப்பாத்துரை விநாயகமூர்த்தி பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவு தெரிவித்தது தொடர்பாகக் கடுமையாகக் கண்டித்துக் கருத்து வெளியிட்டார்.

இதே கருத்தரங்கில் உரையாற்றிய கூட்டமைப்பு எம்.பியான ஜோசப் பரராஜசிங்கம் ஒரு வருட காலத்திற்கு மாத்திரம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுல் செய்வதற்கே தமது கட்சி ஆதரவு தெரிவித்ததாக விளக்கமளித்தார்.

தமிழ் மக்கள் அதிக அளவிலான பாதிப்புக்களை எதிர்கொள்வதற்குக் காரணமாயிருந்த ஒரு சட்டத்தை ஒருவருட காலத்திற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கீகரித்ததானது தமிழ் மக்களை ஒரு வருடத்திற்குத் துன்புறுத்த ஆதரவு தெரிவித்ததாகவே கருத முடியும் என்று விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

## இராணுவத்தை மறுசீரமைக்கும் பணி இரு வார காலத்தில் ஆரம்பம்!

இலங்கை இராணுவத்தை மறுசீரமைக்கும் நடவடிக்கைகள் அடுத்த இரு வாரங்களில் ஆரம்பமாக இருக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, மற்றும் முப்படைத் தளபதிகள் கலந்து கொண்ட உயர்மட்ட மாநாடு ஒன்று திங்கட்கிழமை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

இராணுவத்தை நவீனமயப்படுத்தி மறுசீரமைக்க அரசியல் பேதங்களை மறந்து கருத்தொருமிப்புடன் செயற்படுவது என இந்த மாநாட்டின் போது உடன்பாடு காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய இராணுவத் தளபதியின் பதவிக் காலத்தை நீடிப்பது தொடர்பில் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்கனவே முரண்பாடுகள் வலுத்துள்ள நிலையில் இந்த மறுசீரமைப்புத் தொடர்பான மாநாடு நடந்துள்ளது.

இதற்கிடையில் பாராளுமன்றத்தில் சட்டத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவதன் மூலம் ஜனாதிபதி வசம் இருக்கும் பாதுகாப்புத் தொடர்பான அதிகாரங்களை அவரிடமிருந்து பறிக்க அரசாங்கம் தயாராகிவருவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

## முஸ்லிம் செயலணிக் குழு

முஸ்லிம்களின் பாதுகாப்பு மற்றும் முஸ்லிம் பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பாகக் கவனிக்கத் தனியான செயலணிக் குழு ஒன்றை நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தக் குழுவில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சகல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் இடம்பெற்றிருப்பார்கள் எனவும் விரும்பினால் எதிர்க்கட்சி முஸ்லிம் எம்.பி.களும் இதில் பங்கு கொள்ள முடியும் எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்தச் செயலணிக் குழுவுக்குச் சமாதான செயலகத்தின் தனியான பிரிவென்றின் கீழ் நிதியுதவி வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ●

## படையினரின் எச்சரிக்கையை அடுத்து கைவிடப்பட்ட ஊர்வலம்

யாழ்நகரிலுள்ள இராணுவ முகாமையும் வேறுசில அலுவலகங்களையும் அகற்றுமாறு கோரி, கடந்த சனிக்கிழமை நடத்தப்படவிருந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் இராணுவத்தினர் விடுத்த எச்சரிக்கை காரணமாகவே கைவிடப்பட்டது எனத் தெரியவருகிறது.

சுபாஸ் ஹொட்டலிலுள்ள படையினரை அங்கிருந்து வெளியேறக் கோரி கடந்த சனிக்கிழமை யாழ்நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இத்தகையதொரு ஊர்வலம் நடைபெற்று அது இராணுவ முகாம் வரை வந்தால் ஆர்ப்பாட்டத்தில் உள்ளவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படும் எனப் படைத் தலைமை முன்கூட்டியே சர்வதேச போர்க் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவித்திருந்தது.

இதனை அடுத்து ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்தவர்களுடன் கண்காணிப்புக் குழுவினர் தொடர்பு கொண்டு இராணுவத்தின் இந்த எச்சரிக்கையை அவர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதன் பின்னரே அந்த ஊர்வலம் கைவிடப்பட்டதாகத் தெரியவருகிறது. இது இவ்விதம் இருக்க இதே கோரிக்கையை வலியுறுத்தி வேறுவிதமான போராட்டங்களை நடத்துவது குறித்துப் புலிகளின் யாழ் பிராந்திய அரசியற் பிரிவு ஆராய்ந்து வருகிறது.

புதன்கிழமை வடமராட்சிப் பகுதியில் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றக் கோரி ஊர்வலம் ஒன்றை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. ●

## கடன் தொகையில் சொகுசு ஜீப்

நாட்டில் ஏற்பட்டுள்ள மோசமான பொருளாதார நெருக்கடி மற்றும் வாழ்க்கைச் செலவுகளுக்கு மத்தியில் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கடன் தொகை ஒன்றிற்கு எம்.பி.க்களுக்கான சொகுசு ஜீப் வண்டிகளைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் தயாராகி வருகிறது.

இந்த ஜீப்வண்டிகளை வினியோகிக்க இந்திய தனியார் வாகன உற்பத்தி நிறுவனம் ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் அவை விரைவில் பாராளுமன்ற உறுப்பினர்களின் கைகளுக்குக் கிடைக்கவிருக்கிறது. ●

## புலி உறுப்பினர்கள் கட்டுநாயக்கவழியாக தாய்லாந்து பயணம்!

தாய்லாந்து சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் இலங்கை அரசாங்கத்தின் கடவுச் சீட்டுக்களைப் பெற்று, கட்டுநாயக்கா வழியாக பாங்கொக் சென்றனர்.

வன்னியிலிருந்து செவ்வாய்க்கிழமை மாலை விசேட ஹெலிகொப்டர் மூலம் கட்டுநாயக்காவுக்கு வந்த அன்டன் பாலசிங்கம், தமிழ்ச்செல்வன், கருணா உள்ளிட்ட புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் விசேட விமானம் ஒன்றின் மூலம் தாய்லாந்துக்குப் பயணமானார்கள்.

புலி உறுப்பினர்களின் பயணத்திற்காகக் கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொடுக்கும் ஏற்பாடுகளை இலங்கை அரசு மேற் கொண்டிருந்தது. ●

## பாராளுமன்றப் பகிஷ்கரிப்பு தவறான நேரத்தில் செய்த சரியான செயல்–ஹக்கீம்

முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொண்டு வரும் பாராளுமன்றப் பகிஷ்கரிப்புப் போராட்டம் தவறான நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட சரியான நடவடிக்கை என்று அக் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மறைந்த எம்.எச்.எம்.அஷ்ரப் நினைவாக கண்டியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய ரவூப் ஹக்கீம் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் மேற்கொள்ளும் பாராளுமன்ற பகிஷ்கரிப்பு நடவடிக்கை பொருத்தமானது தான் ஆனால் தற்போதைய நிலையில் அது சரியான நடவடிக்கையல்ல என்று கூறியிருக்கிறார். இது செய்ய வேண்டியதுதான். ஆனால் இப்போது அல்ல என்றும் ஹக்கீம் சொல்லியிருக்கிறார். ●

# முரசம்

## இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையிலான இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை மீண்டும் தாய்லாந்தில் ஆரம்பமாகிறது.

இப் பேச்சுவார்த்தையானது இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் ஏற்பட்டிருக்கும் பாரிய நெருக்கடிக்கு மத்தியில் நிகழ்கிறது.

கடந்த பேச்சுவார்த்தையில் இருந்த உற்சாகமும் ஆர்வமும் தற்போது மங்கி, சந்தேகங்களும் நிச்சயமற்ற நிலைமைகளும் புதிதாகத் தலைதூக்கியுள்ளன. இப் பேச்சுவார்த்தையில் இலங்கை அரசாங்கத் தரப்பில் அதிகளவு உத்தரவாதங்களை வழங்க முடியாத நிலைமை தோன்றியுள்ளது.

கடந்த சுற்றுப் பேச்சுவார்த்தையின் நிறைவின் பின், புலிகள் தரப்ப பேச்சுவார்த்தைக் குழுத் தலைவர் அன்ரன் பாலசிங்கம் நம்பிக்கையுடன் தெரிவித்ததற்கு மாறாக இந்தச் சுற்றுப் பேச்சுவார்த்தையில் இடைக்கால நிர்வாகம் என்பது சாத்தியமற்ற ஒன்றாகியுள்ளது.

கடந்த சுற்றுப் பேச்சுவார்த்தையில் தீர்மானிக்கப்பட்ட கூட்டுச் செயலணி, "உயர்பாதுகாப்பு வலய கூட்டுக் குழு" ஆகியவை தொடர்பான விடயங்களே இத் தடவை ஆராயப்படப்போவதாகத் தெரிகிறது.

இந் நிலையில், நிரந்தரத் தீர்வுக்கான அடிப்படை அரசியல் விடயங்களை ஆராயும் முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுவார்த்தையின் கட்டங்கள், தற்போதைக்குப் பார்வைத் தூரத்தைத் தாண்டியதாகவே உள்ளது. அரசியலில் முஸ்லிம் விவகாரம் என்பது முனைப்புப் பெற்றதாக ஓங்கியுள்ளதுடன் அரசாங்கத்தின் ஸ்திரத்திற்குச் சவாலாகும் வகையில் பாராளுமன்றப் பகிஷ்கரிப்பாக உருவெடுத்துள்ளது.

இந் நிலையிலும் இப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தரப்புப் பிரதிநிதித்துவம் நிராகரிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் ஹக்கீம் அரச தரப்பினராகவே பேச்சுவார்த்தைக்குச் செல்லும் நிலை முஸ்லிம்களை ஏமாற்றத்துக்குள்ளாக்கியுள்ளது.

இத்தகைய நெருக்கடிகளுக்கு மத்தியில் மனந் தளராது நோர்வே மத்தியஸ்தர்களின் விடாமுயற்சியால் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் இந்த இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை சமாதானத் தீர்வை ஈட்டுவதற்கான ஆக்கபூர்வமான அடித்தளம் எதையும் இட்டுச் செல்ல வேண்டும் என்பதே சமாதானப் பிரியர்கள் யாவரினதும் ஆதங்கம் ஆகும்.

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன், ஆசிரியர்.*

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# என்ன செய்யப் போகிறார் ரணில்?

நரன்

பாராளுமன்றத்தில் நெருக்கடி தோன்றிவிட்டது. அடுத்தடுத்த அமர்வுகளில் விடயங்களை எவ்வாறு நகர்த்திச் செல்வது என்பதே கேள்வியாகிவிட்டது.

பாராளுமன்றம் ஒரு வருடத்தைப் பூர்த்தியாக்கும் காலம் - டிசம்பர் 5- நெருங்கி வந்துகொண்டிருக்கிறது.

அதாவது பாராளுமன்றத்தை எவ்வேளையிலும் ஜனாதிபதி கலைத்து விடக்கூடிய அதிகாரம் அவரின் கைகளுக்கு வந்து சேரப் போகிறது.

தற்போதும் கூட ஏதாவது ஒரு காரிய சர்ச்சைக்குரிய விவகாரத்தை ஜனாதிபதி சந்திக்க நேரிட்டால் வலு சுலபமாகப் பாராளுமன்றத்தை இரண்டு மாதங்கள் வரை ஒத்திப்போட்டு இவ் அதிகாரத்தைத் தன் கைவசம் பெற்றுக் கொண்டு அதைக் கையாள அவருக்கு முடியும்.

எனவே விடயம் ஏறக்குறைய கைநழுவிப் போய் விட்ட நிலையில் அடுத்து என்ன செய்வது என்று பேதலித்திருக்கிறது அரசாங்கம்.

அரசாங்கத் தரப்பினர் ஜனாதிபதியை செல்லாக்காசென்று கூறி வந்தாலும், அவரின் கட்சிப் பிரமுகர்களைக் கம்பிகளின் பின்னால் தள்ளி வழக்குகளில் திணறடித்தாலும், அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர்களை வரிசையாகக் கைது செய்து சிறையிலடைத்தாலும் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறித்து உள்ளூர அச்சம் கொண்டே இருந்து வருகின்றன.

ஏனெனில் இந்த ஜனாதிபதி ஆணா, பெண்ணா, சாந்தமானவரா, கோபக்காரரா, என்பதற்ப்பால் ஜனாதிபதி பதவிக்குள்ள அதிகாரங்கள் எவ்வளவு பலம் வாய்ந்தவை என்பது அவர்களுக்குத் தெரியும்.

ஐக்கிய தேசியக் கட்சியியேதான் இத்தகைய நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிப் பதவியை உருவாக்கியதும் கூட.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா தன்னை அசைக்க முடியாத, கேள்விக்கப் பாற்பட்ட அதிகாரம் கொண்டவராக ஆக்குவதற்கு மிக நுட்பமாக அமைத்துக்கொண்ட வலுவான பதவி இது.

இதை நிறுவியவுடன் ஆணைப் பெண்ணாக்கவும், பெண்ணை ஆணாக்கவும் தன்னால் முடியாதேயன்றி மற்றைய எல்லாவற்றையும் தன்னால் செய்ய முடியும் என்று ஜே.ஆர். கூறியிருந்தார்.

இது ஜனாதிபதி பதவியின் அதிகார பலத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டுவதாகும்.

எனவேதான் பாராளுமன்றத்தைக் கைப்பற்றிக் கொண்ட போதும் ஜனாதிபதி என்ற கத்தி தம் கழுத்தின் மேல் தொங்குவதையிட்டு ஆளுங்கட்சியினர் மிகவும் கவலைப்பட்டனர்.

ஒரு பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்டு ஒரு வருட காலத்தின் பின்னர் அதைக் கலைத்து விடக்கூடிய அதிகாரம் ஜனாதிபதியிடம் உள்ளது என்பதை நன்கறிந்த ஐ.தே.கட்சியினர் அவ் ஒரு வருடத்திற்குள்ளேயே அவரின் இவ் அதிகாரம் உட்பட மற்றும் பல முக்கியமான அதிகாரங்களையும் பறித்துக் கொள்வதற்கு விளைந்தனர்.

ஆனாலும், இவ் அரசாங்கம் இவ் விடயத்தை முன்னெடுப்பதில் சில தவறுகளை விட்டுவிட்டது.

ஒன்று, இத்தகைய முன்னெடுப்பைக் காலம் பிந்திக் கடைசி நேரத்தில்தான் மேற்கொள்ள விளைந்தனர்.

அடுத்தது, சரியாக ஆராயாமல், பலதரப்பட்ட விடயங்களையும் ஒரே கூடைக்குள் போட்டு ஒரே தடவையில் முன்வைத்தது.

இதன் மூலம் ஒன்று நிராகரிக்கப்படும் இடத்தில் ஏனையவையும் நிராகரிப்புக்குள்ளாகிய நிலையே ஏற்பட்டது.

அத்தடன் இவ்வாறு முன்வைக்கப்பட்ட விடயங்களும் கூட செம்மையான ஆய்வுக்குட்படுத்தப்பட்டு, சரியான வகையில் முன்வைக்கப்படாமல் பல குழந்தைத்தனமான பிழைகளுடன் அவசர அவசரமாக முன்வைக்கப்பட்டது.

இதில் அரசாங்கத்தின் சில இயலாமைகளும், ஏனைய கட்சிகளை விருத்தி செய்ய வேண்டிய இக்கட்டுகளும் கூடப் பல தவறுகளுக்கு வழிகோலியிருந்தன.

குறிப்பாகக் கட்சிமாறி, வாக்களிக்கும் உரிமையைக் கோரியிருந்த விடயத்தில் பரிகசிக்கத் தக்க தவறை இழைத்திருந்தனர்.

அதாவது ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்கும் இப் பிரேரணைக்கு மட்டும் கட்சி மாறி வாக்களிக்கலாம் என்று மட்டுப்படுத்திய ஒரு சலுகையைக் கோருவது, இத்தகைய ஒரு அதி முக்கியத்துவம் வாய்ந்த, ஒரு அரசியல் சட்டத் திருத்தத்தில் சாத்தியமானது அல்ல என்பதைக்கூட அவர்கள் புரிந்திருக்கவில்லை.

தமக்கு அவசியமான ஒன்றுக்கு மட்டும் கட்சி மாறி வாக்களிக்கலாம். ஏனையவற்றிற்கு முடியாது என்று கூறுவது பொதுப் படையாகவே நியாயத்துக்குப் புறம்பானதாக சகலருக்கும் புலப்படும் ஒரு விடயம்.

ஆனால், இவர்கள் ஏன் இவ்வாறு செய்ய வேண்டி வந்தது என்பதற்குக் காரணமும் உண்டு.

அதாவது சிறுபான்மைக் கட்சிகள், கட்சி மாறி வாக்களிக்கும் சட்டமூலத்திற்கு ஆதரவானவை அல்ல.அவற்றின் உறுப்பினர்களை எந்நேரத்திலும் பலம் வாய்ந்த பெரிய கட்சிகள் மாற்றி எடுத்துவிடக்கூடிய அபாயங்கருதியே அவர்கள் இதற்கு எதிர்ப்பானவர்களாக உள்ளனர்.

எனவே அவர்களின் ஆதரவைப் பெறுவதற்காகவே இவ் யாப்புத் திருத்தத்திற்கு மட்டும் கட்சிமாறி வாக்களிக்கும் உரிமையைக் கோரினர்.

அத்தோடு இப்படி ஒரு முறை நீதிமன்றம் அங்கீகரித்துவிட்டால் தமக்குத் தேவைப்படும் எந்தச் சட்டமூலம் முன்வைக்கப்படும் போதும் இவ் உதாரணத்தைக் காட்டி மறுபடி அவற்றுக்கும் கட்சி மாறி வாக்களிக்கும் உரிமையைக் கோரமுடியும் என்பது அவர்களின் திட்டமாகும்.

ஆனாலும், இதன் நியாயமற்ற தன்மைகளிலே உச்ச நீதிமன்றம் இதை முற்றுமுழுதாகவே சட்டவிரோதமானதெனத் தீர்ப்பளித்து விட்டது.

இவ்வாறான பல காரணங்களால் ஜனாதிபதியின் அதிகாரச் சிறகுகளை வெட்டும் இந்த முயற்சி படுதோல்வியை அடைந்தது.

இத் தோல்விக்குப் பின்னால் மற்றொரு பாரதூரமான அரசியல் விவகாரமும் கேள்விக்கிடமாக்கப்பட்டுள்ளது.

அதாவது புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையில் ஒரு அதி முக்கிய விவகாரமாகக் கருதப்பட்ட இடைக்கால நிர்வாகசபை என்பது கைவிடப்பட வேண்டியதாகி விட்டது.

இடைக்கால நிர்வாக சபையை ஸ்தாபிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதியிடமிருந்து பிரதமர் பெற்றுக் கொள்வது சாத்தியமற்றதாகி விட்டது.

எனவே சமாதானப் பேச்சுவார்த்தையின் போக்கில் மாற்று வழியொன்றை அவசரமாகத் தேடி, புலிகளை இத் தண்டவாளத்திலிருந்து விலகாது இருக்க ஏற்பாடு செய்ய வேண்டியது அரசாங்கத்திற்கு அவசியமானதாகியுள்ளது.

எனவேதான் முன்னர் முதலாம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் பேசப்பட்ட இணைந்த செயலணி என்பதைப் பற்றியும் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான இருதரப்பு கமிட்டி ஒன்றை அமைப்பது பற்றியுமே அடுத்து வரும் இரண்டாம் கட்டப் பேச்சுவார்தையில் ஆராயவுள்ளனர்.

இடைக்கால நிர்வாக சபை விவகாரம் இப் பேச்சுவார்த்தையில் கைவிடப்பட்டுள்ளது.

இடைக்கால நிர்வாக சபை வழங்காமலே புலிகளைத் திருப்திப்படுத்தக்கூடிய விடயங்களை மாற்று ஏற்பாடுகளுக்கூடாக வழங்குவதன் மூலம் புலிகளை மேலும் சிறிது காலம் திருப்திப்படுத்தி வைத்துக் கொண்டு அரசியல் நிலைமையை சரிப்படுத்த முற்படலாம் என்பதுதான் இன்றைய அரசாங்கத்தின் உடனடி நோக்கமாக உள்ளது.

இதேவேளை அரசாங்கம் ஜனாதிபதியின் இராணுவ அதிகாரங்களை மட்டுப்படுத்தும் மற்றொரு பிரேரணையைக் கொண்டுவரப் போவதாக அறிவித்துள்ளது.

இது இராணுவத் தளபதியின் பதவி நீடிப்புக் குறித்து எழுந்த சர்ச்சையாக அரசாங்கத் தரப்பால் வெளிக்காட்டப்பட்டாலும் உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்துப் புலிகளுடன் காணப்படும் இணக்கப்பாடுகளுக்கு ஜனாதிபதியின் இராணுவ அதிகாரங்கள் குறுக்கே நிற்காதிருப்பதை உத்தரவாதம் செய்யும் ஒரு முயற்சி ஆகும்.

உண்மையில் முன்னைய அரசியல் சட்டத் திருத்த முயற்சி வெற்றியளித்திருந்தால், அதன் மறு தினமே இத்தகைய இராணுவ அதிகாரங்களைப் பறிக்கும் அடுத்த பிரேரணையை நிறை வேற்றிக் கொள்வதே அரசின் நோக்கமாக இருந்திருக்கிறது.

ஆனால், அது தோல்வியுற்றதால் காலந் தாழ்த்தி வேறு ஒரு வகையான முயற்சியாக இவ் இராணுவ அதிகாரம் பற்றிய விவகாரம் எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அரசியல் யாப்புத் திருத்த முயற்சியின் தோல்வி ஜனாதிபதியின் பக்கத்தை வலுப்படுத்தியும் அரசாங்கத்தைச் சோர்வில் ஆழ்த்தியும் உள்ளது.

இதனை முன்வைத்த அமைச்சர் பீரிஸ் தொலைக்காட்சிக்கு முகம் கொடுக்க முடியாதவர் போல் தடுமாற்றத்துடன் பாராளுமன்றத்தைக் கலைப்பதுதான் அரசாங்கத்தின் அடுத்த எண்ணம் என்று கூறினார்.

அரசாங்கத்தின் பலதரப்புகளிலிருந்தும் தேர்தலை முகம் கொடுப்பதுதான் இனி உள்ள வழி என்று கருத்துக்கள் கூறப்பட்டன.

ஆனால், அவ் வழியும் சாத்தியமானதா என்பது கேள்விக்குரியதாகிவிட்டது.

ஏனெனில், அரசாங்கத்தால் பாராளுமன்றத்தைக் கலைக்கும் படி ஜனாதிபதியிடம் சிபாரிசு செய்ய முடியுமேயன்றி அதைக் கலைப்பதும் விடுவதும் ஜனாதிபதியின் அதிகாரத்துக்குரியது.

இதனால், அவரால் இவ்வரசாங்கத்தை நீக்கிவிட்டுப் புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும்படி யாரையும் கோர முடியும்.

பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்து விடுவார் என்ற அச்சமூட்டியே அரசாங்கம் தனது யாப்புத் திருத்தத்திற்கு ஆதரவு திரட்டி வந்தது.

தேர்தல் வந்தால், தமக்கு ஆசனம் கிடைக்காது போய்விடுமோ என்ற அச்சத்தில் பாராளுமன்றத்தில் நீடித்திருக்க விரும்பியவர்களையே இப் பிரேரணை மூலம் கவர்ந்திழுக்க ஆளுங்கட்சியினர் முயன்றனர்.

ஆனால், இப்போது அவர்களே பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டும் என்று ஒரு பிரேரணையை முன்வைக்க விளைந்தால் இத்தகைய பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவியைக் காத்துக்கொள்ள ஜனாதிபதி தரப்பில் புதிய அரசாங்கம் அமைப்பதற்கு ஆதரவு அளிக்க முன்வரக் கூடும்.

அவ்வாறான மாற்றரசாங்கம் ஒன்றை அமைப்பது பற்றிய முயற்சியில் தற்போது பொதுஜன ஐக்கிய முன்னணியினர் மும்முரமாக இறங்கியுள்ளனர்.

இந் நிலைமை கருதி தற்போதைக்கு அரசாங்கத்தைக் கலைக்காது சிறிது காலம் சேர்ந்து இயங்குவதற்கு ஆளுங்கட்சியினர் ஆர்வம் காட்டுகின்றனர்.

ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தை கலைப்பதை விட அதை ஒரு இயலாமை நிலையில் நீடிக்கவிட்டு, எவற்றையும் செயற்படுத்த முடியாதவர்களாக்கி குறிப்பாக புலிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாதவர்களாக்கி மக்களின் அதிருப்திக்குள்ளாகிய நிலையில் அவர்களைத் தேர்தலுக்குச் செல்லவைப்பதே உசிதமானதாகக் கருதுகிறார்.

அதனால், அவர் தானாகவே பாராளுமன்றத்தை உடனடியாகக் கலைப்பார் என எதிர்பார்க்க முடியாது.

எனவே அரசாங்கமும் பாராளுமன்றத்தைக் கலைக்க முன்வராத நிலையில் பாரிய தொரு தேக்க நிலைக்குள் அரசியல் நிலைவரம் செல்வது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இந் நிலையில் உருவாகக் கூடிய பல புதிய முரண்பாடுகளைத் தீர்ப்பதில் அரசாங்கம் சிக்கித் திணற நேரலாம்.

தற்போது அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் பிரதான கட்சியான முஸ்லிம் காங்கிரஸின் பெரும்பாலான உறுப்பினர்கள் முன்நிறுத்தும் இக் கட்டான கோரிக்கைகளும் அவர்களின் பாராளுமன்றப் பகிஷ்கரிப்பு புதிய தலையிடியாகத் தலைதூக்கி உள்ளது.

இதுபோல் மேல் கொத்மலைத் திட்டம் தொடர்பான விடயங்கள் முன்னிலைப்படும் போது மலையகத்திலும் குறிப்பாக இ.தொ.கா. விலும் எதிர்ப்புணர்வுகள் வலுக்கலாம்.

எப்படிச் சமாளிக்கப் போகிறார் ரணில் என்பதுதான் அரசியல் அவதானிகளின் அக்கறைக்குரிய விடயமாகும். ■

# இரண்டாவது சுற்றுப் பேச்சில் முஸ்லிம்களின் நிலை

இரண்டாவது கட்ட சமாதானப் பேச்சுவார்த்தை, தாய்லாந்தில் ஆரம்பமாகிவிட்டது. கடந்த முதற் சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது வழங்கப்பட்ட எந்த உத்தரவாதத்தையும் மீள வலியுறுத்த முடியாத நிலையிலும், குறிப்பாக முஸ்லிம்கள் தொடர்பில் தீர்க்கமான எந்தவொரு கருத்தையும் அரசு தரப்பினரால் வெளிப்படுத்த முடியாத நிலையிலுமே இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை தொடங்கியிருக்கிறது.



கடந்த வாரம் நோர்வே பிரதி வெளிவிவாகர அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான ஏற்பாட்டாளர்கள் குழு வன்னி சென்று புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்திருந்தது.

இச் சந்திப்பின் போது முஸ்லிம்கள் தொடர்பான விவகாரமே கூடுதல் நேரம் ஆராயப்பட்டதாக அறிக்கைகள் தெரிவித்திருந்தன. எவ்வாறெனினும் இந்தத் தடவைப் பேச்சுவார்த்தையிலும், அரச தரப்புப் பேச்சுவார்த்தைக் குழுவிலுள்ள முஸ்லிம் உறுப்பினரான அமைச்சர் றவூப் ஹக்கீம், முஸ்லிம்களின் பிரதிநிதியாக இல்லாமல் அரசாங்கப் பிரதிநிதியாகவே தாய்லாந்து சென்றிருக்கிறார்.

> றவூப் ஹக்கீமை முஸ்லிம்களின் பிரதிநிதியாக ஏற்க முடியாது என்று பகிரங்கமாகக் கருத்துத் தெரிவிக்கும் அளவுக்குப் புலிகள் இது விடயத்தில் வெறுப்புக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் இந்த நிலைமை ஏற்படுவதற்கு அல்லது றவூப் ஹக்கீமின் அரசியல் பலம் குன்றிப் போவதற்கு அவரது கட்சிக்குள் ஏற்பட்ட உட்பூசல்களால் அவர் அரசியல் ரீதியில் பலமிழந்து காணப்படுவதுதான் ஒரே காரணம் எனக் கொள்ள முடியாது.

கடந்த பேச்சுவார்த்தைகளின் போது ஹக்கீம் அரச தரப்புப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டதையிட்டு முஸ்லிம்கள் தரப்பில் பலத்த அதிருப்தி காணப்பட்டது. ஆனால், இது முதற் சுற்றுப் பேச்சுவார்த்தை, முக்கியமான விடயங்கள் இதில் ஆராயப்படப்போவதில்லை. அடுத்த தடவை ஹக்கீம் முஸ்லிம்களை நேரடியாகப் பிரதிநிதித்துவம் செய்வார் என்று கூறப்பட்டது.

இந்த ஒரு மாத காலத்திற்குள் முஸ்லிம்களின் பிரதிநிதியாக இல்லாவிட்டாலும் றவூப் ஹக்கீம் அரச பிரதிநிதியாகவேனும் பேச்சுவார்த்தைக் குழுவில் இடம் பெறுவாரா? என்பது குறித்துச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த ஏப்ரலில் ஹக்கீம்-பிரபா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட வேளையில் புலிகள் தரப்புக்கும் றவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸிற்கும் இடையில் இருந்த நல்லுறவு இந்த 6 மாத காலத்திற்குள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கில் முஸ்லிம்கள் மீது புலிகளால் மேற்கொள்ளப்பட்ட விரும்பத் தகாத நடவடிக்கைகள், அவற்றுக்கு ஹக்கீம் பதிலளிக்கும் முகமாகச் செய்த சில காரியங்கள் உள்ளிட்ட பல்வேறு அடிப்படைகளால் இந்த உறவு சிதைவடைந்திருக்கிறது.

றவூப் ஹக்கீமை முஸ்லிம்களின் பிரதிநிதியாக ஏற்க முடியாது என்று பகிரங்கமாகக் கருத்துத் தெரிவிக்கும் அளவுக்குப் புலிகள் இது விடயத்தில் வெறுப்புக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில் இந்த நிலைமை ஏற்படுவதற்கு அல்லது றவூப் ஹக்கீமின் அரசியல் பலம் குன்றிப் போவதற்கு, அவரது கட்சிக்குள் ஏற்பட்ட உட்பூசல்களால் அவர் அரசியல் ரீதியில் பலமிழந்து காணப்படுவதுதான் ஒரே காரணம் எனக் கொள்ள முடியாது.

கிழக்கில் முஸ்லிம்கள் தொடர்பாக ஏற்பட்ட பல்வேறு பிரச்சனைகளின் போது ஹக்கீம் அவற்றைக் கையாண்ட விதம் புலிகளை ஆத்திரமடையச் செய்திருக்கிறது என்பது பெரும்பாலான விமர்சகர்களின் கருத்து.

அதாவது கிழக்கில், முஸ்லிம்கள் பாதிக்கப்படும் போது ஹக்கீம் புலிகளை எதிர்த்து நேரடியாகக் கருத்து வெளியிட்ட அல்லது சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் முகமாகச் செய்த சில காரியங்களே புலிகளைச் சினங் கொள்ளச் செய்திருக்கலாம்.

பாராளுமன்ற அரசியலிலும், கட்சிக்குள்ளும் ஹக்கீம் சில நெருக்கடிகளைச் சந்திக்கிறார். புலிகள் றவூப் ஹக்கீம் மீது எந்தக் காரணத்திற்காக ஆத்திரமடைந்திருக்கிறார்களோ அதற்கு நேரெதிரான காரணத்தின் அடிப்படையில் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் றவூப் ஹக்கீமுடன் முரண்பட்டு நிற்கின்றனர்.

அதாவது கிழக்கு மாகாணச் சம்பவங்களில் புலிகளின் செயற்பாடுகளை அம்பலப்படுத்தும் விதமாக ஹக்கீம் கருத்துத் தெரிவித்தார் என்ற அடிப்படையிலேயே புலிகளுக்கும் றவூப் ஹக்கீமுக்கும் இடையிலான நல்லுறவு பாதிக்கப்பட்டது.



மறுபக்கம் கிழக்கு முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பிரச்சனைகளின் போது அவர்களது உரிமைகளை நிலைநாட்ட றவூப் ஹக்கீம் போதியளவு குரல் கொடுக்கவில்லை என்ற காரணத்தின் அடிப்படையில் அவரது கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளின் போது இலங்கையில் உள்ள மூவினங்களையும் சேர்ந்தவர்கள், தத்தமது இனங்களின் சார்பில் தனியான பிரதிநிதிகள் பங்குபற்ற வேண்டும் என்று குரல் கொடுக்கும் பொதுவான போக்கு காணப்படுகின்றது.

புலிகள் பேச்சுவார்த்தைக்குத் தமது சொந்தப் பிரதிநிதிகளையே அனுப்பி இருக்கிறார்கள். இதனைப் புரிந்துகொள்ள முடியும். அரசாங்கம் என்பது எங்களுடையது அல்ல. அது சிங்களவர்களுடையது என்ற அடிப்படையில் இந்த விசயத்தைப் புலிகள் நோக்குகிறார்கள். யுத்தத்தின் அடிப்படையான காரணியும் இதுதான்.

முஸ்லிம்களும், தமது இனத்தின் சார்பில் தங்களை மட்டுமே பிரதிநிதித்துவம் செய்யும் தனியான தமிழர்களுக்கெனப் புலிகள் தனியான பிரதிநிதிகள். முஸ்லிம்களுக்கும் தனியான பிரதிநிதிகள் வேண்டும். சிங்களவர்களும் தனியான பிரதிநிதித்துவத்தைக் கேட்கிறார்கள். அப்படியாயின் தாய்லாந்துப் பேச்சுக்களில் இலங்கை அரசாங்கம் என்ற நிர்வாகக் கட்டமைப்பை யார் பிரதிநிதித்துவம் செய்கிறார்கள்?

**எம்.பி.எம்.பர்ஸான்**

தர்க்க ரீதியில் இத்தகைய ஒரு கேள்வியை எழுப்பினாலும் கூட, யதார்த்தத்தில் இம் மூன்று சமூகங்களில் தமிழர்களும், முஸ்லிம்களும் தங்களுக்கான பிரதிநிதிகளைப் பேச்சுவார்த் தையில் பங்கு கொள்ளச் செய்ய வேண்டிய கட்டாயம் இருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

முஸ்லிம்களுக்கும் அரசியல் ரீதியிலான பிரச்சனைகள் உண்டு என்பதை ஏனைய இரண்டு தரப்பினரும் ஏற்றுக் கொள்ளும் நிலையில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதை ஆட்சேபிப்பதற்கான காரணம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால், இந்தத் தடவைப் பேச்சுவார்த்தையிலும் முஸ்லிம்கள் சார்பில் எவரும் கலந்து கொள்ள மாட்டார்கள் என்பது நிச்சயமாகி உள்ளது.

இனி வரும் காலங்களிலும் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தையில் பங்கு கொள்ள வேண்டுமெனக் கூறுகிறார்கள்.

மறுபுறம் சிங்கள அடிப்படைவாதிகளும் தாய்லாந்துப் பேச்சுக்களின் போது சிங்களவர்கள் சார்பாகவும் ஒரு பிரதிநிதியை அனுப்ப வேண்டும் என்று குரல் கொடுக்கிறார்கள்.

"ரணில் விக்கிரமசிங்க எமது பிரதமர் அல்ல" என்று அன்டன் பாலசிங்கம் கூறியபோது துள்ளிக் குதித்த அதே சிங்களவர்கள் இன்று தாய்லாந்துப் பேச்சுக்களுக்குச் சிங்களவர் சார்பாக ஒரு பிரதிநிதியை அனுப்ப வேண்டும் என்று கூறுவதன் மூலம் ரணில் விக்கிரமசிங்க தங்களுக்கும் பிரதமர் அல்ல என்று மறைமுகமாக ஒப்புக் கொள்வது போல் இருக்கிறது.

இது பெரும்பாலும் சாத்தியமாக மாட்டாது என்றே தெரிகிறது. அடுத்து முக்கியமான விடயம் பேச்சுவார்த்தையில் பிரதான இரண்டு பங்குதாரர்களான புலிகளும், அரசாங்கத் தரப்பினரும் மிகுந்த விருப்பமின்மைக்கு மத்தியில் ஏனோ தானோ என்று முஸ்லிம் பிரதிநிதி ஒருவருக்குச் சந்தர்ப்பம் அளிக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம்.

அத்தகைய ஒரு பிரதிநிதியால் பேச்சுவார்த்தைக்குப் போய் தமது சமூகத்தின் சார்பில் உறுதியாகக் குரல் கொடுக்க முடியுமா என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும்.

றவூப் ஹக்கீம் தாய்லாந்துப் பேச்சுவார்த்தைக்குச் செல்வது தொடர்பில் தமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லையெனக் கூறியிருக்கும் அதாவுல்லா "எமது பிரச்சனை தாய்லாந்தில் இல்லை; இங்குதான் இருக்கிறது" என்கிறார்.

இது ஒரு மிகத் தெளிவான மொக்குத் தனம். முஸ்லிம்களின் தலைவர்கள் அல்லது பிரதிநிதிகள் எனக் கூறிக்கொள்ளும் அதாவுல்லா போன்றவர்கள் இந்தளவு "அறிவு ஜீவிகளாக" இருக்கும் போது முஸ்லிம் சமூகத்தின் பிரச்சனைகளுக்கு இந்த ஜென்மத்தில் தீர்வு காண முடியும் என்பது சந்தேகமே!

"முஸ்லிம்களின் பிரச்சனை தாய்லாந்தில் இல்லை" என்கிறார் அதாவுல்லா. அவரது கூற்றுப்படி பார்த்தால் புலிகளின் பிரச்சனையும் தாய்லாந்தில் இல்லை. அரசாங்கத்திற்கும் தாய்லாந்தோடு எவ்வித பிரச்சனையும் இல்லை. அப்படியிருக்க அங்கு போய் ஏன் பேச வேண்டும்?

இம்முறை சமாதான முயற்சிகளில் முஸ்லிம்கள் தொடர்பான விடயம் புலிகளுக்கும் தென்னிலங்கையின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளுக்கும் தத்தமது இராஜ தந்திரங்களைப் பரீட் சித்துப் பார்க்கும் ஒரு அம்சமாக மாறி விட்டது.

சிறுபான்மைச் சமூகத்தினரின் காவலன் என ஒரு காலத்தில் றவூப் ஹக்கீம், அதாவுல்லா போன்றோரினாலேயே வர்ணிக்கப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து ஒரு உறுதியான உத்தரவாதத்தைப் பெற முஸ்லிம் தலைவர்களால் இன்னமுமே முடியாமல் போயுள்ளது.

கல்முனை தனிமாவட்டக் கோரிக்கையைத் திட்டவட்டமாக நிராகரித்தது பொதுஜன ஐக்கிய முன்னணி. கடந்த அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு இந்த கல்முனை தனி மாவட்டக் கோரிக்கை ஒரு முக்கிய காரணியாக இருந்தது.

இன்று எதிர்க்கட்சியில் இருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி, கல்முனை மாவட்டத்தையும் தாண்டி தென்கிழக்கு அலகுக் கோரிக்கைக்குத் தாங்கள் இணங்குவதாகக் கூறி வருகிறது.

நாளை எதிர்க்கட்சிக்கு வந்தால் ஒருவேளை ரணில் விக்கிரமசிங்க கிழக்கு மாகாணம் முழுவதையும் முஸ்லிம்களுக்குக் கொடுக்கத் தயார் என்று கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ●

# NAVEEN CERAMIC

தரமான
☛ Wall Tiles, ☛ Floor Tiles
மற்றும் **குளியலறை உபகரணங்களை**
*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து
நேரடியாக இறக்குமதி செய்து
விநியோகிப்பவர்கள்



**Naveen Ceramic** No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

எமது புதிய காட்சியறை
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.



## விதுஜா ஏசியன் சொப்

**VIDUJA ASIAN SHOP**

WAAG HAUS PASSGE-8
3011 BERN (1 STOCK)
SWISS.
T.P.:- 031-3113510, 031-9928267, 079-2158405

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் சிறுவர், சிறுமிகள், பெரியவர்களுக்கான வண்ண வண்ண ஆடைகள், தொலைபேசி அட்டைகள், பழைய புதிய வீடியோ பிரதிகள் வாடகை சகல விதமான புகைப் படங்கள் எடுக்கவும் இன்றே நாடுங்கள்.
**விதுஜா ஏசியன் சொப்**


# விளம்பரப் பகுதி


## SAMARASINGHE OPTICIANS

*For Best Quality Spectacles & Contact lenses*

**Samarasinghe Opticians**
85, Olcott Mawatha, Colombo-11.
TP: 421973, 338732 E-mail: sight@eureka.lk
**Branches: Kandy, Kegalle, Nuwaraeliya, Gampola & Hatton.**



## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**
142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக
**Tel: 074-519754**



## தெய்வீகசக்தி

MEDITATION YOGA POWER INTERNATIONAL TRADITIONAL HOMOEOPATHY MEDICAL RESEARCH & SERVICE



துன்பங்கள், தோல்விகள், காதல், வேறு காரியத் தடைகள், வாழ்க்கைப் பிரச்சனைகளைக் கண்டு கலங்காதீர்கள். உங்களால் முடியாது என்றால் முடியாது என்பது முடிந்த முடிவே அல்ல. நிச்சயம் முடியும். முனிவர்கள் மஹா ரிஷிகள் அருளிய தெய்வீக, மந்திர, யந்திர, வசியங்கள் வைத்தியங்கள் செய்து நம் முன்னோர்கள் வெற்றி பெற்றார்கள். நம்மவர்களும் இரகசியமாகச் செய்து விருப்பங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். பரம்பரையாகச் செய்து வரும் பழக்கத்தினால் காதல் நிறைவேற, காதலர்கள் ஒன்று சேர, காதல் திருமணம் சம்பந்தப்பட்டவர்களின் பூரண சம்மதங்களுடன் நடைபெற, பிரிந்தவர்கள், வெறுப்பவர்கள்,வேண்டியவர்கள் எங்கிருந்தாலும் வந்து உறவாக, உதவி பெறத் தீய சக்திகளினால் ஏற்பட்ட தீராத உடல் நோய், மனநோய் பிரச்சனைகளைத் தீர்த்து சகல காரியங்களிலும் வெற்றி பெற, வேறு நன்மையான காரியங்களுக்கும் நாடி வந்து தெய்வீக மந்திர, யந்திர, வசியங்கள் செய்து சந்தோஷமாக வாழ்கிறார்கள். வரமுடியாதவர்கள், கடல் கடந்த வெளிநாட்டவர்கள் கடுகதி பதிவுத் தபால் மூலமாகவும் அவசர தேவைகளுக்குத் தொலை தொடர்புச் சாதனங்கள் மூலமாகவும், தொடர்பு கொண்டு தெய்வீக சக்தி வாய்ந்த பரிகாரப் பொருட்களை விஷேட கடுகதித் தபாலில் மூன்று நாட்களுக்குள் பெற்றும் (Cosmic Vibration) தியான யோக தெய்வீக சக்தி அலைகள் மூலமாகவும் கோரிக்கைகளை உடன் நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

ஹோமியோபதி- அக்குப்பங்சர், சித்த ஆயுர்வேத, மாந்திரீக மருத்துவ மனோதத்துவ தெய்வீக கொஸ்மிக் யோக சிகிச்சையாளர்
"யோகி டாக்டர்"
**YOGI- DR.T.MYLVAGANAM**
R.H.M.D.- D. Acu- (இலங்கை) P.I.S.M (இந்தியா)
Registered By Ministry of Health. & Ministry of Hindu Religious & Cultural Affairs, Charitable Services HMP 061- HAI 4/ BT/ 176

குருசக்தி நிலையம், இராமகிருஷ்ணபுரம், பிள்ளையார் கோயில் றோட், கல்லடி, மட்டக்களப்பு(PO) (இலங்கை) (கல்லடி மணிக்கூண்டுக் கோபுரத்திற்கு முன்பாக)
ரெலிபோன் பக்ஸ்- உள்நாடு 065-24872 காலை 9 இலிருந்து இரவு 9 மணி வரை
ரெலிபோன் பக்ஸ்- வெளிநாடு 0094 65 24872 காலை 9 இலிருந்து இரவு 11 மணி வரை
ஈ மெயில் (E-Mail) Yogidrmyl@ sltnet.lk
நோய், பிரச்சனைகள் தீர்ந்து விருப்பங்கள் நிறைவேறிப் புத்தொழி பெற்று, புதுவாழ்வு மலரட்டும். மேலதிக விபரங்கள் பெறத் தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்.

**GURUSACKTHY CENTRE
RAMAKRISHNA PURAM, PILLAYAR KOVIL ROAD
KALLADY- BATTICALOA (PO) (SRI LANKA).**



## நீங்கள் கண்ணாடி அணிபவரானால்

ஏந்தரக லென்ஸ் தேவையென உணர வேண்டும்!

சோலா ரீஸ்டடாப்
SOLA
FLAT TOP



சாதாரணமாகப் பாவனையிலுள்ள பைபோகல் லென்ஸ்

சோலா பிளட் டொப்
21 ம் நூற்றாண்டுக்கு மிகச் சௌகரியமான லென்ஸ்

நன்மைகள்
* இடது வலது கண்களுக்கென விசேட லென்ஸ் கொண்டது
* பாரமற்றது *உடையாதது * மிகத் தெளிவானது.

ரூ 1000/-ல் இருந்து

**ரே பேன் ஒப்டீஷியன்**
(பிரைவட்) லிமிட்டட்
81, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-11.
தொலைபேசி-327003

மருத்துவ சிபாரிசுக்கமையவோ, நமது கணனி மூலமோ பார்வையைப் பரிசீலித்து அதே தினத்தில் கண்ணாடியைப் பெறுங்கள்.



## இலங்கையில் அற்புத மலையாள மாந்திரீக சக்தி



மலையாள மாந்திரீக சித்தர் பேராசிரியர்.
டாக்டர் P.K சாமி (J.D.G.AN) JP
அவர்களைச் சந்தியுங்கள்.
1. பிரிந்தவர் ஒன்று சேர.
2. காதல் கைகூட.
3. கணவன் மனைவி ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருக்க.
4. காதலன் காதலி தேடிவர.
5. எதிரியின் தொல்லை இன்றி நிம்மதி பெற.
6. குபேர வாழ்வு பெற. 7. குழந்தைப் பாக்கியம் பெற.
8. திருமணம் தோஷ நிவர்த்தி பெற. 9. வலம்புரி மகாலட்சுமி கடாட்சம் பெற. 10. ஓடிப்போனவர் தேடிவர. 11. வெளிநாட்டுப் பிரயாணம் தடை நீங்க. 12. தீராத நோய் தீர. 13. தெய்வீக சக்தியால் ஔடதம் மூலம் கூந்தல் வளர. 14. கடன் தொல்லை சிறுக சிறுக குறைய. 15. கையில் பணம் சேர. 16. அதிஷ்ட வீடு கட்ட. 17. உங்கள் விதியின் பலன எங்கு ஒளிந்து கொண்டிருக்கிறது. 18. இது மயங்க வைக்கும் மாத்திரை அல்ல மாயாஜால வித்தையும் அல்ல.

உங்கள் குறைகளை திட்டவட்டமாக, தெளிவாக மாந்திரீகத் துறையில் 41 வருடங்களாகத் தனக்கென ஒரு பணியை அமைத்துத் தன்னடக்கத்துடன் சேவை புரியும். P.K. சாமி ஐயா அவர்களைக் கண்டு உங்கள் குறைகளை நீக்கி வாழ்வில் வெற்றி பெறுங்கள். அது மட்டுமா வாழ்வில் தோல்வியில் துவண்டு ஐயாவின் ஆசீர்வாதம் பெற்றபின் வெற்றி பெற்றவர்களின் திட்டவட்டமான, தெளிவான, நூற்றுக்கு நூறு உண்மையென உங்களால் உறுதி செய்யப்பட்ட ஜாதக விவரணம். சாத்திரம் இது தர்மத்திற்கு இனையானது. தர்மத்தை மிஞ்சிய விதி இலை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம். மலையாளத்தின் ஜோதிட வல்லுனர் பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்களே! தெட்டத் தெளிவான ஜோதிடத்திற்கு காண்ட அடிப்படையில் தெரிந்து கொள்ள வேண்டுமா. என்னைச் சந்தியுங்கள்

*உலக மாந்திரீக சக்கரவர்த்தி.*

**Pro. Dr. P.K Samy ( J.D.G.ANL) J.P.**
Sri. Durgadevi. mantharika Utchada Peedam, 162. Kotahena Street. Colombo-13.
T.P. 466271, 466571, 342463, 466620, 431137, 466820.
Fax: 0094-1-344831. E.mail: drpk samy.@sttnet.lk.

பார்வை நேரம் கொழும்பில் காலை 8.00-5.00 மணிவரை வெளிநாட்டவர் காலை 6.00 இரவு 9.00 மணிவரை மட்டுமே. (இலங்கை நேரப்படி)

33, Daily Fair Complex, Kandy Road, Nuwara - Eliya.
(நுவரெலியாவில் மட்டுமே கிளை உண்டு.)
T.P. 052 -22508, 35097, 23093, 23336, 23570 Fax: 00945-235097
w.w.w. imexpo lanka . com. drpk samy.




## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய தங்கப்பதக்க நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**
50, THEATRE ROAD,
NINTHAVUR-21,
SRI LANKA.
☎ 067-50349


## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில்:- 28 - 08 - 1946



இறைவன் அடியில்:- 05 - 08 - 2002

### அமரர் திரு. சின்னத்தம்பி நடேசபிள்ளை

கச்சாவெளி – பளை

**எங்கள் அன்பின் உருவமே! அருமைத் தெய்வமே!
எங்கள் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஒளியூட்டிய அப்பாவே!
எம் உள்ளம் உள்ளவரை மறையாது உங்கள் நினைவுகள்!
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.**

05.08.2002 அன்று கொழும்பில் அகால மரணமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டு எம்மை ஆறுதல் படுத்தியவர்களுக்கும், தொலைபேசி மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலிருந்தும் அனுதாபத்தைத் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அத்துடன் 01.11.2002 வெள்ளிக்கிழமை இந்தியாவில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்
மனைவி: சரஸ்வதிதேவி நடேசபிள்ளை (இந்தியா)
பிள்ளைகள்: நந்தினி (இத்தாலி), சியாமளா (சுவிஸ்), நந்தரூபன் (ஜேர்மனி), காந்தரூபன் (லண்டன்), நளினி (இந்தியா) மற்றும் சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்: ந. காந்தரூபன் (மகன்),லண்டன், தொ.பே. 0044 7786270290
ந. சரஸ்வதிதேவி (மனைவி), இந்தியா தொ.பே. 0091 444512093


## சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் திருமணப் பதிவு செய்து, திருமணம் செய்ய வருவோருக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவரவர் வசதிக்கு ஏற்ப செய்து தரப்படும். இலவச விமான நிலைய வாகன வசதி, சலுகைக் கட்டணத்தில் வாடகைக் கார்.
விபரத்திற்கு-
**LINGAM WEDDING SERVICE**
10, Anson Road, # 15-14 International Plaza, Singapore-079903
எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத் தொலைபேசி
அப்பு: 0065-975 14 941


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 - 08 - 1946



உதிர்வு 23 - 10 - 2000

### அமரர் திரு அப்பாக்குட்டி காசிலிங்கம்

**திதி: 01.11.2002**

அன்பின் பிறப்பிடமாய்
பண்பின் இருப்பிடமாய்
நேசமுடன் எமைக் காத்த
பாசமிகு தெய்வமே
கண்ணீரில் நாம் தவிக்க
விண்ணுலகம் சென்றீரோ?
ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது நம் துயரம்
நீங்காது உம் நினைவு
நிலைத்திருக்கும் என்றென்றும்

**உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.**
அன்பு மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரன், சகோதரிகள்.
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

# நெருக்கடியில் ஜெயலலிதா

தமிழ்நாட்டில் அரசு ஊழியர்களும், அரசு பள்ளி, கல்லூரி ஆசிரியர்களும் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தினைத் துவக்கியிருக்கிறார்கள்.

அகவிலைப்படி (டியரன்ஸ் அலவன்ஸ்) உயர்த்தப்பட வேண்டும், நிறுத்தப்பட்டுள்ள சில சலுகைகள் மீண்டும் அளிக்கப்பட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்திருக்கிறார்கள்.

அக்டோபர் 24 ஆம் நாள் போராட்டம் துவங்கியது. ஏறத்தாழ 50 சத ஆதரவு இருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

முதல்வர் ஜெயலலிதா சற்றுக் கீழிறங்கி வருவது போலத்தான் முதலில் தோன்றியது. பிறகு வழமை போல் இறுகிவிட்டார். அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்போவதாக எச்சரித்திருக்கிறார்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களோ தங்களது போராட்டத்தினை வலுப்படுத்தப் போவதாகவும், குடும்பத்துடன் சிறை புகப்போவதாகவும் அறிவித்து விட்டனர். ஏற்கனவே காவிரிப் பிரச்சனையிலும், மத மாற்றத் தடைச் சட்டம் தொடர்பாகவும் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழக அரசிற்கு இந்த வேலை நிறுத்தம் தேவையில்லாத ஒரு தலைவலி.

டான்சி வழக்கில்- விடுதலை பெற்று, ஆண்டிப்பட்டியில் வென்று, மீண்டும் முதல்வரான ஜெயலலிதா முன்னெப்போதையும் விடப் பல விடயங்களில் மோதல் போக்கைக் கடைப்பிடிக்கிறார். தேவையில்லாமல் பல்வேறு தரப்பினரின் எதிர்ப்பினை வளர்க்கிறார். பாரதீய ஜனதாவின் நல்லெண்ணத்தைப் பெறுவதைத் தவிர வேறு எதுவுமே அவர் சிந்தனையில் இருப்பதாகவே தெரியவில்லை. அதுவே தவறான அணுகு முறை, அக் கட்சி அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவது கடினம், என்றெல்லாம் பலர் விமர்சனம் செய்கின்றனர்.

அத்தகைய பார்வை எவ்வளவு சரியென்பது ஒரு புறமிருக்க உண்மையென்னவெனில், தமிழக அரசு கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறதென்பதுதான். இந்த நெருக்கடி இன்று நேற்று உருவானதல்ல. தொடர்ந்து பல்வேறு அரசுகள் வருவாயினைப் பெருக்காமல், செலவினத்தைக் கட்டுப்படுத்தாமல், மக்களைக் கவர்ந்திழுக்க வேண்டுமென்பதற்காகவும், ஊதாரித்தனமாகவும், பொறுப்பில்லாமலும் செலவு செய்துவிட்டு, சகட்டு மேனிக்குக் கடனை வாங்கினார்.

விளைவு, தற்போது ஊழியர்களுக்கு அந்தந்த மாதத்திய சம்பளம் கொடுப்பதே அரும் பெரும் பாடாகி விட்டது. கடந்த ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, பல்வேறு துறைகளில் ஆட்குறைப்பு, நட்டத்தில் இயங்கும் (மாநில அரசு நிர்வாகத்தில் இருக்கும்) பொதுத்துறை நிறுவன மூடல் பல்வேறு சலுகைகள் நிறுத்தம், என இப்படி அதிரடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனாலும், பிரச்சனை மேலும் கூர்மையடைந்ததேயொழிய மட்டுப்படுவதாகத் தெரியவில்லை.

மாநிலங்களின் நிதிப் பற்றாக்குறை தொடர்பாகப் புதுடில்லியில் சமீபத்தில் நடந்த முதல் மாநாட்டில் கலந்து கொண்ட ஜெயலலிதா, "மாநிலங்களிடம்,அரசு ஊழியர் சம்பளம் மற்றும் கடன் பாக்கிகளுக்குச் செலவிடுவதைத் தவிர, வேறு திட்டங்களுக்கு நிதி இல்லை. கடுமையான நெருக்கடி, எனவே பொருளாதார சீரமைப்பிற்கெனப் பெரும் தொகையினை மத்திய அரசிடம் கடனாகக் கேட்டிருக்கிறோம், அது உடனடியாக வழங்கப்பட வேண்டும்" என்று கோரியிருந்தார்.

நிர்வாக இயந்திரத்தினைப் பராமரிப்பதிலே எந்த அளவு வருவாய் விரயமாகிக் கொண்டிருக்கிறது, நிலைமையினைக் கட்டுக்குள் கொண்டுவர அனைத்து மாநில அரசுகளும் எந்தவிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அழுத்தந்திருத்தமாக மாநாட்டில் எடுத்துரைத்தது ஜெயலலிதாதான்.

"கடந்த ஆண்டு தனது வருவாயில் தமிழக அரசு 84 சதத்தினை ஊழியர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதியத்திற்காக மட்டுமே செலவிட்டது, அரசு சேவையில் உள்ளவர்களைத் திருப்திப்படுத்தவே அனைத்து வளங்களும் பயன்படுத்தப்படுகின்றன. மக்களின் இரண்டு சதத்திற்கும் குறைவாகவே உள்ள ஊழியர்களுக்கென இப்படி ஏகப்பட்டவற்றை விரயமாக்குவது பெரும் சமூக அநீதி, இதற்கு நாம் உடனடியாக மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்."

சென்னை திரும்பிய இரண்டு நாட்களிலேயே ஊழியர்களுக்கு நான்கு சத அகவிலைப்படி உயர்வு அளிக்கவும், போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்கவும் ஒத்துக் கொண்டார்.

வேறு ஒன்றுமில்லை. வரவிருக்கும் வேலை நிறுத்தத்தினைத் தடுத்து நிறுத்தும் முயற்சிதான். ஓரளவாவது ஊழியர்களின் நல்லெண்ணத்தினைப் பெற வேண்டிய கட்டாயம். மற்ற மாநில முதல்வர்கள் இவரைப் போல ஊதிய முடக்கம் அல்லது ஆட்குறைப்புப் பற்றி டில்லி மாநாட்டில் பேசவில்லையென்றால்,அதற்குக் காரணமும் இதே போன்ற அரசியல் நிர்ப்பந்தங்கள்தான்.

உண்மையில் இந்தியாவில் பல்வேறு மாநிலங்கள் ஏறத்தாழ திவால் நிலைக்கு வந்துவிட்டன. கடன் பொறியில் சிக்கியிருக்கின்றன. வட்டி கட்டுவதற்கே கடன் வாங்க வேண்டிய நிலைமை.

பீஹாரில் பல பொதுத்துறை நிறுவனங்களின் ஊழியர்களுக்கு ஆண்டுக் கணக்கில் ஊதியமே அளிக்கப்படுவதில்லை. வறுமையின் காரணமாக அரசு ஊழியர்கள் தற்கொலை செய்து கொள்ளத் துவங்கிவிட்டார்கள்.

வட மாநிலங்கள் பலவற்றில் மக்கள் நலத் திட்டங்கள் எல்லாம் ஒரேயடியாகக் கைவிடப்பட்டுவிட்டன.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக மேற்குவங்காளத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான கூட்டணி ஆட்சியிலிருக்கிறது. அது அதிகமாக ஊழலில் ஈடுபடாத அரசு எனவே கருதப்படுகிறது.

ஆனால், அங்கும் வருவாயைப் பெருக்கும் வழி பற்றிச் சரியாகத் திட்டமிடாமல், செலவினங்களைப் பெருக்கிக் கொண்டே போனதன் விளைவு, கடும் நிதி நெருக்கடி, அரச மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்துகள், உபகரணங்கள் வாங்க முடியாததன் விளைவாக நோயாளிகள் அதிக எண்ணிக்கையில் மரித்துக் கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் கல்கத்தாவில் ஒரு பொது மருத்துவ மனையில் ஒரே நாளில் 14 குழந்தைகள் இறக்க, அகில இந்திய அளவில் பெரும் பிரச்சனையானது.

அப்போது அம் மாநில நல்வாழ்வுத்துறை அமைச்சர் "ஒரு நாளில் 14 மரணங்கள் சர்வசாதாரணம். இப்போதுதான் இதெல்லாம் மீடியாவின் கவனத்திற்கு வந்திருக்கிறது. நாங்கள் என்ன செய்வோம். நிதி வசதியில்லை" என்று அலட்சியமாகக் கூறினார். இந்த நிலை தமிழ்நாட்டையும் பீடிக்கும் நாள் வெகு தூரத்திலில்லை. கடந்த ஆண்டே அரசு தனது ஊழியர்களுக்குத் தீபாவளி முன்பணம் கொடுக்கத் திணறிவிட்டது. விடுப்பு ஊதியம் போன்றவை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

**கானகன்**

அரசு போக்குவரத்துக் கழகங்களில் ஆட்குறைப்பு, மேலும் தனியார் மயமாக்கல், அரச கல்லூரிகளுக்கு ஏகப்பட்ட மானியம் போய்க் கொண்டிருப்பதால், அதற்கு ஒரு முடிவு கட்ட, கல்லூரிகளைப் பல்கலைக்கழகத்தின் அங்கமாக மாற்றிவிட்டது.

மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலித்துக் கல்லூரிகளை நடத்தலாம் என்பதே அரசின் திட்டம்.

மாணவர்கள் கொதித்தெழுந்தனர். தங்களது வேலைக்கு ஆபத்தோ என்று அச்சப்படும் ஆசிரியர்களிடமிருந்தும் அரசின் திட்டத்திற்குக் கடும் எதிர்ப்பு. இப்படித் தொடர்கிறது நெருக்கடி.

சரி, அரசின் நெருக்கடி தீர வழியென்ன? செலவை எப்படித்தான் மட்டுப்படுத்துவது? பூனைக்கு யார் மணி கட்டுவதென்றால், நிச்சயமாகப் பல்வேறு வீண் செலவுகள், சலுகைகள் நிறுத்தப்படத்தான் வேண்டும்.

# சமத்துவ வாழ்வுக்கு எழுந்துள்ள சவால்

கிழக்கில் சகல மக்களினது பாதுகாப்பும் சுதந்திரமும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அடுத்தடுத்து வன்முறைச் சூழல் கிழக்கு மாகாணத்தைப் பிடித்து உலுக்கிக் கொண்டிருக்கிறது.

யுத்த காலத்தில் பெருமளவு அழிவுகளைச் சந்தித்த கிழக்குப் பிரதேசங்கள் தற்போது யுத்த நிறுத்த காலத்தில் வன்முறையின் களமாக இன்னொரு வகையில் இரத்தம் சிந்தப்படும் பிரதேசங்களாக மாறியுள்ளன.

மூதூர் தொடக்கம் வாழைச்சேனை வரை திருமலை தொடக்கம் அம்பாறை வரை நடந்த, நடைபெற்ற சம்பவங்கள், வன்முறைகளின் சாராம்சம் என்ன?

கிழக்குப் பிராந்தியத்தில் பல்லின மக்களின் சகோதரத்துவ, சமத்துவ வாழ்வு அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது.

பல்லின மக்களின் சகவாழ்வு என்னும்போது ஆக்கிரமிப்பு வகைப்பட்ட சிங்களக் குடியேற்றங்களையோ அல்லது அதனைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட ஆயுத பாணிகளான ஊர்காவற் படையினரையோ சேர்த்துக் குறிப்பிடவில்லை.

காலம் காலமாக, கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லீம், சிங்கள மக்களின் எதிர்பார்ப்பையே இங்கு கருத்தில் எடுக்க வேண்டியிருக்கிறது. முஸ்லீம்கள் வாழும் பிரதேசங்களில் புலிகளின் பிரசன்னம் அதிகரித்ததுடன் முஸ்லீம்கள் மத்தியில் பதற்றம் அதிகரித்தது நிராகரிக்க முடியாத உண்மையாகும்.

முஸ்லீம்களிடம் கப்பம் அறவிடுவதும், சொத்துக்களைச் சுவீகரிப்பதும், அவற்றின் மீது வரி விதிப்பதும் என்ற நிலைமைகள் வாழைச்சேனை, ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி, கல்முனை, அக்கரைப்பற்று போன்ற பிரதேசங்களில் பதற்றம் உருவாக வழி வகுத்தன.

முஸ்லிம்கள் ஹர்த்தால் நடத்துவதாக இருந்தால்கூடத் தமிழர்களிடம் கேட்டுத்தான் மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்து, தமிழ் தேசிய முன்னணிப் பிரமுகர்களால் முன்வைக்கப்பட்டது.

இத்தகைய கருத்துக்கள் எப்போதும் விரிசலை அதிகரிக்கச் செய்தன.

வாழைச்சேனைப் பகுதியில் நடைபெற்ற வன்முறைகளின் போது நேர்ந்த மரணங்கள் முஸ்லீம்களின் பாதுகாப்பு, எதிர்காலம் பற்றிய அச்சத்தைத் தோற்றுவித்தன.

தற்போதே இப்படியானால் எதிர்காலம் எப்படியிருக்கும் என்று முஸ்லீம்கள் சிந்திப்பதில் நியாயம் இருக்கவே செய்கிறது.

தமது பாதுகாப்பு, எதிர்காலம் பற்றிய அவர்களின் அச்சம் யாரும் கேள்விக்குட்படுத்த முடியாதது.

கடந்த காலத்தில் காத்தான்குடி, ஏறாவூர் பள்ளிவாசல்களில் நேர்ந்த சம்பவங்கள், 1990 இல் உடுத்த துணியுடன் வடக்கு முஸ்லீம்கள் ஒரு சில மணிநேரத்தில் அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த பிரதேசங்களை விட்டு வெளியேற்றப்பட்டது போன்ற சம்பவங்கள் அவர்களின் சிந்தனைப் போக்கிற்கு வலுவூட்டுகின்றன.

அவர்கள் அதற்காகத் தமக்கு பாதுகாப்பான, தாம் செறிந்து வாழும் பிரதேசமொன்றை அடிப்படையாகக் கொண்ட அலகு ஒன்றைக் கோருவதில் நியாயம் இருக்கவே செய்கிறது.

புலிகள் முஸ்லிம்களைத் தமிழர்கள் என்று கூறிக் கொண்டு நடைமுறையில் வேற்று மனிதர்கள் எனக் கருதும் தமிழ் மேலாதிக்க வகைப்பட்ட நோக்கு நிலை முஸ்லீம் மக்களுக்கு நம்பிக்கையளிப்பதாக இல்லை.

எனவே இங்கு அறுவைச் சிகிச்சை நடத்த வேண்டிய அவசியம் உள்ளது. ஆனால் அந்தச் சிகிச்சை ஒரு துளி இரத்தமும் சிந்தாமல் நடத்தப்பட வேண்டியது.

முஸ்லீம்கள் தனிப் பிராந்தியமொன்றை, அம்பாறையை மையமாகக் கொண்டு கோருவது நியாயமானது.

ஆனால் வடக்கு-கிழக்குத் தற்காலிகமான இணைப்பை நிரந்தரமாக்க வேண்டாம் என்று கோருவது எவ்விதத்திலும் நியாயமாகாது. அது சிங்களப் பெருந்தேசியவாத ஒடுக்குமுறைக்குட்பட்ட, ஏற்கனவே சஞ்சலங்களுக்குள்ளாகியிருக்கும் சமூகங்களிடையே ஆழமான பிளவுக்கே வழி வகுக்கும்.

காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படை முகாம் பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களை அடுத்து 7 பேர் அதிரடிப்படையினரால் கொல்லப்பட்டு, 15 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்த சம்பவமும், அதில் ஆத்திரமூட்டல்கள் இருக்கிறதோ இல்லையோ அம்பாறை மாவட்டத் தமிழ் மக்கள் மத்தியில் பாதுகாப்புத் தொடர்பான நியாயமான அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

இதன் தொடர்ச்சியாகத் திருமலையில் இன ரீதியான பதற்றம் உருவாகியது. இதனால் இருவர் உயிர்ப்பலியாகி 40 க்கு மேற்பட்டோர் காயமடைவதற்குமான நிலைமைகள் ஏற்பட்டன.

கடந்த 8 மாத காலமாக நிலவும் சமாதான நம்பிக்கைகளைச் சிதறடிப்பதாகவே இச் சம்பவங்கள் அமைகின்றன.

**தாகூர்**

சமாதான நம்பிக்கைகள் தோன்றியதை அடுத்து ஓரளவு கலகலப்பாகக் காணப்பட்ட வாழ்க்கை தற்போது வெறிச்சோடத் தொடங்கியுள்ளது.

இந்த அறிகுறிகள் அவ்வளவு நல்ல சகுனமாக இல்லை. உடனடியாகவே சகல இன மக்களினதும் பாதுகாப்பு, இயல்பு வாழ்க்கைக்கான சூழ்நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும். படை, சட்டம், ஒழுங்குத் துறைகளில் 99 வீதமும் சிங்களவர்கள் என்பதே ஒரு மேலாண்மை உணர்வுக்கும், பாரபட்சங்களுக்கும் வழி வகுக்கிறது. இதனால் தமிழ், முஸ்லீம் சமூகங்களின் பாதுகாப்பு அந்தந்தச் சமூகங்களின் நம்பிக்கைக்குரியவர்களால் பாதுகாக்கப்படும் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

சமாதான முயற்சிகள் சீர்குலையக் கூடாது. அம் முயற்சிகள். செழுமைப்படுத்தப்பட வேண்டும்.

பன்முகத் தன்மை, ஜனநாயகம், மனித உரிமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் மாத்திரமே அதனை முன்நோக்கிக் கொண்டு செல்ல முடியும்.



# அதிரடி அய்யாத்துரை

**பயங்கரவாதத்** தடைச் சட்டத்தை நீக்கினால்தான் அரசுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்குவோம் எனச் சவால் விட்டிருக்கிற விநாயகத்தார், ஒருவேளை இச்சட்டத்தை அரசாங்கம் நீக்காமல் விட்டால், எதிர்த்து வாக்களித்து அரசாங்கத்தை என்ன கவுத்திடவா போறார்? நீக்கவேண்டும், நீக்க வேண்டும் என்றுகொண்டே நீடித்து இருப்பதைத் தவிர வேற என்னதான் செய்ய இயலும் இவையால?

**இதுவும் பயங்கரவாதச்** சட்ட விஷயம்தான். மட்டக்களப்பு கூட்டமொன்றிலை கூட்டணியினர்தான் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை கொண்டுவந்தபோது எதிர்ப்புக் காட்டாமல் வழிவிட்டவை என்று விநாயகத்தார் முகத்துக்கு முன்னாலே நேரடியாக் குற்றஞ்சாட்டினர். ஒரு வருஷம் மட்டுமே அமுலாக்குவோம் என்று அரசு உறுதியளித்ததை நம்பித்தான் அதை நாம் எதிர்க்கவில்லை என்று ஜோசப் பராசசிங்கம் தலையைக் குனிந்தபடி ஒப்புக்கொண்டார். அப்போ, தமிழ் இளைஞர்களை ஒரு வருஷத்துக்குத் தன்னும் இச் சட்டத்தால் ஒடுக்கச் சொல்லி இவைதானோ லைசன்ஸ் குடுத்தவை?

**அதுசரி** ஜே.வி.பி. பேச நேரம் குடுக்காததற்கு வெளிநடப்புச் செய்த கூட்டமைப்புக்காரர் ஏனாம் தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதமிருந்த நேரம் வெளிநடப்பு செய்யேல்லை?


**மின்சார சபை** திருத்தச் சட்டம் வந்தபோது திருமலை மின்பிராந்தியம், அநுராதபுரத்தோடு இணைக்கப்படுவதைக் கண்டித்து விட்டு அடுத்தகணம் அதே சட்டமூலத்திற்கு ஆதரவாய் வாக்களித்தார் சம்பந்தர். இப்போது இதன் வினை வெளிக்கிட்டிருக்கிறது. திருமலை மின்சார அலுவலகத்தை உடனடியாக அநுராதபுரத்திற்கு மாற்றும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு காரியங்கள் நடக்கின்றன. ஆதரவாய் கையுயத்தியவர், என்ன செய்யப் போகிறாராம் இப்போது?

**அரசியல் பேட்டி** எடுக்கிறவர் அரசியல் விவகாரங்களை அதிகம் அறிந்திருக்காவிட்டாலும் பரவாயில்லை, அதிகப் பிரசங்கிகாரராய் இருக்கக் கூடாது. விசயத்தை உணர்ச்சிபூர்வமா ஆக்கிறதுக்காக வலிந்திழுத்து சம்பந்தா சம்பந்தமில்லாமல் பேசக்கூடாது. போன ஞாயிறு தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில, தானாக வந்து இயக்கமொன்றில் சேர்ந்த முஸ்லிம் இளைஞர்களை கடத்தியதாக பொய்க் குற்றம் சாட்டி எப்பவோ நடந்த ஒன்றை சம்பந்தமில்லாமல் பொருத்தமுனைந்தது விகாரமாய் இருந்தது. "பெரிய" இடங்களில் குட்டு வாங்கி வழிவதும், இடங்கண்ட இடத்தில் குட்டுப் போட நினைப்பதும் சிறு பிள்ளைத்தனம்.

**இரண்டாம் தடவை** பேசும்போது மூன்றாம் தரப்பாக வருவோம் என்ற முஸ்லிம் தலைவர் மறுபடியும் அரசின் அரவணைப்பில்தான் பேச்சுவார்த்தையில் ஆசனம் பெறுகிறார். அவற்ர கட்சிக்காரர் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பதை "பிழையான சந்தர்ப்பத்தில் சரியான போராட்டம்" என்று சொல்லிக்கொண்டு இப்படிப் பேச்சுவார்த்தைக்குப் போவதை "சரியான சந்தர்ப்பத்தில் பிழையான காரியம்" என்றல்லோ மற்றத்தரப்பார் சொல்லினம்?

**சனாதிபதியின்** அதிகாரங்களைக் குறைப்பது என்ற ஆசை தீராத ஆசையாய்ப் போயிட்டுது ஆளுங்கட்சிக்கு. போனமுறை பெரிசாய் வெளிக்கிட்டு, நீதிமன்றத்தில மூக்குடைபட்டு போனபிறகும் இப்ப அவற்றை இராணுவ அதிகாரங்களை பறிக்க வேண்டும் என்று வெளிக்கிடினம். என்னாகுமோ இருந்துதான் பார்க்க வேண்டும்.

# 3ம் ஆண்டு நினைவஞ்சலி



நடராஜா அற்புதராஜா
(ரமேஷ்)

தினமுரசு தாபக ஆசிரியரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும்

அன்னை மடியில்: 16 ❀ 09 ❀ 1963

ஈசன் அடியில்: 02 ❀ 11 ❀ 1999

தமிழீழத் தரணியிலே
தன்னிகரில்லாத் தமிழ் எழுதி
தடம் பதித்த துணிவுடைய
தங்கம் நிகர் அற்புதனே!
உன் கரத்தில் ஊற்றெடுத்த
உயிராக்கமெலாம் உறைந்து
மூன்றாண்டு காலம் முன்னோடி
ஓய்ந்து ஒழிந்த போதும்
ஒப்பற்ற உன் எழுத்தை
கைப்பற்ற முயன்று பலர்
மையற்றுப் போன பேனா
முனை உடைந்து போனதனால்
வாயடைத்து வியந்துன்னை
வாழ்த்துகின்றார் எந்நாளும்
நீ வகுத்த பாதையிலே
நீந்த முயன்றுழலும்
எங்களுக்கு என்றென்றும்
பக்கத்துணை நிற்க நிதம்
பூம் பாதம் போற்றுகின்றோம்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 05 ❒ 12 ❒ 1962

ஈசன் அடியில்: 02 ❒ 11 ❒ 1999

தர்மராஜா அஜந்தகுமார் (ராஜன்)

இனிய சொல்லாலும்
இளஞ்சிரிப்பாலும்
கனி நிகர் பார்வையாலும்
எமை யெல்லாம்
கவர்ந்து-வாழ்வின்
சுமையெல்லாம் மறக்கடித்த
மாண்புடைய தோழனே-உன்
மைத்துனருடனே நெடும் பயணம்
வைத்தாலும் உனை என்றும்
வையகத்தில் மறக்க முடியாது
தவிக்கின்றோம்-அமைதி கொள்க.

# தற்கொலையாளிகளைத் தூங்கவைத்துவிட்டு பணயக் கைதிகளை மீட்ட ரஷ்யக் கமாண்டோக்கள்

ரஷ்யத் திரையரங்கில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்தவர்களை மீட்க ரஷ்ய கமாண்டோக்கள் அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தீவிரவாதிகளைத் திக்குமுக்காடச் செய்து பணயக் கைதிகள் மீட்கப்பட்டனர். இந்த மீட்பு நடவடிக்கை எவ்வாறு இடம்பெற்றது என்பது குறித்து எந்தத் தகவலையும் வெளியிடக் கூடாது என ரஷ்ய அரசாங்கம் அந்நாட்டுப் பாதுகாப்புப் படைகளுக்குக் கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆனால், நியுஸ் ரூடொட் கொம் என்ற இணையத்தளம் இந்த அதிரடி நடவடிக்கை எவ்வாறு இடம் பெற்றுள்ளது என்பது குறித்துச் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் பங்குபற்றிய ஒரு அதிகாரியை மேற்கோள் காட்டி இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, முதலில் சனிக்கிழமை காலை 3மணிக்கு அதிரடித் தாக்குதல் நடத்தப்படும் என்ற செய்தியை கசிய விட்டோம். உடனே பயங்கரவாதிகள் உஷாரானார்கள். துப்பாக்கியால் சுட்டனர். ஆனால், நாங்கள் தாக்கவில்லை. இயல்பாகவே அவர்களது கண்காணிப்பு தளர்ந்து போனது.

இதனைப் பயன்படுத்தி தூக்க வாயுவை அதிரடிப்படையினர் செலுத்திவிட்டு காலை 5 மணிக்கு கட்டடத்திற்குள் புகுந்தனர்.

உடல் முழுவதும் குண்டுகளைக் கட்டிக்கொண்டிருந்த தீவிரவாதிகள் பலர் இந்த வாயு காரணமாக தூங்கிக் கிடந்தனர். தூங்கிக் கொண்டிருந்தவர்களை தலையில் சுட்டுவிட்டு அரங்கைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

"இது கொடூரமானது. ஆனால், உடல் முழுவதும் வெடிகுண்டுகளைக் கட்டிக்கொண்டிருந்த தற்கொலைப் படைகளைச் சேர்ந்தவர்களை அந்நேரத்தில் கொல்வதைத் தவிர வேறு வழியில்லை" என்கிறார் அந்த அதிகாரி.



இப்போது சர்ச்சை வேறு வடிவம் பெற்றிருக்கிறது. பணயக் கைதிகளை மீட்க அதிரடிப்படையினர் செலுத்திய வாயு காரணமாக நூற்றுக்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளார்கள். அப்படியிருந்தும் இந்தத் தாக்குதலில் பயன்படுத்திய வாயுவின் பெயரை வெளியிட ரஷ்ய அதிகாரிகள் மறுத்து வருகின்றனர்.

இந்த வாயு குறித்துச் சரியான தகவல் இல்லாமையினால் காயமடைந்து, மூச்சுத்திணறல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள சுமார் 500 பேருக்குச் சிகிச்சை அளிப்பதில் பலத்த சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் இந்தத் தாக்குதலின் போது பயன்படுத்தப்பட்ட வாயு வேலியம் வாயுவாக இருக்கலாம் என அமெரிக்க நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

"திடீரென்று எங்களுக்குத் தூக்கம் வந்தது. சிந்தனை குழம்பியது. ஆனால், புகை மண்டலம் எதுவும் தென்படவில்லை. இரசாயனம் அல்லது விஷ வாயு வாசனை எதனையும் நாங்கள் உணரவில்லை" என்று மீட்கப்பட்ட பணயக் கைதி ஒருவர் கூறியிருக்கிறார்.

வேலியம் வாயு தூக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. அளவு கூடினால் சுவாசப் பிரச்சனையை ஏற்படுத்திவிடும். உடலின் முக்கியமான உறுப்புகளுக்கு ஒட்சிசன் செல்வதைத் தடைப்படுத்திவிடும் என்று அமெரிக்காவின் வேஜினியா பல்கலைக்கழகத்தின் மருத்துவத்துறை பேராசிரியர் கிறிஸ்டோபர் ஹோல்ஸ்ட்டீஜ் கூறியிருக்கிறார். எவ்வாறெனினும் செறிவு கூடிய இரசாயன வாயு ஒன்றை இந்த அதிரடி நடவடிக்கையின் போது பயன்படுத்தியதை ரஷ்ய அதிகாரிகள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

(முரசின் தகவல் பெட்டிப் பக்கத்தில் முன்னதாக சிறைக்கைதிகள் பணயம் வைக்கப்பட்டிருந்தபோது அரங்கத்தில் நடந்த சம்பவங்கள் விபரிக்கப்பட்டிருந்தன.)

# சிறைப் பறவைகளுக்கு அழகிப் போட்டி

சுதந்திரமாகப் பறந்து திரியும் இளம் பெண்களுக்கு உலகம் முழுவதும் அழகிப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால், அதிலிருந்து வித்தியாசமாக, சிறைப் பறவைகளுக்கு அழகிப் போட்டி நடத்தத் திட்டமிட்டுள்ளது லிதுவேனியா நாட்டைச் சேர்ந்த தனியார் தொலைக் காட்சி நிறுவனமான "எல்.என்.கே". சிறையில் இருக்கும், 17 வயதிலிருந்து 31 வயதுக்கு உட்பட்ட பெண்கள் இப் போட்டியில் பங்கேற்கலாம். நாகரிகப் பாங்கு, நடிப்ப, பாட்டுத் திறன், நீச்சல் உடைப் போட்டி, மணக்கோலப் போட்டி ஆகிய போட்டிகள் நடத்தப்படும். அதில் வெற்றி பெறுபவருக்கு வெள்ளிக் கிரீடத்தைச் சூட்டி, சிறை அழகி என்பதைக் குறிக்கும் "மிஸ் கேப்டிவ்" என்னும் பட்டம் அளிக்கப்படும். ரு.2 லட்சம் பரிசுத் தொகையும் உண்டு. ஆனால், இத் தொகை, 'சிறை அழகி' விடுதலை ஆகும்போது தான் கிடைக்கும்.

# தீபாவளி வாழ்த்துச் சிறப்பிதழ்

**தேர்ந்த படைப்பாளிகளின் சிறந்த சிறுகதைகளை அவ்வப்போது பிரசுரிப்பதன் மூலம் தரமான சிறுகதைகளை முரசின் வாசகர்களுக்கு பரிச்சயப்படுத்தும் முயற்சியின் முதற்கட்டமாக பிரபஞ்சனின் 'பலி' என்னும் சிறுகதை "ஒரு ஊரில் இரண்டு மனிதர்கள்" எனும் தொகுப்பிலிருந்து தீபாவளிச் சிறப்புச் சிறுகதையாக நன்றியுடன் பிரசுரமாகின்றது. (ஆ-ர்)**




பிரபஞ்சன்

**ம**காபாரத ஐயர் காபி விஷயத்தில் மகா ரசிகனாக இருந்தார். இது காரணமாகவே நான் அவரோடு சினேகம் ஆனேன்.

இலக்கியம் போலவே காபியும் ஒரு தவிர்க்க முடியாத விடயமாகிவிட்டது எனக்கு. தஞ்சாவூரில் பிரகாஷ் என்கிற என் அன்புக்குரிய நண்பரும் காபி விடயத்தில் ஐயரைப் போலவே மகா ஞானியுமாய் விளங்கியவருமான ஒரு ஜீவனால் இது எனக்குக் கற்பிக்கப்பட்டது. தஞ்சாவூரில் இருந்து பத்து கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிற சாலியமங்கலத்துக்குப் போய், கூரை வேய்ந்த ஒரு காபி கிளப்பில் மணிக் கணக்கில் உட்கார்ந்து அரை மணிக்கு ஒரு காபியை விழுங்கி, இலக்கியம் பேசி- இப்படியாக ஒரு காபிமானியாக நான் ஆன கதை. இதில் சுவாரஸ்யம் என்னவென்றால் பிரகாஷ் சுத்தமாகக் காபியை விட்டபோதும் என்னால் விட முடியாமல் போய்விட்டது.

நல்ல காபிக்காக நான் அலைந்தேன். சுத்தமான பொன் வறுவலில் அரைக்கப்பட்ட சிக்கரி கலவாத காபி. தொண்டையில் இறங்கும் போதே கசந்து கொண்டு ஒரு விதமான கிறக்கம் ஏற்படுத்துகிற காபி, சர்க்கரையும், பாலும் மட்டாக டபிள் ஸ்டிராங்கான மணம் பரப்பும் காபி.

எங்கள் ஊரில் கழுநீர், விளக்கெண்ணை இத்தியாதிகள் எல்லாம் காபி என்கிற பெயரில் ஓட்டலுக்கு வந்தன. நான் போகாத ஓட்டலில்லை. சாப்பிடாத காபி இல்லை. காபிதான் இல்லை. ஒரு விபத்து மாதிரி ஐயர் ஓட்டலைக் கண்டேன்.

அன்றுதான் ஐயர் 'லட்சுமி விலாசத்தை'த் தொடங்கினார். நான் போகும்போது ஐயர் தேங்காயைச் சுற்றி உடைத்தார். சந்தனம் கொடுத்தார். அடுத்தபடியாகக் காபியும் கொடுத்தார். அதுதான் காபி. கன்னங்கரிய நுரை பொங்கும், நுரை மதர்த்த காபி. என்ன மணம், என்ன காரம். எம்.டி. ராமநாதனின் 'பேஸ்' போல சிலிர்க்க வைக்கிற களை.

என்னை அவரும், அவரை நானும் இனம் கண்டு கொண்டது இப்படித்தான். ஐயரும் தஞ்சாவூர் பக்கத்தவர்தான். ஒண்டிக்கட்டை. இப்படி, காலவெள்ளம் இவரை இங்கு அடித்துக் கொண்டு வந்து போட்டு வைத்திருக்கிறது. ஆள் ஒத்தை நாடிதான். மைதானத்தில் புல் முளைத்தாற் போல அங்கொன்றும் இங்கொன்றுமாக மழிக்காத முகம். எந் நேரமும் வெற்றிலை போட்டுச் சிவந்த வாய். இதழ்க் கடையில் வெற்றிலைச் சாறோடு, எல்லாம் கடந்தவனின் தன்னிறைவும் ஒழுகிக் கொண்டு நிற்கும். ஐயர் ஒரு ஓட்டல் வியாபாரி மட்டும் இல்லை.

லட்சுமி விலாஸம் பரபரப்பான நகரத்தின் கடைத் தெருவை ஒட்டி இருந்தாலும் ஒரு ரிஷியின் ஆஸ்ரமத்தைப் போல அமைதியையும் காத்துக் கொண்டது. எச்சில் பிளேட்டுகள், டபரா செட்டுக்கள் இரைச்சல் இங்கு கிடையாது. சினிமா டப்பா சங்கீதம் இங்கு கிடையாது. ஊர்வம்பு, பத்திரிகைகள், ஜனக்கூட்டம் இவை போன்று எதுவும் இங்கு இல்லை. பக்கத்து டெலிபோன் எக்ஸ்சேஞ்ஜ் ஊழியர்கள், ஆஸ்பத்திரி பணியாளர்கள், என்னைப்போன்ற சில உதிரிகள் இப்படியாக தெரிந்தெடுத்தாற்போல சில பேரே லட்சுமி விலாஸத்தின் போஷகர்கள். ஐயருக்கு இது போதும், போதும் என்கிற மனம். விலாஸம் எப்பவும் அமைதியாக இருக்கும். மூலையில் தெருவைப் பார்த்து ஒரு ஸ்டூலில் உட்கார்ந்து கொள்ளலாம்- முதுகை சுவரில் சாய்த்துக் கொண்டால் போச்சு- கடைத்தெரு எப்பவும் சுறுசுறுப்பாக இருக்கும் மனிதர்கள் எப்பவும் எதற்காகவாவது நடந்து கொண்டே இருப்பார்கள்....நடப்பார்கள்.... நடப்பார்கள்...அப்படி நடப்பார்கள்! இவர்களுக்கு ஏதேனும் ஒன்று கடைத் தெருவில் வாங்கியாக வேண்டும்.

நான் உட்கார்ந்து கொண்டிருக்கும் இடத்தில் இருந்து சேட்டுக்கடை தெரியும். நகரத்தின் மிகப் பெரும் ஜவுளிக் கடை அது. அதன் புறத்தே கண்ணாடி அறையில் ஒருத்தி இமையாது, கண் துஞ்சாது 24 மணி நேரமும் நிற்பாள். கடை திறந்ததும் முதல் வேலையாக ஒருவன் அவளுக்கு ரவிக்கையும், புடவையும் அணிவிப்பான். எப்போது குளிப்பாட்டுவான் என்பது தெரியாது. தினம் தினம் ஒரு புதுச்சேலை. இதைக் கட்டி முடிக்க அவனுக்கு ஒரு மணி நேரம் பிடிக்கும். இதற்கெனவே பிறந்து வந்தவனாக அவன் எனக்குத் தோன்றுவான். கட்டுவதை எப்போது அவிழ்ப்பான்? எனக்குத் தெரியவில்லை.

ஐயர் மேசைக்குப் பின் உட்கார்ந்து இருந்தார். மேசை கச்சிதமானது. கைபட்டு, கைபட்டு ஒளி ஏறியது. மேசையில் ஒரு வரவு செலவுப் புஸ்தகம் ரொம்பப் பழசு என்பது அதன் மேனியைப் பார்த்தாலே புரியும். ஒடித்தால் ஒடியும், ஐயருக்கு அது ஆயுட்கால சினேகிதன். துக்கமானாலும், சந்தோஷமானாலும் ஐயர் இதற்குள் நுழைவார். இது அவர் எனக்குச் சொன்னது. ஒவ்வொரு பேச்சிலும், பாரதக் கதை வாசனை வீசப் பேசுவார். நாங்கள் அவருக்கு மகாபாரத ஐயர் என்று இதற்காகவே நாமம் வைத்தோம்.

அன்று நான் விலாசத்துக்குள் நுழைகிறபோது ஐயர் மாத்திரம் இருந்தார். எனக்கு என்று, எழுந்து போய், அருமையான காபி போட்டுக் கொண்டு வந்து வைத்தார். நான் தெருவைப் பார்த்தேன். நிலைச் சுவரில் ஒரு கண்ணை மறைத்துக் கொண்டு ஒரு கண்ணால் நீரா என்னைப் பார்த்தாள். ஐயர் ஓட்டல் பரிச்சயப்பட்ட அன்றுதான் எனக்கு நீராவும் பரிச்சயமானாள். நீரா மிஞ்சிப் போனால் அஞ்சு வயசுக் குழந்தை. ஐயர் ஓட்டல் வாடிக்கையாளர்கள் போடும் சில பைசாக்களை வாங்கி ஜீவனம் பண்ணும் பச்சக் குழந்தை அவள்.

குழந்தை மிக அழகி. பஸ்ஸுக்கு ஓடுகிறவனையும் நின்று பார்க்கச் செய்யும் கண்கள் அவளுக்கு. மாநிறத்துக்காரியானாலும், அவள் வெள்ளைச் சிரிப்பு....மனசுக்கு ரொம்பத் தொந்தரவு அளிக்கும் விஷயம். குழந்தை ஐயர் ஓட்டலிலும் இவள் தாய் என்று சொல்லிக் கொண்டவள் கொஞ்சம் தள்ளி இருக்கும் காபி ஹவுஸ் முன்னாலும். இவளுக்கு நீரா என்று பெயர் வைத்தவர் ஐயர். 'என்ன சுவாமி காரணம்' என்று கேட்டேன். 'நீரில் இருந்து வந்தவள்' என்றார். விலாசத்துக்கு முன்னால் சாக்கடை ஓடுகிறது. அதைத் தாண்டித்தான் தினமும் நீரா வருகிறாள். அவள் நிற்பதும் உட்காருவதும்,சமயங்களில் தூங்குவதும் சாக்கடையின் ஓரம்தான். 'எப்படி நம்ம பெயர்' என்றார் ஐயர்.

நீராவுக்கு ஐயரால் மிகவும் அநுகூலம். ரொம்ப நாள் நீரா நிர்வாணியாகவே இருந்தாள். ஐயர் கவுன், பாவாடை தைத்துக் கொடுத்தார். கடையில் மீந்த பஜ்ஜி, நீராவுக்குத் தான். அதன்றி அவ்வப்போது காபியும் கொடுக்கத் தவறுவதில்லை ஐயர்.

காபியை நான் விழுங்கினேன். மனமும் உடம்பும் லோசாகி எனக்குள் ஆனந்தம் நிறைந்தது. ஐயர் வெற்றிலைக் காம்பைக் கிள்ளியெறிந்து வேஷ்டியில் சுத்தமாக அகப்புறம் துடைத்து சுண்ணாம்பைப் படரத் தடவி சுருட்டிப் போட்டுக் கொண்டார். நான் அவரையே பார்த்தவாறு இருந்தேன். ஐயர் முகம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தது. கண்கள் சொருக வெற்றிலைச் சுகத்தில் அவர் இருந்தார். பிறகு என்னைப் பார்த்தார். தொண்டையைக் கனைத்துக் கொண்டார். கழுத்தை மேல் தூக்கி, 'சுவாமி' என்றார்.

'சொல்லுங்கோ...'

ஐயர் சொல்வதை நான் கேட்கத் தயார் ஆனேன்.

"மனுஷாள் எவ்ளோ அரக்காளா மாறிப் போயிட்டா பார்த்தேளா? பணம், காசு, பதவின்னா எதையும் விட்டுடத் தயாரா நிக்கறா பார்த்தேளா?"

'சொல்லுங்கோ....'

"அந்தப் பாண்டவாளத்தான் சொல்றேன். மானத்தை விடறவாளை இந்த நாளிலேயே பார்க்கிறோம். குருஷேத்ர சண்டையில ஜெயிக்க தம் பிள்ளையேன்னா பலிகொடுத்தா? பிள்ளைய பலி கொடுத்தா பதவி, பிள்ளைய பலி கொடுத்தா சொத்து சுகம். என்ன சுவாமி அக்ரமமா இருக்கு? இந்த லட்சணத்துல இவாள்ளாம் தருமம் அறிஞ்சவா. தெய்வாம்சம் பெற்றவா...!"

நான் யோசித்தேன். ஐயரின் கேள்வி நியாயமாகத்தான் இருந்தது. நான் சொன்னேன்...

"பதவிக்காகப் பிள்ளைகளைப் பலி கொடுக்கிறதாச் சொல்றீங்க....ஸ்வாமி....பிள்ளைக்காக மத்த மனுஷாளப் பலி வாங்கறவாள்ளாம் இப்போ பதவிக்கு வந்திருக்கிறதப் பார்தேளா?"

'ரெண்டும் ஒரே அச்சுத்தான். பக்கந்தான் வேறே.... இவாள்ளாம் மனுஷாள். விட்டுத் தள்ளுங்கோ....தெய்வங்கள் என்ன வாழ்ந்ததுங்கறேன்....பிள்ளைக்கறிக்கு ஆசைப்படறது ஒன்னு...சை..."

"நமக்குப் பொம்பிளைக் கறிமேலே ஆசை; தெய்வத்துக்கு மனுஷன் கறிமேல ஆசை... இது ரெண்டும் ஒரே அச்சுத்தான்.... இல்லியா...."

"ஓய்....ஓய்....என்ன என்ன சொல்லிட்டேள்?...."

ஐயர் எழுந்து சென்று சாக்கடையில் சிவப்பாக உமிழ்ந்து வந்தார்.

இரண்டு ஐரோப்பியர் உள்ளே வந்தனர். ஒருவன் ஆண், யுவன். ஒருத்தி பெண், யுவதி. இருவரும் உருவ மேனி வேறுபாடற்ற சகோதர சகோதரி போல் தோன்றினார்கள். யுவனிடமிருந்து யுவதியை வேறு பிரித்தது கழுத்துக்குங் கீழான இயற்கையே. இருவரும் சங்க காலத் தலைவன் தலைவியர் போல மாலை அணிந்திருந்தனர். அப்போதுதான் கடலில் குளித்து வருபவர் போல நனைந்து இருந்தனர். யுவன் நனைந்த வேஷ்டியும் துண்டும் யுவதி பனியனும் கைலியும்.

விலாசத்துக்குள் நுழைந்து என் இடப்பக்கம் வாசலை நோக்கி அமர்ந்தனர். ஐயரிடம், யுவன் பஜ்ஜியை சுட்டினான். ஐயர் இரண்டு வாழை இலைத் துண்டங்களில் சிவந்த நீண்ட பஜ்ஜிகளை வைத்து ஓரத்தில் சட்னியும் வைத்தார். யுவதியும் யுவனும் தமக்குள் சிரித்துச் சம்பாஷித்தவாறு சாப்பிடத் தொடங்கினார்கள்.

யுவதி நீராவைப் பார்த்தாள். சிரித்தாள். நீராவும் யுவதியைப் பார்த்து இதழ்களுக்குள் வெள்ளையானாள். யுவதி நீராவைக் குறித்து யுவனிடம் ஏதோ கூறினாள். யுவன் அவளை நோக்கி ஒரு பஜ்ஜியை நீட்டினான். நீரா மறுத்து தலையை ஆட்டினாள். நீரா தலை ஆட்டுவது போலவே யுவதியும் தலையை ஆட்டிப் பார்த்துக் கொண்டாள். கழுத்துத் தாமரை மலர் மாலை ஆடியது. ஒரு பெரிய தாமரையின் புற இதழ்கள் அசைவது போல அவள், அவள் உடைமைகள் அசைந்தன. காபியையும் முடித்து அவர்கள் கல்லாவுக்கு வந்தார்கள். யுவன் ஒரு ஐந்து ரூபாய் நோட்டுக் கொடுக்க ஐயர் சில்லறை கொடுத்தார்.

வாசற்படியில் நின்ற நீராவிடம் யுவதி சென்றாள். அவள் தலையைத் தடவிக் கொடுத்தாள். நீரா கழுத்தை நிமிர்த்தி, வெள்ளை விழிகளும், பற்களும் மின்ன யுவதியை அண்ணாந்து பார்த்தவாறு நிற்கிறாள். படத்தில் இயேசுவிடம் குழந்தைகள் இப்படி ஒண்டி நிற்பது என் நினைவுக்கு ஏனோ உடன் வந்தது. யுவதி திரும்பி யுவனிடம் ஏதோ கூற, அவன் ஐயர் அவனுக்குக் கொடுத்த சில்லறை அனைத்தையும் நீராவிடம் நீட்டினான்.

நீரா தலையை இப்படியும் அப்படியுமாக வேகமாக ஆட்டினாள். யுவதி போட்டிருந்த மாலையை தன் சின்ன விரலால் சுட்டினாள். யுவதி பின்னும் அதிகமாகச் சிரித்தவாறு தன் கழுத்துத் தாமரை மாலையை எடுத்து நீராவின் கழுத்தில் போட்டு விட்டு நகர்ந்தாள்.

குழந்தை ஆண்டாளைப் போல நின்றிருந்தது.

திடீரென்று எங்கிருந்தோ வந்தாள் அவள். காபி ஹவுஸ் வாசலில் நிற்பவள்.

"ஏண்டி மவராசன் கொடுத்த காசு வேணாமா உனக்கு....? மாலைதான் வேணுமா, பெரிய மகாராணி...." என்றவாறு குழந்தையின் முகத்திலும் முதுகிலும் அறைந்தாள்.

நீரா துடித்து அலறியவாறு விழுந்து சாக்கடையில் புரண்டாள். பெரியவள் குழந்தையின் மாலையைப் பிடித்து இழுத்து அறுத்து ரோட்டில் எறிந்தாள்.

எல்லாம் கணத்தில் நடந்து முடிந்தது. ஐயர் விக்கித்து உட்கார்ந்து விட்டார். நான் காபிக் கணக்கை நோட்டில் எழுதி விட்டு நடந்தேன்.


Wish Your Happy Deepavali

Study in london Via Malasiya



OUR OFFICIAL REPRESENTATIVE NOW IN SRI LANKA.

MAKE YOUR APPOINTMENTS TO GET AN ADMISSION.

Famous consultants since 1995
well recommended by satisfied students
Excellent training consultant
Hot line 24 hours services.

For Free Consultancy Contact:

CCC CITY COLLEGE OF COLOMBO

83-1/3, Galle Road, Colombo-06, Sri Lanka.
Tel: 01-553747/01-559074 Fax: 559074 E-mail: ccc@eureka.lk
Hotline: Faizar 0777-766616

# தீபாவளி வாழ்த்துச் சிறப்பிதழ்


எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இதயம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்
உங்கள் வெளிநாட்டுக் கல்விக்குச்
சிறப்பாய்
வழி காட்டுகின்றோம்.

**M.S.Lanka**
**Recruitment & Travels (pvt) Ltd.**
(L.L.No 1745)

379 - 2/2 (2 nd Floor)
Galle Road, Wellawatta, Colombo-6.
Tel:- 074- 513442, 074- 518928, 074- 519157.
Fax:- 074- 518928
E.mail:- mslanka @ wow.lk.



அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தீபாவளி வாழ்த்துக்கள்
உங்கள் கணனித்
தேவைகளைக் கவனத்துடன்
நிறைவேற்றுகின்றோம்.

**ITI**
379- 1/2, Galle Road, Colombo- 6
075-554973



அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
உளம் நிறைந்த தீபாவளி வாழ்த்துக்கள்.
கருத்தினில் நிறைந்தவர்களை சிரத்தையாய் வாழ்த்திட பொருத்தமான மடல்களுக்கு நாடுங்கள்.
இலங்கையின் முன்னணி, வாழ்த்து மடல்கள் தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களுமான

**Ransca Greetings**

No: 142,144, St.Antony's Mawatha, Colombo-13
T.P- 430125, 332678, 074-617294 E-mail -ransca @yahoo.com
எம்மிடம் வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அதிகப்படியான கட்டளைகளைத் (orders) திரட்டி வரும் விற்பனைப் பிரதிநிதிகளுக்கு விசேட சலுகையுமுண்டு.
வி.பி.பி. ஓடர்களும் உடனுக்குடன் அனுப்பப்படும்.



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
வனப்பூட்டும் தீபாவளி வாழ்த்துக்கள்

**சின்டர்லா**
**பியூட்டி பேஷன்**



மணப்பெண் அலங்காரம், கேக் வகைகள், பேஷியல், ஹேர் ஸ்டைல், ப்ளீச்சிங் போன்றவற்றிற்கான சேவைகள் இடம்பெறுவதுடன் வகுப்புகளும் நடைபெறுகின்றன.

அலுவலகம்:
7- 7/4, ஒச்சாட் கட்டிடம், தரைமாடி,
காலி வீதி, கொழும்பு-6.
தொ.பே: 074-514298 Hot: 0777-316453
உரிமையாளர் தனா



அன்பர்கள்,
ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
ஒளியூட்டும் வளமான
தீபாவளி
வாழ்த்துக்கள்.



விழி உங்களிடம்
அதன் ஒளி
எங்களிடம்

அப்பலோ ஒப்ரிசியன் **APPOLO OPTICALS**

317B காலி வீதி,
வெள்ளவத்தை
கொழும்பு-6.,
தொ.பே: 074-516609

No- 298 A, George R.De Silva Mw,
(Khairaz Complex),
Kotahena, Colombo- 13
T.P:- 074-610459




அன்பர்களுக்கும், நண்பர்களுக்கும்,
வாடிக்கையாளர்களுக்கும் இனிமையான
தீபாவளி வாழ்த்துக்கள்
மத்திய கிழக்கு நாடுகளில் நித்தியமான
வேலைகளைப் பெற்றுச் சென்றிட நம்பிக்கை
நிறைந்த முகவர்கள்.

**Jeseem Travels**
Labour Licence #1774

No: 93, S.Mahinda Mawatha,
Maradana, Colombo-10,
Sri Lanka.
Tel: 074-720017, 074-718198
Fax: 074-720017




தீபத் திருநாளைக் கொண்டாடும் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் வளமான தீபாவளி வாழ்த்துக்கள்



"அலங்கார விளக்குகளின்
அற்புத வடிவங்களின்
அதிசயச் சுரங்கம்"

**PHENOMENAL Lighting**



Phenamenel
Trading Co...,
50,54 1/1, 1 st Cross street,
Colombo-11.
T.P:- 336398, 324879
Tele Fax: 94-1-449698.

Importers of
Crystal Lamps,
Pendent Lamps,
Ceiling Mounted Lamps,
Guest Room Lamps,
Table Lamps,
Mirror Lamps, wall Lamps.






**ARE YOU READY TO BE ADMIRED**

PROFESSIONAL SERVICES OFFERED...

- Bridal Dressing
- Facials & Skin Treatments
- Aroma Facial & Therapy
- Wedding Cakes & Flowers
- Conducting Classes For Individual & Groups



SHADOWS-0777362331

**Nalenis** INSTITUTE OF AROMA, HERBAL THERAPY & BEAUTY CLINIC
31/8, Sulaiman Terrace, off Jawatte Road, Colombo 05
Tele: 503138 Fax: 594500 Mobile: 0777-383846

# மொஸ்கோ நாடகரங்கில் நடந்த பணயக் கைதி நாடகம்



விடுவிக்கப்பட்ட ஒரு பெண் தனது உறவினரைக் கட்டியணைத்துக் கொள்கிறார்.





அரங்கிற்குள் இருந்து தீவிரவாதிகளால் விடுவிக்கப்பட்ட பெண் ஒருவர் அரங்க வாசலை விட்டு கைகளை உயர்த்தி சமிக்ஞை செய்தவண்ணம் வெளியில் வருகிறார்.



இந்தக் கடத்தல் நாடகத்துடன் சம்பந்தப்பட்டதாக நம்பப்படும் முக்கிய செச்சினியத் தீவிரவாதி ஒருவரின் புகைப்படம். இவர் அடையாளம் காணப்படாத இடமொன்றில் குர்ஆன் லெப்டொப் கம்பியூட்டர், மற்றும் செல்போன் ஆகியவற்றுடன் அமர்ந்திருக்கிறார். ரஷ்யாவில் கடத்தல் நாடகம் அரங்கேறிக்கொண்டிருந்த சமயத்தில் கட்டாரின் அல்-ஜெஸீரா தொலைக்காட்சி இந்தப் படத்தை ஒளி பரப்பியது.

**செ**ச்சினியா போராளிகள் குழு ஒன்று ரஷ்யாவின் தலைநகரமான மொஸ்கோவில் உள்ள நாடக அரங்கம் ஒன்றில் நாடகம் பார்த்துக்கொண்டிருந்த சுமார் 1000 பேரை கடந்த 23 ஆம் திகதி இரவு முதல் பணயக் கைதிகளாகப் பிடித்துவைத்துக் கொண்டு செச்சினியாவிலுள்ள ரஷ்யப்படைகள் ஒரு வாரத்திற்குள் அங்கிருந்து வெளியேறவேண்டுமென கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

மொஸ்கோவிலுள்ள பிரமாண்டமான கலையரங்கம் நாட்ஸ் ஒஸ்த். சனிக்கிழமை இரவு இங்கு ஒரு நகைச்சுவை நாடக அரங்கேற்றம் இடம்பெற்றது.

வெளிநாட்டவர்கள் உட்பட 1000ற்கும் மேற்பட்டவர்கள் அதனை இரசித்துக் கொண்டிருந்தனர்.

இலங்கை நேரப்படி இரவு 11 மணியளவில் 40முதல் 50 பேர் வரையிலான ஆயுதம்தாங்கிய போராளிகள் அரங்கத்தின் திரையை உடைத்துக்கொண்டு பிரவேசித்து அங்கிருந்த சகலரையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர்.

அதிகாலையில் 24 குழந்தைகள் 2 கர்ப்பிணிப்பெண்கள் உட்பட 180 பேர் ஆயுததாரிகளால் விடுவிக்கப்பட்டனர்.

62 வெளிநாட்டவர்கள் உட்பட மேலும் சுமார் 1000 பேர் வரை இந்த அரங்கத்திற்குள் போராளிகளின் பிடியில் சிக்கியிருந்தனர்.

இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் நேரம்வரையில் ரஷ்ய அரசாங்க அதிகாரிகளுக்கும் அரங்கத்திற்குள் இருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையில் பேரம்பேசல்கள் நடைபெற்றக்கொண்டிருந்தன.

செச்சினியாவிலுள்ள ரஷ்யத் துருப்புக்களை ஒரு வார காலத்திற்குள் வாபஸ் பெற வேண்டுமெனத் தீவிரவாதிகள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

கலையரங்கத்திற்குள் புகுந்துள்ள தீவிரவாதக்குழுவில் 20க்கும் மேற்பட்ட பெண்கள் தமது உடல்களில் குண்டுகளை கட்டிக் கொண்டு எதற்கும் தயாரான நிலையில் காத் திருப்பதாக விடுவிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பெண்கள் செச்சினியாவில் ரஷ்ய இராணுவம் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் மனைவிமார் என்று செச்சினிய போராளிகளுக்கு ஆதரவான இணையத்தளமொன்று தெரிவித்துள்ளது.

மண்டபத்தை ரஷ்யப் படையினர் சுற்றி வளைத்திருந்தனர்.

அதிரடித் தாக்குதல் நடத்த இராணுவம் உள்ளே நுழைந்தால் 1000 பேருடன் மண்டபத்தை தகர்த்து விடுவோம். எங்களில் ஒருவர் காயமடைந்தாலும் பத்து பணயக் கைதிகளை கொல்வோம் என்று இந்தப் போராளிகள் மிரட்டி வருகின்றனர்.

செச்சினியா ரஷ்யாவுக்குச் சமீபமாகவுள்ள மிகவும் சிறிய வளம் மிக்க ஒரு நிலப்பரப்பு. இங்கு பெரும்பான்மையாக முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.

ரஷ்ய அரசாங்கத்திற்கும் செச்சினியாவில் சுதந்திர நாடு கோரும் போராளிக்குழுக்களுக்குமிடையில் கடந்த ஒரு தசாப்த காலமாக யுத்தம் இடம்பெற்று வருகின்றது.

இதுவரை காலத்தில் செச்சினியக் குழுக்களால் மொஸ்கோவின் இதயப் பகுதியில் நடத்தப்பட்ட மிகவும் துணிகரமான தீவிரவாத நடவடிக்கை என இந்தப் பணயக்கைதிகள் விவகாரம் நோக்கப்படுகிறது. ■

தகவல் பெட்டி

# ஸ்னைப்பர்மேன் கைது

**மூ**ன்று வார காலமாக வாஷிங்டன் நகர மக்களையும் பொலிஸாரையும் திணற வைத்துக்கொண்டிருந்த மர்மத் துப்பாக்கி தாரியைப் புதனன்று இரவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த நபர் ஜோன் அலன் மொஹமட் என அடையாளம் காணப்பட்டிருக்கிறார். இவருடன் கூட இருந்த ஜோன் லீ மால்வோ என்றவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

புறநகர்ப் பகுதியில் வாகனமொன் றில் உறங்கிக் கொண்டிருந்த சமயம் கொலைகளுக்குப் பயன்படுத்தியதாக நம்பப்படும் ஸ்னைப்பர் துப்பாக்கியுடன் இவ்விருவரும் கைது செய்யப்பட்டனர்.

ஜோன் அலன் மொஹமட் சில காலத்துக்கு முன்னர் இஸ்லாத்தைத் தழுவியவர் என்றும் அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றியவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கைதுசெய்யப்பட்ட ஸ்னைப்பர் மேன் ஜோன் அலன் மொஹமட் மற்றும் அவரது சகா.

இவர் அமெரிக்க இராணுவத்தில் கடமையாற்றிய சமயம் குறிபார்த்துச் சுடுவதில் மிகவும் திறமை காட்டியிருக்கிறார். அதே துறையில் பயிற்சியும் பெற்றுள்ளார்.

223 றைபிள் துப்பாக்கியைப் பயன்படுத்துவதில் இவர் இராணுவத்திலிருந்த சமயம் மிகத் திறமை காட்டியதாகவும், 40 இலக்குகளில் 36 ஐச் சரியாகப் பார்த்துச் சுட்டு விருது பெற்றிருக்கிறார் என்றும் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

எவ்வாறெனினும் இந்த நபர் ஏன் இப்படிப் பொதுமக்களைச் சுட்டார் என்று தெளிவான தகவல்கள் வெளியிடப்படவில்லை. இவரது கொலை வெறி குறித்துக் குடும்ப உறுப்பினர்கள் அதிர்ச்சி வெளியிட்டுள்ளனர்.

இந்த நபருக்கு இரண்டு மனைவிகள், நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர். தற்போது 2 மனைவிகளையும் விவாகரத்துச் செய்துள்ளார்.

இவர் இத்தகைய கொலை வெறியராக இருப்பார் எனத் தான் நம்பவில்லை என இவரது முன்னாள் மனைவிகளில் ஒருவர் பொலிஸாரிடம் கூறியிருக்கிறார்.

தற்போது 41 வயதான ஜோன் அலன் மொஹமட் வளைகுடாப் போரின் போது அமெரிக்க இராணுவத்திற்காகப் போரிட்டவர்.

அமெரிக்க சமஷ்டி புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவர் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் மரண தண்டனை வழங்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. ■

# சினேகாவின் கடிதப் பிரச்சனை

"கண்டபடி கடிதம் எழுதி இரசிகர்கள் கலாய்ச்சிடுறாங்க. இதனால ஷூட்டிங் முடிஞ்சு வீட்டுக்கு வந்தாலே நிம்மதி இல்ல. தமிழ்நாட்ல எங்கேயோ இருக்கிற ஆடியன்சுக்கு எப்படித்தான் என் அட்ரஸ் தெரியுதோ தெரியல" இப்படி வியந்து குழம்புகிறார் சினேகா. ஆனால், தனக்கு இரசிகர்கள் கடிதம் எழுதுவதற்கு வசதியாக ஒரு போஸ்ட் பாக்ஸ் நம்பரைக் கொடுத்திருந்தார்.

இதைப் பார்த்த ஒரு பத்திரிகையாளர், நாசூக்காக ஒரு இடத்தில் சினேகாவின் வீட்டு முகவரியை எழுதிவிட்டார். இதனால் ஏகப்பட்ட கடிதங்கள் குவிந்துள்ளதாம். எப்படிப் பதில் எழுதுவது எனத் தெரியாமல் குழம்பிப் போன அவர், பேசாமல் வீட்டையே இரகசியமாக மாற்றிவிடலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறாராம்!




## கார்த்திக் நடிக்கும் 'இன்று'

தீவிரவாதத்தை முற்றிலுமாக அழிக்க வேண்டுமானால் அதற்குத் துணை போகும் புல்லுருவிகளை இன்றே களை எடுக்க வேண்டும் என்பதைச் சித்தரிக்கும் படமாக உருவாகிறது 'இன்று'. படத்தின் நாயகன் கார்த்திக். ஜோடி தேடும் படலம் நடந்து வருகிறது. நாசர், 'தலைவாசல்' விஜய், டெல்லி கணேஷ், 'பிரமிட்' நடராஜன், அஜய் ரத்னம், மதன்பாப் ஆகியோரும் நடிக்கிறார்கள். கேத்தி மல்டிமீடியா மற்றும் காஷ்யம் புரொடக்ஷன்ஸ் இணைந்து வழங்கும் இப் படத்தின் படப்பிடிப்பு இம்மாத இறுதியில் தொடங்குகிறது.

## தீபாவளியில் வெளிவருகிற...

அண்ணன் தம்பி பாசத்தை மையமாகக் கொண்...
இப் படத்தில் டீக்கடை ஊழியராக நடித்துள்ள...
பாடியுள்ளார். அவருக்கு ஜோடியாக ந...
இவர்களுடன் ஆசிஷ் வித்யார்த்தி, மோனிகா, ...
பொன்னம்பலம், சத்யப்பிரியா உட்பட பலர் ...
வடிவேலுவுக்கு இரட்...

# சினிவி...

## சிரிக்க வைக்கும் மம்மூட்டி

மம்முட்டி கண்கலங்கிக் கதை கேட்டு நடிக்க ஒத்துக்கொண்ட படம் 'சத்யமூர்த்தி' ஆனால் படம் பார்ப்பவர்களுக்கு இடைவேளை வரை சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாகிவிடுமாம். இதுவரை அவருக்கு இருந்த இமேஜை மாற்றி இந்தப் படத்தில் முதல் பாதி சிரிப்பு, பின் பாதி உருக்கம் என்று ஃபார்முலா போட்டிருக்கிறார் பட டைரக்டர் அமுதேஷ்வர். அதைப் புரிந்து கொண்டதாலோ என்னவோ மம்முட்டி அதிகபட்சமாகப் படத்துக்கு ஒத்துழைக்கிறார்.

"அந்த ஒத்துழைப்பில் வடிவேலுவின் பங்கும் இருக்கிறது" என்கிறார் இயக்குநர். மம்முட்டியும் வடிவேலுவும் புது காம்பினேஷனில்

காமெடி...
"அதே...
காமெடி...
ரசிக...
முதல...
காதலி...
இடைவேளை...
வயதுப் பெ...



## நம்பரை மாற்றும் ஷாம்

சினிமாவில் நடிக்க வந்த நாள் முதல் இன்று வரை தன் செல்போன் நம்பரைப் பத்து முறையாவது மாற்றிய ஒரே ஹீரோ ஷாம் மட்டுமே! "ஏன் இப்படி" என்று கேட்டால், "ரசிகைகள் தொல்லை தாங்க முடியவலை" என்கிறார். சரி, "ரசிகைகளுக்கு இவரது செல்போன் நம்பர் எப்படித் தெரியுமாம்?" கேட்டால் பதில் சொல்லத் தெரியவில்லை. தற்போது அவரைத் தொடர்புகொள்ள முயன்ற அவரது பி.ஆர்.ஓவும் வெறுத்துப் போய்விட்டார். ஒன்று... ஷாம் செல்போன் நம்பர் மாறியிருக்கும். அல்லது... அவரது செல்போன் ஆஃப் செய்யப்பட்டு இருக்கும். அதுசரி.. போன் வாங்குவது மற்றவர்களிடம் பேசுவதற்காகத்தானே? இப்படித் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் இருந்தால்... தகவல் பரிமாற்றம் எப்படி நடக்கும்? பாலா படப்பிடிப்பில் இருக்கும் யாராவது இந்தச் செய்தியை ஷாம் காதில் ஓதுங்கள். அப்போதாவது திருவாய் மலர்கிறாரா என்று பார்ப்போம்!



...
...
போ...
தனது...
தர ...
வளியன...
'ஏப்ரல் ...
களைப் ...
முத்தக் காட்...
நடிக்கத் த...
என்னைத் தே...
'ஏப்ரல் மாத...
அனைத்து முத்த...
எடுத்துவிட்டால் ...
'பார்த்திபன் கனவு' ...
திறகுப் பஞ்சம் வந்...
என்கிறார்கள்!

## விஜய்யுடன் அமீஷா, மீரா ஜாஸ்மின்

இந்தியில் தாறுமாறாகக் கலக்கிக் கொண்டிருக்கும் அமீஷா பட்டேலுக்கு ஏற்கனவே பிரஷாந்த் ஜோடியாக நடித்த 'என்ன விலை அழகே'...படம் வெளியாகாதது வருத்தமோ வருத்தம். எப்படியும் தமிழ்ப் படவுலகைக் கண்டபடி கலக்கிப்புடணும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் அவர், சேரன் உதவியாளர் ஜெகன் இயக்கும் 'கீதை' படத்தில் விஜய் ஜோடியாக ஒப்பந்தமாகியுள்ளார். இன்னொரு கதாநாயகியாக நடிக்கும்படி மீரா ஜாஸ்மினிடம் கேட்டபோது "மும்பைக்காரி இருக்கிறப்ப... எனக்கென்ன பெருசா வேலை இருக்கப் போகுது?" என்று தாறுமாறாகப் பேசிவிட்டாராம். என்றாலும், விஜய்கூட நடிப்பதற்குத் தூதுவிட்டுக் கொண்டிருப்பதால், எப்படியும் கீதையில் மீரா ஜாஸ்மின் நடிப்பார் என்றே தெரிகிறது!

## இரசிகர்க...

## விஜயகாந்தின் தீபா...

நாலூறு லொகேஷன்களில் ... படம். இரு ஹீரோயின்கள் இ... இல்லாத படம். வித்தியாசமான ... ஹீரோ தோன்றும் படம். இ... எதற்கு என்கிறீர்களா? விஜயகாந்... 'ரமணா' படத்துக்குத்தான் இ... சிறப்புகளும்!

இப் படத்தில் புரொபசராக நடிக்கிற... அவருடன் சிம்ரன், ஆஷிமா, யூகிசேது, வி... ராஜேஷ் உட்பட பலர் நடிக்கின்றனர். இ... வெளிவருகிறது.

## ...றது பகவதி

...தயாராகும் படம் 'பகவதி'
...விஜய் ஒரு பாடலையும்
...ருப்பது ரீமாசென்
...ாசல்' விஜய், இவரக,
...டித்திருக்கிறார்கள்.
...வேடம்.

...செய்திருக்கிறார்களாம்.
...ஜோராமா, சசக இவர்களின்
...ரொம்ப காலத்துக்குப் பிறகு
...படும்" என்றார் அவர்.
...தியிலேயே மம்முட்டியைக்
ரம்யா கிருஷ்ணன்
...குப் பின் பதினாறு
...னுக்கு அம்மாவாக
...கிறார் இந்தப்
படத்தில்.

# "சினிமாவில் ரொம்ப ஜாலி!"--சொல்கிறார் ஷெரீன்

ஒட்டுமொத்த இளைஞர்களையும் தன் பக்கம் வளைத்துப் போடும் ஷெரீன், முதல் படத்திலேயே 'ஓகோ' என்று பிரபலம். நிஜத்தில் பன்னிரண்டாம் வகுப்பு மாணவி. தான் நடித்த முதல் படம் வெளிவருமா, வராதா என்ற ஏக்கத்தில் இருந்தது ஒரு காலம். இப்போது அவருக்குத் தூங்கவே நேரம் இல்லை. "கல்லூரியில் நான் எதையெல்லாம் செய்தேனோ அதைத் தான் இப்போது சினிமாவில் நடித்து வருகிறேன். ஷூட்டிங் போய் வரும் போதெல்லாம் கல்லூரிக்குச் சென்று வந்ததும் ஞாபகம் வருகிறது" என்று இளமையும் துள்ளலும் துளியும் குறையாமல் பேசுகிறார் ஷெரீன்.

**• சினிமாவில் நுழைந்தது பற்றிச் சொல்லுங்கள்?**

அம்மா மாடலிங் ஏஜென்சியில் வேலை செய்தாங்க. அவங்க மூலமா அறுபதுக்கும் மேற்பட்ட ஃபேஷன் ஷோ செய்தேன். அந்தச் சமயத்தில் 'துள்ளுவதோ இளமை' படத்தில் நடிக்க ஆர்ட்டிஸ்ட் தேடிய போது ஏஜென்ஸி மூலமா ஃக்ளிக் ஆனேன். அப்போ பத்தாம் வகுப்பு படிச்சேன். சினிமா என்றதும் முதலில் பயமா இருந்தது. சினிமாவில் நுழைஞ்சு, எனக்குக் கிடைச்ச கேரக்டரைப் பார்த்ததும், எட்டாம் வகுப்பு படிக்கும்போதே நடிக்க வராமப் போயிட்டோமிங்கிற எண்ணம் வந்துடுச்சு. அந்த அளவுக்கு சினிமாவில ஜாலி இருக்கு.

**• முதல் படமே உங்களுக்கு வெற்றிப் படமாக அமையும் என்று நினைத்தீர்களா?**

எல்லா நடிகையுமே தன்னுடைய முதல் படம் வெற்றி பெறணும்னுதான் நினைப்பாங்க. ஆனால், நான் அப்படி நினைக்கலை. ஏன்னா, அந்தப் படம் வெளி வருமா, வராதா என்ற சந்தேகம் எனக்கு இருந்தது. ஒவ்வொரு மாதமும் கஸ்தூரிராஜா சாருக்கு ஃபோன் செய்து, "எப்போ சார் படம் ரிலீஸ் ஆகும்? ரிலீஸ் ஆகுமா, ஆகாதா சார்"னு கேட்பேன். 'ஆயிடும்' என் பார் அவர். ஒரு வழியா படம் வெளியாகி ஹிட்டாச்சு. இப்போ நிறைய படங்கள் கிடைச்சிருக்கு.

# ப்ளீஸ் வெயிட்

பெற்றோருக்கு எச்சரிக்கையையும், அறிவுரையையும் வழங்குவதுடன் இளைஞர்களுக்கு இளமை விருந்தும் படைக்க இருக்கும் படம்.... 'ப்ளீஸ் வெயிட்'.

'துள்ளுவதோ இளமை' சாயல் அடிக்கவில்லை. +1 வகுப்பறையில் நடைபெறும் சம்பவங்களை வைத்து உருவாக்கப்பட்டுள்ளது இப் படம். இதில் ஜான்சன் என்பவர் கதாநாயகனாக அறிமுகமாகிறார்.

சென்னை ஆணழகன் போட்டியில் ஜெயித்தவராம் இவர். இவருக்கு ஜோடியாக மாடல் அழகி மீனா சின்ஹா நடிக்கிறார். இவர்களைத் தவிர, பாலாஜி, வையாபுரி, கோவை சரளா மற்றும் பலர் நடிக்கின்றனர்.



ரம்யாகிருஷ்ணா
படம்: ஜெயா



சூர்யா-ஜோதிகா
படம்: காக்க காக்க

## சினேகாவின் கொள்கை மாற்றம்

"முத்தக் காட்சிகளில் ...டிக்க மாட்டேன்" என ...ந்து வந்த சினேகா தற் ... ஸ்ரீகாந்துக்காகத் ... கொள்கையை விட்டுத் ...வந்துள்ளார். தீபா... வெளிவரவுள்ள ...த்தில்' பட ஸ்டில் ...ர்த்தால் சினேகா ...களில் தாராளமாக ...விட்டார் என்றே ...கிறது. ...தில்' படத்திலேயே ... காட்சிகளையும் ... அடுத்த படமான ... டத்திற்கு முத்தத் ...டப் போகிறது

## ...ளுக்கு ...ளி விருந்து!

...டமாக்கப்பட்ட ...த்தும் டுயட் ...- அப்பில் ...ளையும் ... நடிக்கும் ...

... விஜயகாந்த், ... ரியாஸ்கான், ... படம் தீபாவளிக்கு

## மினி சினி

* சம்மாவாச்சம் ஹீரோக்களுக்கு டெலிபோன் செய்து, "உங்க படத்துல ஏதாவது அக்கா, அண்ணி கேரக்டர் இருந்தா சிபாரிசு பண்ணுங்க" என்று தனக்காக வாய்ப்பு வேட்டையாடி வருகிறார் ரேகா. இப்படி வலியச் சென்று வாய்ப்புக் கேட்ட தன் பலனாகக் கைவசம் ஏழெட்டு படங்கள் வைத்திருக்கும் அவர், ஷூட்டிங் ஸ்பாட்டில் பழைய ஹீரோயின் பந்தாவை விடமாட்டேன் என்கிறாராம்.

* கே.எஸ். ரவிக்குமார் இயக்கும் 'வில்லன்' படத்தில் கை, கால் ஊனமுற்ற அநாதையாக நடித்துள்ளார் அஜித். இந்தப் படம் அவருக்கு விருதுகளை அள்ளித்தரக்கூடும் என்கிறது கோலிவுட் வட்டாரம்.

* டைரக்டர் லிங்குசாமி இயக்கும் படம் ஒன்றில் ஹீரோவாக நடிக்க இருக்கிறாராம் கமல்ஹாசன்.

* டி.வி. சீரியல்களில் முக்கிய இடம்பிடித்துள்ள நடிகை நிரோஷா, புதுப்படம் ஒன்றில் கதாநாயகனுக்கு அக்காவாக நடிக்கிறாராம்.

* திரைப்படக் கல்லூரி மாணவர்கள் உருவாக்கும் படம் 'கிஃப்ட்'. இப் படத்துக்கு வசனம் எழுதியிருப்பது பத்ரி. சன் டி.வி.யில் ஒளிபரப்பாகும் 'மாங்கல்யம்' தொடரின் இயக்குநர் இவர்.

* 'சொக்கத் தங்கம்' படத்தில் செக்கு ஆலை அதிபராக நடிக்கிறாராம் விஜயகாந்த். இவருக்கு ஜோடியாக நடிப்பது சௌந்தர்யா.

* 'காதல் கிசுகிசு' என்ற படத்துக்குக் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறாராம் பிவாசு. இப் படத்தின் ஹீரோ புதுமுகம் பாலா. ஹீரோயின் சார்மி. காதல் காட்சியே இல்லாத காதல் படமாம் இது.

* ஆதி பராசக்தி மூவீஸ் தயாரிக்கும் படம் 'தாயே புவனேஸ்வரி'. இதில் அம்மனாக நடிக்கிறார் சௌந்தர்யா. அம்மன் பக்தைகளாக வருகிறார்கள் குஷ்புவும் பிரேமாவும்.

* சாய்குமார் ஹீரோவாக நடிக்கும் இப் படத்தில் சத்யபிரகாஷ், ஜோதி லட்சுமி, ஜெயசித்ரா, விநுச்சக்கரவர்த்தி, செந்தில், வாசு விக்ரம், மலேசியா வாசுதேவன் உட்பட பலர் நடிக்கின்றனர்.

## கால மகள்

தீபங்கள் ஒளி வீச
திக்கெல்லாம் மணம் வீச
மரண தேவதையிடம் மண்டியிட்ட
நேரங்கள் ஓடி- இப் பூமி
இன்று புரிந்துணர்வால்
புதுப்பிக்கப்படுகின்றது- அதனால்
கால மகள் நம்பிக்கையோடு
காத்திருக்கிறாள்.

தீண்டாமை விட்டகன்று
தித்திக்கும் தீபாவளி
திகைப்பூட்டி வருகின்றது
மனிதம் இங்கு ஜனனமாகிவிட்டது-அது
மரணிப்பதும் ஜனனிப்பதும்
மனிதா உன் கையில் தானே- அதனால்
கால மகள் நம்பிக்கையோடு
காத்திருக்கிறாள்

இங்கு சில காலம்
பாட்டொலிகள் கேட்பதில்லை
வேட்டொலிகள் கேட்பதில்தான் -இன்று
பலகாரம் தித்திப்பை விட
பண்பான உள்ளங்கள் தித்திப்பூட்டுகின்றன
யுத்த நரகாசுரன்
செத்த கதை தெரிந்துவிட்டது- அதனால்
கால மகள் நம்பிக்கையோடு
காத்திருக்கிறாள்.
தீபங்கள் ஒளிவீச
திக்கெல்லாம் மணம் வீச
தீபாவளி வருகின்றது
புத்தாடையோடு தூய்மையான
எண்ணங்களையும் அணிந்து
மனிதா நீ இன்று நடைபயில்கிறாய்- அதனால்
காலமகள் நம்பிக்கையோடு
காத்திருக்கிறாள்.

பழனிவேல் குமாரி, சலங்கண்டி.

## விடியலைத் தேடி

கடந்த காலங்களில்
தொடர்ந்து வந்த
கசப்பான வாழ்க்கையும்
கசங்கிப் போன கனவுகளும்
கண்ணீரில் கரைந்த இரவுகளும்
இனியும் இல்லையே எமக்கு...
✲✲
தினந்தோறும் ஒரு
சமாதான விடியலுக்காய்
காத்திருந்தும்
விடிந்த பிறகும் இருட்டாகிப்
போன எங்கள்
வாழ்க்கைப் பயணத்தின்
இறந்த கால நினைவுகள்
அத்தனையும் எமக்குள்
இறந்தே போய்விட்டது...
✲✲
பாவப்பட்ட ஜீவன்களாய்
பரிதவிக்கவிட்ட இறைவா
நீ கொஞ்சம் இறங்கி வந்து
எம் கண்ணீருக்கு
விடை தரப்போகும்
தருணம் இதுவோ....
✲✲
விதி வரைந்த
பாவப்பட்ட உயிர்கள்
உடலைத் தாண்டி ஒரு உள்ளம்
இருப்பதாலே
இன்னும் புதிய ஒரு விடியலுக்காய்
காத்திருக்கிறது
✲✲
எமக்குள் இறந்து போன
நாளை மீதான நம்பிக்கை
மீண்டும் கட்டவிழும்
புதிய மொட்டாக
மலர்ந்துள்ளது
மீண்டும் ஒரு
விடியலை நோக்கி....!

து.பரிமளாதேவி, கலஹா.

## முடிவு

என் வாழ்வின் வசந்தங்கள்
புதைக்கப்பட்டுவிட்டன.
எனினும் என்னுள்ளம்
கண்ணீரை ஊற்றி நிற்கவில்லை.
எவரினது நல்வாழ்விற்கோ
நான் கரைவதையிட்டு
என்னுள்ளம் வாழ்த்தினை
வழி நீட்டிக் கொண்டிருக்கிறது.
❖❖❖
நாம் வாழ்வோம் என
என்னை அழைத்த நாயகியாளின்
வாழ்வு மாத்திரம் தேறிவிட்டது.
வாவென அழைத்த அவள் வார்த்தை
வாள் போல் வளர்ந்து முள்ளானதேன்
விருப்பத்தின் விழிப்பானவள்
வெறுப்பின் உறவானாள்-கண்ணே
என்னுள்ளம் பிரிக்கப்பட்டதேன்!
தந்திரம் உனது தாலாட்டானதேன்!
தனிமை என்னைத் தலைசூழ்ந்ததேன்!
❖❖❖
தாயாக தாலாட்டிக் கொண்டிருக்கிறாள்
தவறிச் சென்ற தாமரையாள்
தைரியமற்ற தங்கக் கிளியாள்
தயக்கமின்றித் தன்னலத்தோடு
வாழ்கின்றாள்.
வாழ்க-வாழ்க-வாழ்க.

-முஸம்மில் சதார்.

## இருந்தாலும்

பசுமை வெளிகளில் காற்று வாங்குகிறேன்
பட்சிகளின் பாஷைகளை மென்று நிதானமிழக்கின்றேன்
சில நேரம் என் காலடியில் சிக்குண்டு
சிதைந்து போகும் பூச்சிகள் பற்றியும் கவலைகொள்கின்றேன்
மனதை மல்லிகையாய் வைத்திருக்கின்றேன்
இருந்தாலும் முதுமையடைந்து உயிர் முறியமாட்டேன்
நான் மதுவில் கரைகின்றேன்.
❑❑
காதலியே கதியென்று காய்கின்றேன்
காதலுக்காக நிமிடங்களை கோர்க்கின்றேன்
காதலில் பூக்கும் அனுபவங்களை
கவிதைகள் நெய்து பௌத்திரப்படுத்துகின்றேன்
காலத்தை வென்று கலப்புவிவாகம் செய்கின்றேன்
இருந்தாலும் முதுமையடைந்து உயிர் முறியமாட்டேன்
புகையில் எரிகின்றேன்
❑❑
என் சமூகத்தின் விடுதலைக்காக
இருப்பின் முழுமையை பெறுவதற்காக
நான் போராடிக்கொண்டிருக்கிறேன்
என் தலைமுறையில் நான் மட்டும் எஞ்சியவனாக இருக்கிறேன்
இருந்தாலும் நான் முதுமையடைந்து உயிர் முறியமாட்டேன்
நான் ஆயுதங்களோடு உறங்கிக்கொள்கின்றேன்
❑❑
என் ஆசைகள் மிகப் பிரமாண்டமானது
நான் நடப்பதைவிட பறப்பதற்கே ஆசைப்படுகின்றேன்
இந்த உலகம் எனக்கு போதாது
வாழ்க்கை இன்னும் வாழ இருக்கின்றது
இருந்தாலும் நான் இளமையில் இறந்துபோகின்றேன்.

றகுமான்.ஏ.ஜமீல், மருதமுனை.

## தேன் கிண்ணம்

### பாழடைந்த வீடு

பற்றைகளும்
செடிகளும்
வீட்டைச் சுற்றி
விலங்கு போட்டுவிட்டன.
❁❁❁
பறவையின் சத்தமும்
பாம்பின்
வாடையும்
வாசலில் வரவேற்கிறது
❁❁❁
விமானக் குண்டு வீச்சில்
இடிந்த சுவரில்
சித்திரம் வரைந்துவிட்டது
பாசிகள்
❁❁❁
குளிர்ந்த நீர் தரும்
கிணறு கூட
சவக்குழியாக மாறியதற்கு
அதற்குள் இருக்கும்
எலும்புக் கூடுகளே சாட்சி
❁❁❁
கள்வனுக்காகவே
கண் விழித்திருக்கும் நாயும்
கொட்டிலிலிருந்து அசை போடும்
ஆட்டுக் குட்டியும்
இருந்ததற்கான எச்சங்களே இல்லை
❁❁❁
தென்றல் காற்று வீட்டை
மெதுவாக அரவணைக்க
நிலவின் வெளிச்சத்திலே
விடிந்திருக்கும் முற்றம்
இன்று இதற்குள்
இருண்டு விட்டது.
❁❁❁
அழுகையை நிறுத்த
ஆதரவாக இருந்த
ஊஞ்சல் கூட
உக்கிவிட்டது.
❁❁❁
கனவுகளைச் சுமந்து
வீடு பார்க்கச் சென்றேன்
கனவிலே பயமுறுத்தும்
சுவடுகள் எனக்குள்
❁❁❁
பாழடைந்த வீட்டை
பணத்தினால் மேம்படுத்தலாம்
❁❁❁
இன்னும் ஒரு யுத்தத்தை தாங்க
எம் தேசத்திற்கு சக்தி இல்லை.

ஆர்.சுதன், பிரான்ஸ்.

## மனசாடுது

உன் காதுகளில்...
கதைபேசி குலுங்கும்..
காதுப் பூ மேல..
என் பார்வையெல்லாம்..
பட்டுத் தெறித்து..
உன்னில் தொலைந்து
போயிற்று
◆◆◆
உன் காலைப் பிடித்து
கெஞ்சும்..
வெள்ளிக் கொலுசுகளுக்கும்..
உன் மேலதாண்டி..
காதலாம்..
◆◆◆
நீ சிரிப்பதைக் கண்டு..
வாடிப்போகும்..
மலர்களுக்கு..
உன் சிரிப்பால் தான்
அற்ப ஆயுசு என்பதை..
தெரிந்திருக்க
நியாயமில்லை..
◆◆◆
உன் கூந்தலின்..
கறுப்பைக் கண்டுதான்..
மேகங்களுக்கும்..
மனவேதனையோ..
மழையாய்..
அழுகிறது..
◆◆◆
நான் பிடிக்க..
வேண்டிய..
உன் கைகளை..
வளையல்கள்
எதற்கடி..
கெட்டியாய்..
பிடிக்கணும்..
◆◆◆
பாவாடையும்..
சட்டையும்..
உனக்கு..
என்ன வடிவாய்..
இருக்கிறது..
◆◆◆
காற்றசைத்திடும்..
உன் தாவணியின்..
மேலதாண்டி..
என் மனசாடுது....


என்.சஹாப்தீன், மட்/பிறைந்துரைச்சேனை.

## எமனுடனோர் சமர்!

வலிக்கிறது மனசு:
வந்து போன நிந்தனைகளை
நினைத்து! நினைத்து!
✖✖
கோழி சீய்த்துப் போன
குப்பையாய்
குதறப்பட்டுக் கிடக்கிறது
இதயம்!
✖✖
கொள்ளளவு மீறிய
காற்றினை
உள்வாங்கிய பலூனாய்
உடைந்து போனது
உயிர்க்குமிழ்!
✖✖
நேசித்த
சந்நிதியே
நெருப்பாய் மாறி
சபித்து விட்டுப் போனால்...
✖✖
சொல்லொணாத் துயரில்
அல்லலுறும் மனசு
ஆறுதலுக்காய்
எங்கு போகும்...?
✖✖
சீண்டிப் பார்க்கும்
நின் நினைவுகளின்
சித்திரவதைகளை
வேண்டாமென்றும் சொல்லாது
வேதனைகளையும் கொல்லாது
✖✖
எத்தனை
நாட்களுக்குத்தான்
எமனுடன்
சமரிடுவது...?
✖✖
செத்துப் போக
எத்தனித்தேன்
முத்துரதமே- நீதான்
சித்தத்திலிருந்து 'கொண்டு
சீர் குலைக்கிறாய்
என்னை!

து.பிரபாஹர், ஹப்புத்தளையூர்.

## பேனா நண்பர்கள்



பெயர்: கே.எம்.சசிகுமார்
வயது: --
முகவரி: No.78/3, Lane No. 05, Westren Soltren Road, Puttalam.
பொழுது போக்கு: வழமையானவை



பெயர்: பி.கண்ணா
வயது: --
முகவரி: 85/சி, காலி வீதி, தெகிவளை.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: Rilal Deen. K.A.
வயது: 26
முகவரி: DTE OF PSY OPS, ARMY HEAD QUARTERS, P.O.BOX 553, COLOMBO.
பொழுது போக்கு: வானொலி, பேனா நட்பு

## நினைத்து, நினைத்து சிரிக்க

"ஒரு மாதம் நான்
நிம்மதியா இருப்பேன்...."
"ஏன்... வெளியூர்
போறியா?"
"இல்லை... என் மனைவி
தீபாவளி சேலை எடுக்க
கடைக்கு
போயிருக்கா..."





சொர்க்கத்திற்கும் நரகத்திற்கும் இடையிலுள்ள தடுப்புச் சுவர் இடிந்து விழுந்து விட்டது. சொர்க்கத்தின் பாதுகாப்பாளர் செயின்ட் பீட்டர் நரகத்திலுள்ள சாத்தானை அழைத்து இடிந்து போன சுவரைக் கட்டச் சொன்னார். அதற்கு சாத்தான், "என்னிடமுள்ள இன்ஜினியர்கள் எல்லாம் பிஸியாக இருக்கிறார்கள். உங்களுடைய ஆட்களை வைத்தே சுவர் கட்டச் சொல்லுங்கள்" என்று மறுத்துச் சொல்ல, உடனே செயின்ட் பீட்டர், "நீ சுவர் கட்டித் தரவில்லை என்றால் உன் மீது வழக்குத் தொடருவேன்" என்று மிரட்டினார். அதற்கு சாத்தான், "வக்கீல்கள் அனைவரும் என்னிடமிருக்கிறார்கள். வக்கீலுக்கு நீங்கள் எங்கே செல்வீர்கள்?" என்றான் சிரித்தபடி.

### ஏகப்பட்டது நடக்குதுங்க.



அரசியல் பிரமுகர் ஒருவர் மாலையில் வீடு திரும்பியதும், மனைவியிடம் மகிழ்ச்சியோடு, "நான் இன்றைக்கு இரண்டு நல்ல காரியங்களைச் செய்தேன்" என்றார்.

"என்னென்ன?" என்று மனைவி கேட்க, "ஒன்று நான் இன்றைக்கு நடந்து, போகும் போது, வீதியில் கல் ஒன்று கிடந்ததைப் பார்த்து அதைத் தூக்கி ஓரமாகப் போட்டேன். இன்னொரு நல்ல காரியம். வீதியோரத்தில் இரத்தம் ஒழுக விழுந்து கிடந்த ஒருத்தரை மருத்துவமனையில் சேர்த்தேன். இப்படி இரண்டு நல்ல காரியங்கள்"

"அது சரி, அந்த மனிதர் இரத்த வெள்ளத்தில் கிடந்தாரே, அவர் மீது என்ன மோதியது?" என்று மனைவி ஆவலுடன் கேட்க,

"வேறென்ன? நான் வீதியில் ஓரமா எடுத்துப் போட்ட கல்தான்" என்றார் அரசியல் பிரமுகர்.

## கவிதை நெஞ்சங்களுக்கு!

இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக, குறிப்பிடத் தக்க கவனத்தைப் பெற்றுள்ள ஈழத்து இளைய தலைமுறைக் கவிஞர்கள் இருவரின் கவிதைகளைத் தருகிறோம். **இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாகத் தருகிறோம்.**

### புதிய ஏற்பாடு

நெடுநாள் முன் நிகழ்ந்த
புத்தரின் புன்னகைக்குத்
தாமதமாகவே
'சக்தி'யிடமிருந்து
சமிக்ஞை கிடைத்தது.

பொக்கிரான் அதிர்ச்சியில்
வாஷிங்டனில் தொங்கிய
இயேசுவின் சிலுவை
விரிசலுற்றது.

கோபமுற்ற இயேசு
இந்தியாவை இழுத்துவந்து
சிலுவையிலிட்டார்.

மோனிகாவின் கண்ணடிப்பால்
கலைந்து போன தவம்
சாபமாய் மாறிப்
போய் விழுந்தது சூடானில்.

தெறித்து விழுந்த
சாபத்தின் துகள்கள்
இடதுகளின் கண்களை உறுத்த
காண இயலவில்லை
அருகில் கிடந்த செம்மணிக் குழிகளை.

வயிறு வெடித்துப் பிணங்கள் மிதக்கும்
கங்கை நீர் தெளித்து
புனிதப்படுத்துவீர்
உன் கக்கங்களின் மயிர் சிரைத்து
ஆடைகளின் அழுக்ககற்றி
சிதைந்து போன உன்
செருப்புகளைச் செப்பனிட்ட
எமதால் தொடப்பட்ட இடங்களை.

பல்லி மூத்திர வீச்சமடிக்கும்
கர்ப்பக்கிரகத்து இருட்டு மூலையில்
வெளியில் நிறுத்தி வைக்கப்பட்ட
எங்கள் குரல்களின் வலி மீதெழும்பும்
பொருள் புரியாப் பார்ப்பானின்
மந்திர முணுமுணுப்பு
செவி மடுத்திருப்பது
உன்னைப் பொறுத்தவரை சாமி
எனக்கு அது என்
துரட்டியில் அள்ளித்
தூரக் கொட்டும்
மலம்.

திவாகர்.



### மனம்படுவெளி-மொழி

உன்னுடன் நானும்
என்னுடன் நீயுமாய்
பொருதிய முடிச்சுக்கள்
இறுக-

தருவிக்கப்பட்ட எல்லைகளை
மீறு.

மெல்லிய வார்த்தைகளால்
மிதக்க நெருங்கும்
பெயர் தெரியா மிருகங்களின்
பிடியை
உதறு.

அபத்தமான எண்ணங்கள் கூடி
கைகோர்க்க எத்தனித்து
உரம் ஏற்றும்
அவன்.

பூச்சுக்களால் நிரவும் காயங்கள்.

தைக்கப்பட்ட உதடுகளைப்
பிரித்து கலைத்துப் போடு
கேள்விகளை.

எரிந்துகொண்டேயிருக்கும்
உணர்வுகளால் அமைதியடைய
மறுத்து, மறுத்து,
சுழலும் உருவம்.

முகங்களை எதிர்கொள்ள
அஞ்சி
தொடுசல் இன்றி விழுகிறது
ஒரு........

ஜெபா.

## சிறப்புக் கவிதை

கற்சுறாவின் கவிதையொன்று

திடப்பட்டுப் போனோம்
வெகுவாய்,
செக்கல் இருட்டில்
கனவுகளை மெய்ப்பித்து.

எம்மீது பழி போடாதிருக்க
பாதிக் கனவை காண்பித்து
தவறினோம்.

அச்சாப் பிள்ளைகள்.

மீதிக் கனவில்
தின்று,
புணர்ந்து,
குடித்து,
கவிதை எழுதி,
குழந்தைகளிடம் காண்பிக்க
இன்னும் இன்னுமாய் சாகுபடி.

சொன்ன குறை நினைக்க
வேண்டாம்.

சொகுசாய் படுத்துறங்கி
சுதிபட்ட பூனை
நெரிபட்டு நெருப்பில் விழ
துடிக்குமா? சொல்.

பின் எதுக்காய்,
கனவும்...
கவிதையும்...
மயிரும்...
மீதியும்...

படு.

மல்லாந்த படுக்கை.

கால்விரிய
பதம்பார்த்து
குறி தள்ளும் நாயே!

தெருக்கரையில்
இன்னும் கறள் ஏறாக் கோதுகளின்
துலங்கல் திடுக்கிட்டு
தூக்கம் கலைகிறது.

தொடர் தூக்கம்
இசைவு
அறுந்து போனால்
கனவொன்று வருமா?
கழுதாய்!.

# தீபாவளி வாழ்த்துச் சிறப்பிதழ்


**Nature Way**

மணப்பெண் அலங்காரம் Hair Styles, Facials, Wedding Cake Structures, Birthday Cakes, Rich Cake, Sety Back, Church Hall Arrangements போன்ற வற்றிற்கான ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் வகுப்புகளும் இடம் பெறுகின்றன.

சகல திருமண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
Luxme Thanancheyan,
12 3/4 Station Road, Wellawatta.
Tel: 505325.

தீபங்களேற்றும் தீபாவளி நாளில் நண்பர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் இனிதான வாழ்த்துக்கள்

மணப்பெண் அலங்காரம் உள்ளிட்ட அனைத்து அழகுக்கலை சேவைகளுக்கும்

**Saahe Bridal Dressing**
Beauty Care

Mrs. Kumuthini Kumarasamy
No. 1, 2nd Floor, Vaverset Place, Colombo-06.
T.P: 506385, Mobile: 078-611055

தீபாவளியினைக் கொண்டாடும் அனைத்து நெஞ்சங்களுக்கும் எம்.டி.குணசேனா கம்பனியினரின் கனிவான வாழ்த்துக்கள்

"வாசிப்பு மனிதனைப் பூரணப்படுத்தும்"

**எம்.டி.குணசேனா**
இல.217,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு-11.

தீபாவளியினைக் கொண்டாடும் அனைத்து நெஞ்சங்களுக்கும் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

OIS
OASIS INTERNATIONAL SCHOOL
217, Olcott Mawatha,
Colombo-11.

அமைதிச் சூழலில் தீபாவளியை அமோகமாய்க் கொண்டாடும் அனைவருக்கும் எழிலான வாழ்த்துக்கள்

YOGI
BEAUTY PARLOUR
LADIES BEAUTY CARE
HOME SCIENCE ACADAMY

மணப்பெண் அலங்காரம், சகலவிதமான அழகுக்கலை, மனையியல் போன்ற சேவைகளுடன் வகுப்புக்களும் இடம்பெறுகின்றன.

தொடர்புகளுக்கு:-
75, அம்மன்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021222 2796.

உள்ளங்களைத் திறந்து வைப்போம்
தீபக் காற்று சுதந்திரமாய் உள் வரட்டும்
வருகின்ற காற்றினிலே எம்
வாழ்த்துக்களும் கூட வரும்.

உங்கள் அறிவுத் தேடலை
நிறைவேற்றிக் கொள்ளும்
ஆழமான வாசிப்புக்களுக்கு

**Millenium Book Land**
465 /1, Gall Road, Colombo-3
Tel: 589606
Fax: 589460

**கலைஞர்கள் கையேடு**

எமது நாட்டில் பல்வேறு துறைசார்ந்த கலைஞர்களினதும் மற்றும் பல்வேறு சேவைகளையும் வழங்குகின்ற தனியார்களினதும் நிறுவனங்களினதும் முழு விபரங்களையும் உள்ளடக்கிய சர்வதேச தரத்திலான கையேடொன்றினை மிக விரைவில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. கீழே குறிப்பிடப்படும் துறைசார்ந்த கலைஞர்கள், நிறுவனங்கள் தொடர்பு கொள்ளவும்.

1. திருமண அலங்கார நிபுணர்கள்
2. புகைப்படக் கலைஞர்கள்
3. மலர் அலங்கார விற்பனையாளர்கள்
4. இசைக் கலைஞர்கள்
5. நடனக் கலைஞர்கள்
6. அறிவிப்பாளர்கள்
7. குறுந்திரைப்பட நடிகர்/ நடிகைகள்
8. ஒலி/ ஒளி அமைப்பாளர்கள்
9. சோதிடர்கள்
10. வரவேற்பு மண்டபங்கள்
11. ஆடையகங்கள்/ நகை மாளிகைகள்
12. அச்சகங்கள்
13. உணவு விநியோகம் செய்வோர் (கேட்டரிங்)
14. திருமணச் சேவைகள்
15. தையற்கலை நிபுணர்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்:
**திருமதி நளினி சிவகுமாரன்**
01-503138, 077- 383846



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

வவுனியா குடிமக்களின் நலன் கருதி

**RAY BAN OPTICIANS**

தமது புதிய கிளையினை வவுனியாவில் திறந்திருக்கின்றார்கள்.

- தகுதி வாய்ந்த கண் சிகிச்சை நிபுணரின் சேவை
- டிஜிட்டல் PD பரிசோதனை
- விரைவான சேவை
- இறக்குமதி செய்யப்பட்ட பிறேம்கள் (Frame)
- முதல் 100 வாடிக்கையாளர்களுக்கு 30% தள்ளுபடி.

57, முதலாம் குறுக்குத் தெரு, வவுனியா.

415, டொக்கியாட் வீதி, திருகோணமலை.
தொ.பே:- 026-22116

தலைமை அலுவலகம்
81, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-11.
தொ.பே:- 01- 327003, 01-449762.


# வரம் தந்த தீபாவளி

இந்துக்களின் எண்ணிலாப் பண்டிகைகளில் முருகன், சக்தி, காளி என்று பல தெய்வ வழிபாடுகள் நினைவுக்கு வந்தாலும், கண்ணன் பெயரும், அவனுக்கு உகந்த லட்டு, தேன்குழல், முறுக்கு, சீடை மற்றும் பலவித இனிப்புகளும், பாயாசமும் நினைவுக்கு வருவது, தீபாவளியின் போது! இந்த ஆண்டு தீபாவளியின் போது இந்த நாளின் பின்னணி நினைவுகள் குறித்துச் சில சுவையான செய்திகள் வாசக அன்பர்களுடன் பகிர்ந்து கொள்ளும் தருணம் வந்து விட்டது.

தீபாவளி என்றவுடன் கிருஷ்ண பரமாத்மா, சத்தியபாமா, நரகாசுரன் பெயர்கள் நினைவுக்கு வராமல் போகா. சத்தியபாமா தேர் ஓட்டக் கிருஷ்ணன் அம்பெய்ய, கெட்டிக்காரனான நரகாசுரன், உயிர் பிரியும் முன், தான் இறக்கப் போகும் சதுர்த்தசி திதியை, 'ஒரு பண்டிகை போலக் கொண்டாட வேண்டும்' என்றொரு வரத்தைக் கண்ணபிரானிடம் பெற்றுக் கொண்டு விட்டான். "வரம் தந்தேன்" என்று கீதாசாரியன் வாய் மொழிந்ததும், அவர் வாக்கை நிறைவேற்றப் பிற்கால மக்கள் மங்கள ஸ்நானம் செய்து, இனிப்பு வகைகளை உண்டு கொண்டாட வழி வகை செய்து கொண்டு விட்டார்கள். யுத்த களத்தில் தேரோட்டிய சத்தியபாமா பிராட்டி, சந்தடி சாக்கில் தன்னுடைய 'நாட்டில் உள்ள ஒவ்வொரு பெண்ணும் வண்ணப் புடவைகளில் அன்று மிளிர வேண்டும்' என்ற வரத்தையும் வாங்கி வைத்து விட்டாள். தீபாவளி கோலாகலத்தின் அடிப்படை இதுதான்.

அந்தக் காலத்தில் அயோத்தி, மாயா, மதுரா, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை போன்றவை முக்கிய ஏழு நகரங்களாகக் கருதப்பட்டன. மாயாவும், அவந்தியும் இன்று எந்தப் பெயரில் உள்ளன என்றே தெரியவில்லை. அயோத்தி இராமர் காலத்துக்கு முன்னரே பிரசித்தம். (வட) மதுரா, கம்சன் ஆண்டு, மாண்ட நகரம். கங்கை வடக்கு நோக்கிப் பாயும் இடத்தில் அமைந்து, அதில் ஸ்நானம் செய்கிறவர்களின் பாவத்தைக் கழுவும் இடமாக உள்ளது காசி. துவாரகை, கிருஷ்ணபரமாத்மா ஆண்டு வந்தபோது தனது ஏழை 'நண்பன்' குசேலர் கையுறையாகக் கொண்டு வந்த அவலை மென்று தின்று, குசேலரைக் குபேரனாக்கிய புண்ணிய பூமி! ஆனால் 'காஞ்சி' என்றழைக்கப்படும் காஞ்சிபுரம் இந்த 2002 ஆம் ஆண்டில் கூட பட்டுப்புடைவை உற்பத்திக்கு விசேஷமான இடம் பெற்று, கண்ணன் சத்யபாமா தேவிக்குத் தந்த பட்டுப் புடைவை வரத்தை வருடத்தின் 365 நாள்களிலும் ஒளி வீசச் செய்துவரும் நகரம்.

"பெண்மை வெல்க வென்று கூத்திடுவோமடா!" என்ற கவியின் வாக்குப்படி, சத்தியபாமா தேவி பெற்ற தனி வரத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக, வரம் சத்தியமானதைச் சாத்தியமாக்கிக் காட்டி, ஏழை ஆண்களின் நிவேதன காணிக்கையாகப் பட்டுப்புடவைகள் இன்றும் கொடி கட்டிப் பறந்து கண்களைக் கூச வைப்பதும் இந்தக் காஞ்சியில்தான்.

ஔவையாரின் எளிமை நமக்கெல்லாம் நன்கு தெரிந்த ஒன்று. இருந்தாலும் அவர் ஒரு பெண் என்பதையும் நாமறிவோம். பாரி, காரி, சேரமான் போன்ற வள்ளல்கள் அவருக்கு எத்தனையோ பரிசுப் பொருள்கள் தந்துள்ளார்கள். அதற்காக ஔவை மூதாட்டி அவர்கள் மீது பல பாடல்கள் பாடியுள்ளார். ஒரு சமயம் யாரோ ஒரு பெண்பிள்ளை ஔவையாருக்கு நீலச்சிற்றாடையை வழங்கிவிட்டார். உடனே பாரி, காரி, போன்றோர் செய்த உதவிகளுக்கு இந்த நீலச்சிற்றாடை சமானமாக அவரால் கருதப்பட்டது! பாட்டி பாடின பாட்டைக் கேளுங்கள்.

**"பாரி பறித்த பறியும், பழையனூர்க்**
**காரி கொடுத்த களைக் கொட்டும்-சேரமான்**
**"வாராய்" என அழைத்த வார்த்தையும், இம்மூன்றும்,**
**நீலச் சிற்றாடைக்கு நேர்"** என்று பாடி விட்டார்.

அந்த 'நீலச்சிற்றாடை நீலப்பட்டாடை'யாக இருக்கலாம் என்பது ஊகம்!

# தீபாவளி வாழ்த்துச் சிறப்பிதழ்


அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
தீபங்களேற்றும் தீபாவளி வாழ்த்துகள்
புத்தளத்தில் தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு....
Mujibas Jewellers
No.8 A. 1st. Cross Street, Puttalam.
Phone: 032-66102 Res: 032-66914
Mobile: 077-327243.

தீபாவளியினைக் கொண்டாடும்
வாடிக்கையாளர்கள்
அனைவரையும் மனதார
வாழ்த்துகின்றோம்.
மத்திய கிழக்கு நாடுகளில்
தொழில் வாய்ப்பினை
தொல்லையில்லாது பெற்றிட.
NAZEER TRAVELS
(Labour Licence No. 1761)
81, S. Mahinda Mawatha, Maradana, Colombo-10.
Tel:- 074 722382 Fax:- 074- 722381.

அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்
UTHAYAN VIDEO
Video Filming, Photo Graphy,
Computermixing, Album makers.
ஓர்சாட் திருமண மண்டபம்
பதிவு செய்யும் இடம்
7-7/4, Ground Floor,
Orchaad Bulding,
Galle Road, Colombo-06
Tel : 554841 Hot : 0777-355297

Wish you Happy Deepavali From
The Bridal Designers of
Sinhala- Hindu - Western - Pakistani
Bettans
Bridal & Beauty Care
No. 25, Suvisudharama Road,
Colombo-06.
Tel : 01-366193

தீபத்திருநாளைக் கொண்டாடும் எம்
வாடிக்கையாளர்கள் அனைவரையும்
உளமார வாழ்த்துகிறோம்.
ஆண், பெண் இருபாலாரும் கடல்
கடந்து கண்ணியமாய் திரவியம் தேட
நம்பிக்கையான முகவர்
Town Recruitment
Man Power
38- 2/1 Symonds Road,
Maradana, Colombo-10.
Tel- 074-720545, Fax - 074- 721046

தீபாவளியினைக் கொண்டாடும்
அனைவருக்கும் எம் கனிவான வாழ்த்துக்கள்
PIONEER BICYCLES
☆ உச்ச தரம் வாய்ந்தது ஏனெனில் தரத்தினில் கவனம் கொள்கின்றோம்.
☆ நவீன தொழில் நுட்பம்
☆ தரச்சிறப்பு வாய்ந்த உதிரிப்பாகங்கள்
☆ உத்தரவாதமளிக்கப்பட்ட 6 வருடத்துக்கு அப்பாலும் நீடித்துழைக்கக் கூடியது.
☆ Ladies, Sports, Standard, MTB, 12", 16" & 20" Box Bicycles.
PIONEER CYCLE CO.
62, Dam Street, Colombo-12. Tel: 541020

Wish You Happy Deepavali from
GULF WINGS
TOURS & TRAVELS
ஆண், பெண் இருபாலாருக்கும் குவைத், டுபாய்,
சவுதி அரேபியா, கட்டார், ஓமான், பஹரேன்,
நாடுகளில் வேலைவாய்ப்பு
VACANCIES IN
Construction, Cleaning, Catering, Maintenance
Companies & Hotels
பதிவு இல: 1084
14 நாட்களுக்குள் வெளிநாடு புறப்படுவதற்காக கடவுச்சீட்டு, புகைப்படங்கள் (வர்ணப் புகைப் படம்-பெரிய படம் 3, சிறிய படம் 8) வளைகுடா வாகன சாரதி அனுமதிப் பத்திரத்துடன் வரவும்
Tel:0777-340669 Fax: 01-732745
E.Mail: gwttsamr@sunnet.lk
CC: gwttsamr@yahoo.com
இல. 309 2/2,
2வது மாடி,
காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு-06.

IMMEDIATE
VACANCIES
IN U.A.E, DUBAI
Our client in U.A.E needs
following categories immediately.

| CATEGORY | QUANTITY | SALARY (DHS) |
|---|---|---|
| Furniture Carpenters | 25 | 800 |
| Shuttering Carpenters | 25 | 800 |
| Steel Fixers | 25 | 800 |
| Masons | 25 | 800 |
| Building Electricians | 10 | 800 |
| Industrial Electricians | 10 | 800 |
| Drivers | 10 | 800 |
| Agriculture Labourers | 20 | 600 |
| General Cooks | 2 | 800 |
| Assistant Cooks | 2 | 700 |
| Kitchen Helpers | 2 | 600 |

Free food, accommodation, medical facilities and free both way air ticket & contract period is 03 years. Please call over to our office for an interview during weekdays with original educational and experience certificates, passport and 4 passport size photographs.
FEROZ SHAH FOREIGN
EMPLOYMENT AGENCY
(Labour License No: 1763.)
287 3/1, SISIRA AND SISIRA BUILDING,
HAVELOCK ROAD, COLOMBO-06.
AL/1763/ADV/01/2002

அன்பர்களுக்கும், நண்பர்களுக்கும்,
வாடிக்கையாளர்களுக்கும்
இதயங் கனிந்த தீபாவளி
வாழ்த்துக்கள்
ரெக்னோ பிரின்ட்
581-1/2, காலி வீதி
வெள்ளவத்தை,
கொழும்பு-06.
தொ.பே. 0777-301920

அன்பர்கள், வாடிக்கையாளர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
இன்பம் பொங்கும் இனிய தீபத் திருநாளில்
மங்களம் கிடைக்க மனமார வாழ்த்துகிறோம்.
மணப்பெண் அலங்காரம் wedding cakes,
Facial உள்ளிட்ட சகல அழகுக்கலை
சேவைகளுக்கும், வகுப்புக்களுக்கும்
SMMART LOOK
Mrs. Sumithra Mahajothy
No. 3-1/1, Lotus feet,
42nd Lane, Colombo-06.
Tel: 360963


## திருடிப் பிடிபட்ட ஹொலிவுட் நடிகை




பிரபல ஹொலிவுட் நடிகையான வினோனர் றைடர், கலிபோர்னியாவிலுள்ள சுப்பர் மார்க்கெட் ஒன்றில் பொருட்களைத் திருடியது தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கேள், இன்டரப்டர், லிட்டில் வுமன் உட்பட சுமார் 30 படங்களில் நடித்திருக்கும் வினோனா ஹொலிவுட்டில் மிகவும் பிரபல்யமான ஒரு சினிமா நட்சத்திரம்.

கடந்த திங்களன்று கலிபோர்னியாவிலுள்ள பெவலி ஹில்ஸ் கடைத் தொகுதிக்குச் சென்ற இவர் அங்கு பொருட்கள் பலவற்றைக் களவாகத் தனது பைக்குள் திணித்ததை வீடியோக் கமெரா மூலமாக அவதானித்த பாதுகாப்பு ஊழியர்கள் விசாரணையின் பின்னர் இவரைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

ஆனால், டைரக்டர் ஒருவரின் அறிவுறுத்தலின் பேரில் சினிமாக் காட்சி ஒன்றிற்கான ஒத்திகையில் ஈடுபட்டுள்ளதாகக் கூறியிருக்கும் இந்த நடிகை தனது செயலுக்காக மன்னிப்புக் கோரியிருக்கிறார். எவ்வாறெனினும் இவர் களவெடுத்த பொருட்களின் பெறுமதி 5560 டொலர்கள் எனக் கடைக்காரர்கள் கூறியுள்ளனர்.

வினோனா கடைக்குள் பிரவேசித்ததும் சிறிது நேரத்தின் பின்னர் பொருட்களை ஒவ்வொன்றாகக் களவெடுத்து அவற்றின் பாதுகாப்பு ஸ்டிக்கர்களைக் கழற்றி எறிந்துவிட்டு, பொருட்களைத் தனது பைக்குள் திணிப்பதை வீடியோக் கமெரா மூலம் அவதானித்த பின்னர் வினோனாவைப் பின்தொடருமாறு கூறியதாக இந்தக் கடைத் தொகுதியின் பிரதான பாதுகாப்பு ஊழியர் தெரிவித்துள்ளார்.

ஒரு திரைப்படத்திற்குப் பல மில்லியன் டொலர்கள் சம்பளமாக வாங்கும் இந்த நடிகை வெறுமனே 5000 டொலர்கள் பெறுமதியான பொருட்களைக் களவெடுத்துச் சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறார்.

# பிளாஸ்டிக் கனவுகள்

★ பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொண்ட பின்னர் ஸ்பெஷலாக மருந்துகள் எதுவும் சாப்பிட வேண்டுமா?

"அப்படியெல்லாம் ஸ்பெஷல் மருந்துகள் என்று எதுவுமில்லை. வழக்கமாகச் சிபாரிசு செய்யப்படும் ஆன்டிபயாட்டிக் மருந்துகளே போதுமானது. அதுவும் தேவைப்பட்டால் மட்டும்தான். இம்ப்ளாண்ட் சர்ஜரி போன்ற அசாதாரண சிகிச்சைகளின் போது மட்டும் ஸ்பெஷலாக மருந்துகளைச் சிபாரிசு செய்வோம்."

★ மயக்க மருந்து (அனஸ்தீஸியா) கொடுத்துத்தான் அறுவை சிகிச்சை செய்வீர்களா?

"ஆமாம்! வழக்கமாக அப்படித்தான் செய்வோம். சிலரால் வலியைத் தாங்க முடியாமல் போகலாம். இது போன்ற அசாதாரண சூழ்நிலைகளைத் தவிர்ப்பதற்கு மயக்க மருந்து கொடுப்பது வழக்கம்தான்."

★ 'முதுமை மறைந்து இளமை திரும்ப 'பிளாஸ்டிக் சர்ஜரி' என்று சொல்கிறார்களே... இது உண்மையா?

"ஓரளவு வயதானவர்களுக்கு முகம், மற்றும் உடலின் வேறு பகுதிகளில் தோலில் சுருக்கங்கள் ஏற்படும். இதனால் முதுமை அடைந்தது போலத் தோற்றமளிப்பார்கள். இதைப் 'பிளாஸ்டிக் சர்ஜரி' மூலம் சரிசெய்துவிட முடியும். இதற்கு Face Lifting என்ற சிகிச்சை இருக்கிறது. இதன் மூலம், முகத்தில் உள்ள சுருக்கமான தோலை. இழுத்துப் பிடித்து 'ஸ்டிஃப்னஸை'க் கட்டி விடுவோம். வெளிநாடுகளில் இந்தச் சிகிச்சை ரொம்பப் பிரபலம். ஆனால், நம்மூரில் அவ்வளவாகப் பிரபலமாகவில்லை. இதைச் செய்து கொள்வதில் பலருக்குப் பயமும் கூட. இதைச் செய்து கொண்டவர்கள் இளமையாகத் தோற்றம் அளிப்பார்கள் என்பது உண்மைதான். ஆனால், தேர்ந்த மருத்துவரிடம் மட்டுமே இதனைச் செய்து கொள்ள வேண்டும்."

★ பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் தழும்புகளை நீக்க முடியுமா?

"முற்றிலும் நீக்க முடியாது. முற்றிலும் தழும்புகளை நீக்க முடியும் என்று வரும் விளம்பரங்கள் சுத்த 'கப்ஸா'. பிளாஸ்டிக் சர்ஜரி செய்யும் போது உண்டாகும் தழும்புகள் தவிர்க்க முடியாதது. இருப்பினும், தழும்புகளின் அளவைக் குறைக்க முடியும். ஆபரேஷனின்போது போடப்படும் தையலின் (Sutures) அளவைப் பொறுத்துத்தான் தழும்புகளின் அளவும் இருக்கும். மேலும் மருந்துகள் மூலம் தழும்புகளை இல்லாமல் செய்துவிடலாம் என்பதும் ஒரு தவறான எண்ணம். இதற்கென்று எந்த விதமான ஆபரேஷனும் கிடையாது.

இவை தவிர, பிளாஸ்டிக் சர்ஜரி பண்ணிக் கொண்டால், முகமே மாறிப் போகும் என்பதும் தவறான எண்ணம்தான். இருக்கிற ஒரிஜினல் முகத்தில் சில மாற்றங்களைச் செய்து பொலிவு பெறச் செய்யலாம். 'அவரைப் போல்' முகத்தை மாற்ற முடியும் என்று சொல்வதெல்லாம் கூட கற்பனையே."

★ பிளாஸ்டிக் சர்ஜரி செய்துகொள்ள எவ்வளவு நேரம் பிடிக்கும்?

"இது செய்யப்படும் உடலின் பகுதியையும், செய்முறையையும் (Procedure) பொறுத்த விஷயம். அரைமணி நேரம் முதல் ஒரு மணி நேரம் வரை செலவாகும். தோலில் செய்து கொள்ள அரை மணி நேரமே போதும். கைகளில் செய்து கொள்வது என்றால் நிறைய நேரம் செலவாகும்."

★ ஸ்டீராய்டு மருந்துகள் பயன் படுத்துகிறீர்களா?

"பொதுவாகப் பயன்படுத்துவதில்லை. சிலருக்குத் தழும்புகள் பெரிதாக வரும். 'Keloid Scar'என்பது அதன் பெயர். அது போன்ற சூழ்நிலைகளில் ஸ்டீராய்டு இஞ்செக்ஷன் போடுவோம். அதையும் சீராகக் கொடுப்போம். தழும்பைச் சீராக்குவதுதான் இதில் முக்கியம் என்பதால். லோக்கல் ஸ்டீராய்டுகள் தான் கொடுப்போம்."


செல்வாஸின் சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் Av

பெயர்:....................
முகவரி:....................
....................
தொழில்:....................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 09-11-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு சல்வார்?
மக்கொன வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

ஸாபிஹா ஸலீம்,
இல. 25, இந்திரிகொட, மக்கொன.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


நம் நாட்டுப் பெண்கள் ரொம்பவும்தான் முன்னேறிவிட்டார்கள். ஒரு காலத்தில் செக்ஸ் விஷயங்களில் பகிரங்கமாகப் பேசுவதையே அருவருப்பாக நோக்கிய இலங்கைப் பெண்கள் இன்று பெண் ஓரினச் சேர்க்கை தொடர்பாக செய்தியாளர் மாநாடு நடத்துமளவுக்கு நிலைமை முன்னேறி விட்டது.

கடந்த வாரம் கொழும்பு இன்டர்கொன்டிநன்டல் ஹோட்டலில் ஒரு வித்தியாசமான செய்தியாளர் மாநாடு நடைபெற்றது.

இலங்கை ஓரினச் சேர்க்கையாளர் சங்கமான "பயணத்தின் கூட்டாளிகள் சங்கத்தின் பெண் செயற்பாட்டாளர்களின் மாநாடு எதிர்கால செயற்திட்டங்கள், கடந்த கால முன்னேற்றங்கள் பற்றி நாட்டு மக்களுக்கு அறிவிக்கும் முக்கிய செய்தியாளர் மாநாடாக அமைந்திருந்தது.

பயணத்தின் கூட்டாளிகள் சங்கத்தின் தலைவர் சேர்மடி ரோஸ் உட்பட பெண்கள் ஒத்துழைப்பு அமைப்பு என்ற இந்த சங்கத்தின் பெண்கள் பிரிவு உறுப்பினர்களும், செயலாளர் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

தங்களது பாலியல் செயற்பாடு இலங்கை சமூகத்தினரால் அங்கீகரிக்கப்படாமல் இருப்பது குறித்து இந்தச் சங்க உறுப்பினர்களுக்குள் ஏகப்பட்ட கவலை காணப்படுகிறது.

ஜீன்ஸ்- ரீசேட்ஸ் அணிந்து கிட்டத்தட்ட ஆண்கள் போலவே அமர்ந்திருந்த பெண் அங்கத்தவர்கள் தமது அமைப்பு பெண் சமுதாயத்தின் பாலியல் சமூகப் பிரச்சனைகளை அணுகும் விதம் குறித்துப் பெருவாரியாக விளக்கமளித்தனர்.

ஆண்-பெண் உறவு போலவே பெண்ணுக்கும்- பெண்ணுக்குமிடையிலான பாலியல் உறவும் சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று பல்வேறு நியாய தர்மங்களைக் கூறி இந்த சங்க உறுப்பினர்கள் விவாதித்தார்கள்.

இவர்களது தர்க்கங்கள் நீண்டு கொண்டே சென்று கடைசியில் இந்த ஓரினச் சேர்க்கையைச் சமூகம் அங்கீகரிக்குமாயின் ஏராளமான குற்றச் செயல்கள் குறைந்து விடுமென்று கூடச் சொன்னார்கள்.

இலங்கையின் சட்ட அமைப்பு தங்களுக்குப் போதிய அங்கீகாரத்தைத் தரவில்லை என்பதும், அதைவிட தங்களைப் போன்ற ஓரினச் சேர்க்கையாளர்களை சமூகம் ஒரு வித்தியாசமான கோணத்தில் நோக்குகிறது என்பதும் இவர்களுக்குள் இருக்கும் பெரிய மனக்குறை. ஆனால், அதற்காகத் தளர்ந்து விடுவது போல் தெரியவில்லை.

இலங்கையின் சார்பில் இவர்கள் சர்வதேச ரீதியில் நடைபெறும் ஓரினச் சேர்க்கை மாநாடுகளில் கலந்துகொள்கிறார்கள். அங்கெல்லாம் இந்த "முக்கியமான பிரச்சனையை" எடுத்துச் சென்று நியாயம் தேடித் தரப் பலத்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

சட்டரீதியில் தங்களுக்கு இருக்கும் பிரச்சனைகளைத் தங்களால் தீர்த்துக் கொள்ள முடியுமென்ற நம்பிக்கை இவர்களுக்குள் இருக்கிறது.

இந்த உறுப்பினர்கள் இதற்கென ஒரு வித்தியாசமான வழிமுறையைக் கையாள்கிறார்கள். அதாவது, அரசாங்கத்திற்குள்ளும், எதிர்க்கட்சியிலும் இருக்கும் ஓரினச்சேர்க்கைக்கு ஆதரவான அமைச்சர்களை, எம்.பி.க்களை தனியாகச் சந்தித்து இதுபற்றிக் கலந்துரையாடுவது.



# "எங்களை வித்தியாசமான கோணத்தில் பார்க்காதீர்கள்!!"



செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட பயணத்தின் கூட்டாளிகள்

இத்தகைய சந்திப்புகளுக்குக் கடந்த அரசாங்கத்தின் காலத்தைப் போலவே இந்த அரசாங்கத்திலும் நல்ல வரவேற்புக் கிடைப்பதாக இவர்கள் சொல்கிறார்கள்.

பயணத்தின் கூட்டாளிகள் சங்கம் இந் நாட்டிலுள்ள பெண் ஓரினச் சேர்க்கையாளர்களுக்காகப் பல தரப்பட்ட பணிகளையும் ஆற்றி வருவதாக இந்தச் செய்தியாளர் மாநாட்டின் போது தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய பழக்கமுள்ளவர்கள் சமூகத்தால் ஒதுக்கப்பட்டாலோ, தமது வீடுகளில் பிரச்சனைகளை எதிர்கொண்டாலோ தங்களது அமைப்புடன் தொடர்பு கொள்ளுமாறு கூறுகிறார் பெண்கள் ஒத்துழைப்பு அமைப்பின் தலைவி கல்தெறா.

சமீபத்தில் குருநாகல் மாவட்டத்தின் றிதிஹம என்ற இடத்திற்குச் சமீபமாகவுள்ள ஒரு தோட்டத்தில் ஓரினச் சேர்க்கைப் பழக்கமுள்ள இரண்டு பெண்கள் தற்கொலை செய்து கொண்டமை குறிப்பிடத் தக்கது.

# அழகைக் கொடுத்த டாக்டர்

மெக்ஷிகோ தலைநகரான மெக்ஷிகோ சிட்டியில் மிகவும் பிரபல்யமான அழகுக்கலை நிபுணர் அவர். பெண்டாக்டரான அவருக்கு முழுப்பெயர் மிரியம் யூகி கவோனோ. டாக்டர் யூகி என்றுதான் எல்லோருக்கும் தெரியும். எப்பொழுதும் யூகியின் மருத்துவ மனையில் தங்களை அழகு படுத்திக் கொள்ள ஏகப்பட்ட கூட்டம் இருக்கும். எல்லோரும் பணக்காரர்கள். இருக்கும் அழகை இன்னும் அதிகப்படுத்திக் கொள்ளும் ஆசையுடன் டாக்டர் யூகியிடம் முகத்தைக் காட்டிக் கொண்டு அவர் கொடுக்கும் ரீட்மென்டுக்காக் காத்திருப்பார்கள்.

இத்தகைய பெண்கள் எவராலும் அறிந்துகொள்ள முடியாத ஒரு ஆபத்தான மன நோய், டாக்டர் யூகிக்குள் வளர்ந்துகொண்டிருந்தது.

தன்னிடம் அழகு சிகிச்சைக்காக வரும் பெண்களின் உடலில் சில ஹோமோன்களை அதிக பட்சமாகச் செலுத்துவதன் மூலம் அவர்களது அழகைக் கெடுக்கும் ஒரு வித்தியாசமான நோயை யூகி கொண்டிருந்தார்.

இவரிடம் சிகிச்சை பெற்ற பலருக்கு நாட்செல்லச் செல்ல முகம் வீங்கத் தொடங்கியது. மூக்கு, கண்கள் எல்லாம் சாதாரண அளவை விடப் பெருத்து ஏற்கனவே இருந்த அழகிய தோற்றத்தை இல்லாமலாக்கிக் கொண்டிருந்தன.



பாதிக்கப்பட்ட வெறோனிகா என்ற பெண் டாக்டர் யூகியின் புகைப்படத்தைக் காண்பிக்கிறார்.


பதறியடித்துக் கொண்டு வேறு மருத்துவமனைகளில் செக்கப் செய்தார்கள். முகத்திலுள்ள சில தசைநார்கள் அளவுக்கு மீறி வளரும் விதத்தில் பல ஹோமோன்கள் டொக்டர் யூகியினால் செலுத்தப்பட்டிருக்கிறது என்று அப்போதுதான் தெரியவந்தது.

இப்போது யூகி கைது செய்யப்பட்டிருக்கிறார். அவரிடம் சிகிச்சை பெற்ற பலர் என்ன செய்வது என்று தெரியாமல் அரச மருத்துவமனையில் அறுவை சிகிச்சைகளுக்காகக் காத்திருக்கிறார்கள்.



நேர முழுவதிலுமப் பாவி தன்னையே - உள்ளம்
நினைத்து மறுக்குதடி தங்கமே தங்கம்
தீர ஒரு சொலின்று கேட்டு வந்திட்டால் - பின்ப
தெய்வ மிருக்குதடி தங்கமே தங்கம்!

**சுப்பிரமணிய பாரதியார்–**



## பாப்பா முரசு சிறுகதை

# திருந்திய மன்னர்

**ம**ன்னர் மகுடபதியிடம் ஒரே ஒரு கெட்ட குணம் மட்டும் இருந்தது. அது புகழுக்கு மயங்கும் குணம்.

மன்னர் மகுடபதி 'இந்திரனே... சந்திரனே' என்று உச்சப் புகழாரம் விரும்புவர். ஒரு தடவை ஒரு புலவர், "மன்னா! நீ கடவுளுக்குக் கடவுள்" என்று பிதற்றியபோது, அவருக்கு ஒரு மூடை நிறையப் பொற்குவியலைக் கொடுத்து அனுப்பி வைத்தார்.

அன்றைய அரசாங்க அலுவல் முடிந்து மன்னர் ஓய்வுக்குப் புறப்பட்ட நேரத்தில் தலைமை அமைச்சர் மன்னரிடம் பேசினார். .

"மன்னா....! ஒரு விசயம்," "என்ன?" மன்னர் கம்பீரமாகக் கேட்டார்.

"உலகம் முழுவதிலும் உள்ள குடிகளானாலும் சரி, நீங்களே சிறந்தவர்..... உயர்ந்தவர்."

மன்னர் கம்பீரமாகத் தனது மீசையை முறுக்கிக் கொண்டார்.

"ஆனால்....?"

"என்ன ஆனால்.....?" சற்றே கடுப்பில் கேட்டார் மன்னர்.

"ஆனால் மன்னா! உங்கள் குடிமக்கள் உங்களைத் தெய்வமாகப் போற்றுகிறார்கள்."

"தெரிந்த விசயம்தானே அமைச்சரே.... ஆனால் நீர் சொல்ல வந்தது வேறு ஏதோ சேதி."

"உண்மைதான் மன்னா...

நான் சொல்ல வந்தது தங்களை இன்று அவையில் புகழ்ந்து பாடிய புலவர் ஒருவர் பற்றி."

"இன்று மட்டும் அறுபதுக்கும் மேற்பட்ட புலவர்கள் புகழ்ந்து பாடிப் பரிசினைப் பெற்றுச் சென்றிருக்கிறார்கள். நீர் எந்தப் புலவரைச் சொல்கிறீர்?"

"தங்களைக் கடவுளுக்கே கடவுள்' எனச் சொன்ன புலவரைப் பற்றி மன்னா."

"அதிலென்ன தவறு? அவர் தம் மனதில் பட்டதைச் சொல்கிறார்."

"இருக்கலாம் மன்னா, தங்களிடம் இருந்து கிடைக்கும் பொன்னுக்கும் பொருளுக்கும் அவர் ஆசைப்பட்டு அப்படி ஒரு அபாண்டத்தை அவிழ்த்து விட்டிருக்கலாம்."

"எது அபாண்டம்? என்னை அவர் கடவுள் என்று புகழ்ந்ததா?"

மன்னரின் குங்கும முகம் மேலும் சிவந்தது.

"மன்னிக்க வேண்டும் மன்னா.... கடவுள் என்று சொன்னால் கூட கண் கண்ட கடவுளாக நீங்கள் அந்தப் புலவருக்குத் தெரிகிறீர்கள் என்று விட்டு விடலாம்."

"பிறகு?"

"கடளவுளுக்கே கடவுள் என்று அவர் சொன்னார். கடவுளுக்கே கடவுள் என்பது எத்தனை பெரிய ஆபத்தான வார்த்தை என்பது தங்களுக்குமா தெரியவில்லை?"

"அது அந்தப் புலவர் கருத்து."

"அதை அப்படியே அனுமதிக்கும் போது, அது உங்கள் கருத்தாகவும் ஆகி விடுகிறதே மன்னா...."

"அவர் சொன்னதன் உட்பொருளை நான் அந்த நேரத்தில் சிந்தித்துப் பார்க்கவில்லை."

"பார்த்திருக்க வேண்டும் மன்னா... நிறை-குறை சீர் தூக்கி ஆராய்ந்து முடிவெடுப்பவரே மன்னர்."

"எனக்கே அறிவுரையா?"

"அது என் கடமை மன்னா"

"அப்படியானால் எனக்கு ஒரு கடமை இருக்கிறது. உடனடியாக உம்மை இந்தத் தலைமை அமைச்சர் பொறுப்பில் இருந்து விடுவிப்பது என் கடமை."

பதவியைப் பறிகொடுத்த தலைமை அமைச்சர் மன்னரிடம் விடை பெற்றுப் போய்விட்டார்.

இதனால் தலைமை அமைச்சர் பதவிக்குக் கடும் போட்டி இருந்தது.

சிபாரிசுகளுடன் மோதியவர்கள் பலர்.

கடைசியில் மன்னரின் ராணி சிபாரிசு செய்த குமரகுரு என்பவர் தலைமை அமைச்சர் ஆனார்.

குமரகுருவின் புகழ்ச்சியில் உலகமே குளிர்ந்துவிடும்.

அத்தனை அபாயகரமான மனிதர். பதவியைப் பொறுப்பேற்ற முதல் நாளே "கடவுளையே படைத்தவரே" என்று புகழ்ந்து மன்னரைக் குளிர்ச்சியில் உறையவே வைத்து விட்டார்.

மூன்று மாதம் ஓடியிருக்கும்.

அன்று காலை அரண்மனை முன்னாக ஒரே மக்கள் வெள்ளம்.

விசயம் மன்னருக்குப் போனது.

"குடிகளே எதற்காகத் திரண்டு வந்திருக்கிறீர்கள்?"

"எங்கள் உழைப்பின் பலனை அபகரித்து விட்டு, ஒன்றும் புரியாதது போல் எங்களிடம் எதற்காக இந்தக் கேள்வி?"

கூட்டத்தில் இருந்த ஒரு முதியவர் இப்படிச் சொல்லவும், அதிர்ந்து போனார் மன்னர்.

"உங்கள் உழைப்பை அபகரித்தேனா? என்ன உளறல்?"

"உளறல் இல்லை மன்னா... உலகமே வியந்து பார்க்கும் வகையில் உமக்கு ஒரு கோயில் கட்ட நீர் விரும்பியிருக்கிறீர். அதை நமது புதிய தலைமை அமைச்சர் எங்கள் தலையில் திணித்து விட்டார். பிரமாண்ட கோவிலுக்கு எங்கள் நிலங்களை அபகரித்து விட்டார். அதற்கான நட்ட ஈட்டுப் பணமும் தர மறுத்துவிட்டார். நீர் கடவு ளாக இரும். அதற்காக கோவில் அது இது என்று குடிமக்களாகிய எங்களின் பிழைப்பில் ஏன் மண்ணைப் போட வேண்டும்?"

மன்னருக்கு இப்போது புரிந்தது. புதிய தலைமை அமைச்சரை வரவழைத்தார். விபரம் கேட்டார். "அதாவது மன்னா.... உம் புகழ் உலகெங்கும் ஓங்க, அகிலமே உம்மைத் திரும்பிப் பார்க்க, நான் வகுத்த புதிய திட்டமே கோவில் கட்டும் முயற்சி மன்னா."

"யாரைக் கேட்டு இப்படி ஒரு முடிவெடுத்தீர்?"

"உமக்குப் பிடிக்கும் என்பதற்காக மன்னா...."

"புகழை வாயால் கேட்டு மகிழ்ந்ததற்குத் தண்டனையாக இதைக் கருதுகிறேன். என்னைக் கடவுளாக்கவும் வேண்டாம். கோவில் கட்டி என் குடிகளைத் துயரப்படுத்தவும் வேண்டாம். யாரங்கே?"

ஓடி வந்தார்கள் சேவகர்கள்.

"நமது பழைய தலைமை அமைச்சரை அழைத்து வாருங்கள். அவரிடம் எனது வருத்தத்தைத் தெரிவித்து மறுபடி தலைமை அமைச்சர் பொறுப்பை ஏற்க நான் அழைத்ததாக அழைத்து வாருங்கள்."

மக்களுக்கு இப்போதாவது மன்னர் திருந்தினாரே என்ற மகிழ்ச்சி.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **09.11.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **469**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 466

**பரிசுக்குரியவர்:**

**எஸ். ஏ. றஸானாஸ்,**
முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயம், கல்பிட்டி வீதி, குறிஞ்சிப்பிட்டி.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| **ஆப்தீன் அமீர்,** சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், பதுளை. | **எம்.எச். ஆர். றுமைஸா,** 43, நூர் மஸ்ஜித் அவனியூ, புத்தளம். |
| **இ. திருமகள்,** 41, சிவபுரி, திருகோணமலை. | **எஸ். உஷா நந்தினி,** அல்-பரகா சர்வதேச பாடசாலை, பண்டாரவளை. |
| **ரி. திவாகரன்,** புனித தோமியர் கல்லூரி, பண்டாரவளை. | **சு. யூட் நிதர்சன்,** 8, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம். |
| **ஜெ. அகிம்சா,** 208, ஹொரவப்பொத்தான வீதி, வவுனியா. | **தானிஷ் பாருக்,** அசோகா வித்தியாலயம், கண்டி. |
| **மு. கிஷாந்தன்,** நு/ தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை. | **நா. வியஸ்பி டினேஷ்,** 133, கல்லூரி வீதி, திருகோணமலை. |

## விடுகதைகளும் விடைகளும்

1. அருகருகே அவர்கள் இருந்தும் இணைவார்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை அவர்கள் யார்?
2. ஆழக்குழி வெட்டி அதிலோர் முட்டை போட்டு அண்ணாந்து பார்த்தால் தொண்ணூறு முட்டை அது என்ன?
3. ராத்திரி பூந்தோட்டத்தில் விடிய விடிய பூக்கள் அது என்ன?
4. பைக்குள் போட்டு பிள்ளை வளர்ப்பாள் பாசமுள்ள அம்மா அவள் யார்?
5. அண்ணன் தம்பி இருவர் அவர்கள் சுற்ற வேண்டியதோ பன்னிருவர் அவர்கள் யார்?
6. உயிரில்லாதவன் ஓசையில்லாமல் ஊர் முழுக்கப் பறந்தான் அவன் யார்?
7. கால் இல்லாதவன் ஆனாலும் வேகத்துக்கு குறையாதவன் அவன் யார்?
8. தின்றால் துவர்ப்பு தண்ணீர் குடித்தால் இனிப்பு அது என்ன?
9. ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம் அது என்ன?
10. ஒரு கூட்டுக்குள் இருவர் அணி

**விடைகள்.**

1. தண்டவாளம்
2. தென்னை- தேங்காய்
3. வானம்- நட்சத்திரங்கள்
4. கங்காரு
5. கடிகாரம்
6. காற்றாடி
7. பாம்பு
8. நெல்லிக்காய்
9. உள்ளங்கை
10. முட்டை.

## மேற்கத்திய ஊடுருவல்...

**மே**ற்கத்திய கலாச்சார ஊடுருவல் பல நாடுகளை எந்த மாதிரி பாதித்துள்ளது என்பதற்கு கீழேயுள்ள மூன்று சம்பவங்களுமே நல்ல உதாரணங்கள்.



மகாபாரதக் காலத்தில் போரின் போது, "பகல் நேரத்தில் மட்டுமே போரிடுவார்கள். பொழுது சாய்ந்துவிட்டால் யாரும் போர் ஆயுதங்களைத் தொடக் கூட மாட்டார்கள். இதே போல் தயார் நிலையில் இல்லாத எதிரிகளுடன் யாரும் போரிடவே மாட்டார்கள். இதே போர் நெறிமுறைகள் நமது நாட்டில் பல நூற்றாண்டுகள் இருந்தன. ஆனால் கிரேக்கர்கள் ஊடுருவிய பின்பு இந்த நெறி முறைகள் அடியோடு, தகர்க்கப்பட்டு விட்டது. எந்த நேரத்திலும் எந்த நிலையிலும் போர் புரியலாம் என்றாகி விட்டது.


ஐரோப்பியர்கள் மெக்சிகோ நாட்டில் நுழைவதற்கு முன்பாக அங்கு இருந்தவர்களிடம் பொய் பேசும் பழக்கம் மிக மிக அரிதாக இருந்தது. எதிரிகளை பயமுறுத்துவதற்காக அட்டைக் கத்திகளையே பயன்படுத்தினார்கள். ஆனால் ஐரோப்பியர்கள் நிஜ ஆயுதங்களைக் கையாண்டதால் அவர்களிடமிருந்து தப்பிக்கவும், தங்களுக்குள்ளேயே அடித்துக் கொள்ளவும், பொய் பேசுவதை மெக்சிகோ பழங்குடி மக்கள் கைவந்த கலையாக்கிக் கொண்டனர்.





தஹித் தீவில் வெள்ளைக்காரர்களின் வருகை உடல் நலக்குறைவை உருவாக்கிவிட்டது. வெள்ளைக்காரர்கள் இங்கே நுழைவதற்கு முன்பாக தஹித் தீவு மக்கள் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்துள்ளனர். பெரியம்மை, வயிற்றுப் போக்கு, பால்வினை நோய்கள் அவர்களிடம் இல்லை. குடிப்பழக்கமும் அந்த தீவு மக்கள் அறியாத ஒன்றாக இருந்தது. ஆனால் வெள்ளைக்காரர்களின் ஊடுருவல் மேலே சொன்ன எல்லா நோய்களையும் தீவில் வாழ்ந்த பழங்குடி மக்களிடம் கொண்டு வந்து சேர்த்து விட்டது.


## இந்த வாரப் புதிர்




முதலில் உள்ள இரு முக்கோணங்களையும் நன்றாக அவதானித்து மூன்றாவது முக்கோணத்தில் ? இடப்பட்ட இடத்தில் வரவேண்டிய எண்ணைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

## அறிவுத் தேடல்

சென்றவாரப் புதிரின் விடை:



# "யார் அந்த மோகினி...?"



சட்டென்று யாரோ தட்டிவிட்டாற்போல் எனக்கு விழிப்பு வந்தது. நேரம் அதிகாலை நான்கு மணி. இருட்டுக்குக் கண்கள் பழக்கப்பட, ஹொஸ்டலின் நிஜ வடிவங்கள் கண்ணுக்குப் புலப்பட்டன. நேரம் பார்ப்பதற்காக அடித்த சிறிய டோர்ச் லைட்டை அணைத்தேன். கட்டிலை விட்டு இறங்கினேன். நுளம்பு வலையைச் சுருட்டிக் கட்டிவிட்டு, இருட்டிலேயே பழக்கப்பட்ட இடத்திற்கு நடந்து சென்று சுவிச்சைத் தட்டினேன். அறை முழுவதும் பளீரிட்ட வெளிச்சத்தில், இரவு படித்துவிட்டு வைத்த புத்தகம், மார்பின் மேல் கவிழ்ந்து கிடக்க, பௌஸியா வாயைப் பிளந்தபடியே படுத்திருந்தாள். பக்கத்து கட்டிலில், பாதி விழிகள் திறந்திருக்கப் படுத்திருந்த பரீஸாவைப் பார்த்ததும், நெஞ்சுக்குள் சில்லென்று பயம் ஏறியது. திறந்திருந்த அவள் விழிகளுக்குள், கறுப்புப் பாகை காணாமற் போயிருக்க, பயத்தோடு கொஞ்சம் கூர்ந்து பார்த்தபோது மெல்லிய அசைவு நிம்மதியைத் தந்தது. அவர்களைத் தட்டி எழுப்பி அவர்களது சுகமான தூக்கத்தைக் கெடுத்தேன். பாத்ரூம் போகிறபோது பின்னாலே பௌஸியா தனது மட்டக்களப்பு பாஷையில் என்னைத் திட்டிக் கொண்டே வந்தது, இலேசான சிரிப்பைத் தந்தது.

பரீட்சை நெருங்கிக் கொண்டு வருகிறது. எனவே பாடங்களை மீட்டிப் பார்க்க வேண்டிய தேவை, தூக்கங்களுக்கு இடையிடையே "குட்பை"சொல்கிறது. மூவரும் முன் ஹாலுக்கு வந்து, பரவிக் கிடந்த கதிரைகளில் அமர்ந்து கொண்டோம். வழமையாக கேட்டருகில் அமர்ந்திருக்கும் காவற்காரரைக் காணவில்லை. வெளியே இன்னும் இருட்டு இருந்தது. பாடப் புத்தகத்தில் கவனத்தைப் பதித்துவிட்டு, இடையில் நிமிர்ந்து பார்த்தபோது திக்கென்றது. "இன்றைக்கு கேற் பூட்டப்படவில்லையா...?" என்று நண்பிகளைப் பார்த்துக் கேட்டேன்.

"அட, ஆமாம்"...! என்றார்கள், அவர்களும் அதிர்ச்சியுடன். அந்த "கேற்" திறந்து கிடந்ததிலிருந்தே சரியான கவனக் களைப்பான் ஆகிவிட்டது. இடையிடையே என்னையும் பார்த்துக் கொள்! என்று மூளைக்கு அறிவுறுத்தல் கொடுத்துக் கொண்டே இருந்தது. தெரு நாய் ஒன்று, நொண்டிக் கொண்டே ஓட பின்னாலேயே அதனைத் துரத்திக் கொண்டு இன்னொரு நாய் வந்தது. அங்கு அதைத் தவிர வேறு சத்தமில்லை. அந்த அமானுஷ்ய அமைதி, பயக்கலவைகளைப் பிசைந்து கொண்டிருக்க, சட்டென்று பிரேக் அடித்து நின்றது நாலரை மணிக்கு வழமையாக வரும் இ.போ.ச. பஸ் வண்டி. மூச்சுப் பிடித்து அந்த பஸ் அங்கிருந்து கிளம்பிய பிறகுதான், வெள்ளை நிற உடையில் அங்கொரு உருவம் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. மெல்ல அசைந்த அந்த உருவம், எங்கள் மூவரையும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்ளச் செய்தது.

தெருவிளக்கு ஒளியில் அந்த உருவம் எங்களை நோக்கி வந்து கொண்டிருப்பது தெரிந்தது. என்ன செய்வது என்று மூவருமே யோசித்தோம். பால் போன்ற வெள்ளை நிறத்தில் அழகான ஒரு பெண் முகம் தெரிந்தது. கேற் "கிறீச்" என்ற ஒலியுடன் திறந்து கொண்டது. அந்தப் பெண்ணின் கழுத்திலும் காதிலும் தங்க நகைகள் மின்னின. விரித்துப் போட்டிருந்த கூந்தல் இடுப்பு வரையும் தவழ்ந்து அவள் நடக்கும் போது அங்குமிங்கும் ஆடியது, சூழ்நிலையின் இறுக்கத்தை இன்னும் கனமாக்க நினைவை சட்டென்று இடறிற்று ஒரு பெண்...., வெள்ளை வெளேரென்ற சேலை, மின்னுகிற நகைகள், நீண்ட கூந்தலுடன்...., இந்த அகால வேளையில்...., மோகினியா...! நினைவு தப்பிற்று.

யார் முந்தினோம், என்று ஞாபகமில்லை. மூவரும் ஒரே நேரத்தில் கதிரைகளைத் தள்ளிக் கொண்டு எழுந்தோம். உடம்பின் ஒவ்வொரு நரம்பும் ஓடு...., ஓடு...., என்று விரட்ட, பின்னங்கால்கள் பிடரியில் அடிக்க ஓடிப் போய் எதிர்த்த அறையில் ஒதுங்கிக் கொண்டோம். பெருமூச்சுக்கள் தப்பித்தப்பி வந்தது. பௌஸியா பயத்தில் வாயுலர்ந்து போயிருந்தாள். நான் கொஞ்சம் தைரியமாகக் கதவு இடைவெளியால் பார்த்தேன். அந்த உருவம் எங்களுக்கு முதுகைக் காட்டியபடியே, அமர்ந்திருந்தது. ஒவ்வொருவராக மாறி மாறிப் பார்த்தோம். ஒரு தரம் பார்த்த பௌஸியா சடாரென்று நிமிர்ந்தாள். "ஏய்...., இப்போ காணலலைடி...!" அவசரமாக அவளை விலக்கிவிட்டு நாங்களும் பார்த்தோம். காணவில்லைத்தான். விடியும் வரைக்கும் நாங்கள் ஒருவரை ஒருவர் அணைத்தபடி அங்கேயே சுருண்டு கிடந்தோம்.

காலையில் ஹொஸ்டல் முழுக்க விஷயம் பரவிவிட்டது. எங்களிடம் கதை கேட்க வந்தவர்களிடம் கதாசிரியரைப் போல, நாங்கள் விவரித்துச் சொல்லிக் கொண்டிருந்தோம். எங்கள், கேற் காவற்காரர் நகத்தினைக் கடித்தபடியே பயத்தோடு எங்களைப் பார்த்தார். அவர் பதில் சொல்லியாக வேண்டுமே...நான் கோபத்தோடு திரும்பிக் கொண்டேன். "பௌஸியாவுக்கு காய்ச்சல் வேறு வந்திருக்கிறது...! நன்றாக அவர் மேலிடத்தில் வாங்கிக் கட்டிக் கொள்ளட்டும்."

காலை ஒன்பது மணியளவில் திடுதிப்பென்று வான் ஒன்றிலிருந்து இறங்கிய கூட்டமொன்று ஹொஸ்டலுக்குள் நுழைந்தது. அங்குமிங்கும் எதையோ தேடுவதைப் போல அலைந்த அவர்களிடம் நாங்கள் மூவரும் அழைத்துச் செல்லப்பட்டோம். "எங்கே அவள்...?" என்று பரபரத்தார்கள்.

"யாரைத் தேடுகிறீர்கள்...?" என்று கேட்டதும்,

"அழகான ஒரு இளம் பொண்ணு. வெள்ளைச் சேலை கட்டிக்கிட்டிருந்தா. முடி கூட நீளமா இருக்கும். முந்தி இந்த ஹொஸ்டலில்தான் தங்கிப் படிச்சிட்டிருந்தா. இப்போ அவளுக்குப் பைத்தியம். இங்கதான் இறக்கிவிட்டதாக பஸ் கண்டக்டர் சொன்னான். நீங்க கண்டீங்களா" என்று மூச்சுவிடாமல் ஒருவன் பேசினான். நாங்கள் நடந்ததைச் சொன்னோம்: அவர்கள் தவிப்போடு கிளம்பினார்கள். ஒரு இளம் பெண், அகால வேளையில்...., அதுவும் நகைகளையும் போட்டுக் கொண்டு எங்கே போயிருப்பாள். கவலையோடு நாங்கள் மூவரும், ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம்.

**எலமல் பொதை ஸனீரா காஸீம்**

# பெண்கள் குணமே இப்படித்தான்!

கம்பளையில் இருந்து பூண்டுலோயா செல்லும் மூன்று பஸ்களை இது வரை அவன் தவற விட்டுவிட்டான். நான்காவது பஸ்ஸிலாவது போகக் கிடைக்குமா என்ற சந்தேகத்தோடு "அனிதா...நீங்க அடுத்த பஸ்ஸிற்கு என்னோடு வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, நான் போகத்தான் போறேன்" என்று எரிச்சலோடு சொன்னவன் தலைத் தீபாவளிக்கு மாமியார் வீட்டிற்கு வந்திருக்கும் சுதர்சன்.

சென்ற மாதத் தொடக்கத்திலிருந்தே "என்னங்க! அடுத்த மாதம் தீபாவளிக்கு நம்மை வரச் சொல்லி அம்மா கடிதம் போட்டிருக்காங்க. ரெண்டு நாளைக்கு முன்பே போயிடுவோம்" என்று எப்பவோ வரப் போகும் தீபாவளியை ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தவள், "கடைசி நேரத்திலே சனநெரிசலில் உடுப்பு துணி எடுக்க முடியாதுங்க. நேரகாலத்தோடு வாங்கினால்தான் தைத்து எடுத்துக்க முடியும்" என்று, "அடுத்தக் கிழமை போவோம்" என்று சொன்ன என்னைப் பிடிவாதம் பிடித்து புடைவைக் கடைக்கு இழுத்துச் சென்றாள். அவளுக்கும் எனக்குமான உடுப்புகளை வாங்கிக் கொண்டு, தைப்பதற்கு வேண்டிய துணிகளை இப்ராஹிம் டெய்லஸ்ஸில் கொடுத்துவிட்டு, "காதர்காக்கா! எல்லாத் துணியையும் எங்களுக்கு ஒரு வாரத்திலே தைச்சு கொடுத்திடுங்க. இவர் மறந்திடுவாரு; தைச்சு முடிஞ்சிட்டா ஒரு போன் கொடுங்க. நான் இவரை அனுப்பி வாங்கிக்கிறேன்" என்று கட்டளையிட்டாள். சொன்ன திகதியில் அவர்கள் மறந்து போக இவள் கடைக்குப் போன் எடுத்து அவர்களோடு சண்டை பிடித்து அடுத்த நாளே அவர்கள் தைத்துக் கொடுத்ததை வாங்கப் போன போது கடைக்காரர்கள் "என்னங்க! ஒரு நாள் சுணங்கியதற்கு உங்க வைப் இப்படி சண்டைக்கு வந்திட்டாங்க" என்று முகம் சுழித்ததை வந்து வீட்டில் சொன்ன போது "நீங்க சும்மா இருங்க, உங்களுக்கு ஒண்ணும் தெரியாது. தையல்காரங்ககிட்ட எல்லாம் கொஞ்சம் கறாரா இருந்தால் தான் காரியம் நடக்கும். இல்லாட்டி நம்மள காணுகின்ற போதுதான் ஊசி தேடுவாங்க" என்றாள். அவள் சொல்வதிலும் உண்மை இல்லாமலில்லை என்பதால் விட்டுவிட்டான்.

அடுத்து வந்த நாட்களில் ஊருக்குக் கொண்டு போக வேண்டிய சாமான்கள் எல்லாவற்றையும் படிப்படியாக சுதர்சனை விரட்டி விரட்டி வாங்கி எடுத்துக் கொண்டாள். தீபாவளிக்கு இரண்டு நாட்களுக்கு முன்பதாகவே கொண்டு போக வேண்டிய சாமான்கள், இவனுக்கும் அவளுக்குமான உடைகள், மற்றும் தேவையான, தேவை இல்லாத எல்லாவற்றையும் இரண்டு பெரிய பைகளில் போட்டுக் கட்டி வைத்துக் கொண்டு கையில் எடுத்துச் செல்ல வேண்டிய சிறு பையையும், தான் செய்த இனிப்புப் பண்டங்களையும் மாத்திரம் தாயார் செய்திருந்தாள்.

இரவு பணி முடிந்து எட்டு மணியளவில் வீட்டிற்குள் நுழைந்த சுதர்சனை "என்னங்க! இன்னைக்காவது கொஞ்சம் நேரத்தோடு வரக் கூடாதா? நாளைக்கு ஊருக்குப் போகிறோம் தானே. பார்சல் எல்லாம் கட்டிவிட்டு இரவு நேரத்தோடு படுத்தால்தானே காலையில் நேரத்தோடு எழும்பி நாலு மணிக்கு நுவரெலியா போற பஸ்ஸிலே போக முடியும். நுவரெலியா பஸ்ஸிலே போனால்தான் வீட்டிற்குக்கிட்ட இறங்கலாம். இல்லாட்டி கம்பளையில் இறங்கி இந்த மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு இன்னொரு பஸ் பிடிக்கச் சிரமப்படணும்தானே".

"சரி சரி... தீபாவளி சீசன் என்கிறதால வேலை செய்கிற இடத்திலேயும் வேலை கொஞ்சம் அதிகமாப் போச்சு. இப்ப ஒண்ணும் சுணங்கிடல. நான் சீக்கிரம் எல்லாம் செய்து தருகிறேன்" என்றவாறு கட்ட வேண்டிய மேலதிகப் பொதிகளைக் கட்டி முடித்த போது தான் ஞாபகத்திற்கு வந்தது. "அனி... நான் மறந்தே போயிட்டேன். இதெல்லாத்தையும் புறக்கோட்டை பஸ் நிலையம் வரையிலும் கொண்டு போக வாகனம் ஒண்ணும் ஒழுங்கு செய்யவில்லையே!".

"எனக்குத் தெரியும் உங்களுக்கு இருக்கிற வேலையில் நீங்கள் மறந்துடுவீங்கன்னு", "நீயாவது கொஞ்சம் ஞாபகப்படுத்தியிருக்கலாம்" வருத்தத்தோடு சொன்னவனைப் பார்த்து "இப்படியெல்லாம் நடக்கும்னு தெரிஞ்சுதான் நானே நம்ம நாலாவது வீட்டிலே ஆட்டோ வச்சிருக்கிற சிராஜ் தம்பிகிட்ட சொல்லி வச்சிருக்கேன்". "அப்படியா... ரொம்ப நல்லது" என்று சொன்னவன் அதன் பின் அனியுடன் சேர்ந்து உணவருந்திய பின் இரவு பத்து மணிக்கெல்லாம் உறங்கப் போனான்.

இருவரும் ஒரு சில மணித்தியாலங்கள் கூட உறங்கியிருக்க மாட்டார்கள். அதற்குள் இரண்டரை மணிக்கு வைத்து விட்ட அலாம் அடிக்க எழுந்து கொண்டார்கள். ஒருவர் மாறி ஒருவர் குளித்துவிட்டு, அவசரமாய் ஒரு தேனீர் குடித்துவிட்டு உடுத்திக் கொண்டு நேரம் பார்த்தார்கள். விடியற்காலை 3.15 என்றது கடிகாரம். அதற்குள் ஆட்டோவுடன் சிராஜ் வர பொதிகளைத் தூக்கிப் போட்டுக் கொண்டு புறக்கோட்டை பஸ் நிலையம் செல்லவும் பஸ் வரவும் நேரம் சரியாய் இருந்தது. சிராஜிற்கு காசை கொடுத்து அனுப்பி விட்டு பஸ்ஸில் ஒரு வசதியான இருக்கையில் அமர்ந்து கொண்ட போது "நான் மட்டும் கொஞ்சம் அவசரப்படாமல் இருந்திருந்தா நீங்க இன்னைக்கு இந்த பஸ்ஸிற்கு என்னைக் கூட்டி வந்திருக்க மாட்டீங்க. தீபாவளி முடிந்துதான் கூட்டிப் போவீங்க" என்றாள். உண்மைதான் என்பது போல அடுத்த சில நிமிடங்களில் பஸ்ஸிற்காய் அடித்துக் கொண்டு நின்ற கூட்டத்தைக் கண்டதும் புரிந்தது. ஒரு சில நிமிடங்களில் புறப்பட்ட பஸ் காலை பத்து மணிக்கு முன்பதாகவே அவர்களை இறக்கி விட்டுச் சென்றது.

"தன் தாய் வீட்டிற்குச் செல்வதற்கு இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டவள் இங்கு வந்து சேர்ந்ததும் எப்படி மாறிவிட்டாள். இவளுக்கு இருக்கும் தாய், தந்தை, சகோதர பாசம் எனக்கும் இருக்கும் என்பதை ஏன் மறந்து விட்டாள். வந்து ஆசைக்கு எல்லோரையும் பார்த்தாகி விட்டது. ஒரு நாள் தங்கியும் விட்டாச்சு. அங்கு போய் திரும்பி வரும் பொழுதும் மீண்டும் ஒருமுறை இங்கு வந்துதான் போக வேண்டும். இப்படி இருக்கையில் அங்கு கொஞ்சம் நேரத்தோடு புறப்பட்டு வந்தால் என்ன" என மனதுக்குள் புலம்பிக் கொண்டிருந்தான். இவனது புலம்பல் அவளது காதில் விழுந்ததோ என்னவோ ஒருவாறு கடைசி பஸ்ஸிற்கு வந்து சேர்ந்து விட்டாள்.

மறுநாள் சுதர்சன் தன் வீட்டில் அண்ணனின் குழந்தைகளோடு விளையாடிக் கொண்டிருக்கையில் அவனருகே வந்த அவனது அக்கா "டேய் சுதர்சா! நீயாவது கொஞ்சம் சொல்லுடா. இன்னும் இரண்டே நாள் மாத்திரம் இருந்திட்டு வந்திடுறேன் என்று. தீபாவளியன்னைக்கு காலையிலதான் வந்தோம். அதுக்குள்ளே போகணும் போகணும்னு ஒத்தக்கால்ல நிற்கிறாடா அந்த மனுஷன் பிளீஸ்டா" என்றாள். அந்நேரம் அருகில் நின்ற அனிதா "நேற்று வரப்போ கொஞ்சம் சுணங்கியதற்கு ரொம்பக் கோபப்பட்டீங்களே... இப்ப என்ன சொல்லப் போறீங்க" என்ற போதுதான் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தான் சுதர்சன். தாய் வீடு செல்லும் போது தண்ணீரில் நீந்தும் ஆமையின் வேகத்தோடு புறப்படும் பெண்கள், தாய் வீட்டிலிருந்து திரும்ப முற்படும் போது தரையில் நடக்கும் ஆமையின் குணத்தை பின்பற்றுகிறார்கள் என்ற உண்மை அவனுக்குப் புரிய வந்தது! நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய உயிரினங்களைப் போல புகுந்த வீட்டிற்கும், பிறந்த வீட்டிற்கும் இடையிலே பாசப் போராட்டம் நடத்தும் எல்லாப் பெண்களின் குணமும் இப்படித் தானே!



**பூண்டுலோயா மெய்யன் நடராஜ்**

## அங்கம் 06

அறைக்குள் நுழைவதற்கு முன்பாக, அந்த கான்ஸ்டபிள் எதிர்ப்பட்டார். விறைப்பாய் நின்று சல்யூட் ஒன்றை போட்டு விட்டு தன் கையிலிருந்த கடிதத்தை நீட்டிக் கொண்டே மராட்டியில் சொன்னார்.

"ஸார் உங்களுக்கு ஒரு லெட்டர்"

கமிஷனர் அதை வாங்கிக் கொண்டே அறைக்குள் நுழைந்து நாற்காலிக்கு உடம்பைக் கொடுத்து கவரைப் பார்த்தார்.

கவரின் இடது கோடியில்

கைண்ட்லி அட்டென்ஷன்; மிஸ்ரர் விஷ்ணுவர்தன், கமிஷனர் ஆப் போலீஸ்.

டைப் அபடித்த சிவப்பு வாசகம் தெரிய ப்ரம் அட்ரஸ் வெறுமையாய் இருந்தது. நான் ரூபாய் ஸ்டாம்பின் மேல விழுந்திருந்த தபால் முத்திரையைப் பார்த்தார். ஜி.பி.ஓ முத்திரையும் அன்றைய தேதியும் தெரிந்தன.

கவரின் வாயைக் கிழித்தார்.

மானோ போல்டிங் பேப்பரில் டைப் செய்யப்பட்ட ஆங்கில கடிதம். ஐந்தே வரிகளில் முடிந்து போயிருந்தது.

கமிஷனர் அவர்களுக்கு,

நீங்கள் உங்கள் போலீஸ் எந்திரத்தை எவ்வளவு தான் முடுக்கி விட்டாலும், சரியே... எங்களைக் கண்டு பிடிக்க உங்களுக்கு ஆயுள் போதாது. எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த சர்தார் வீர மரணம் அடைந்து விட்டாலும்- உத்தம் சிங்கையும், குரு கோவிந்தையும் எப்படியும் உங்களிடமிருந்து மீட்கத்தான் போகிறோம். அது மட்டுமல்ல, மரண தண்டனை தீர்ப்பை எதிர்நோக்கிக் காத்திருக்கும், எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த -எட்டு பேர்களையும் மீட்கப் போகிறோம். இதற்கெல்லாம் போனஸாக உங்கள் மகள் ஹரிதாவையும் எங்கள் இயக்கத்திற்கு தாரை வார்க்கப் போகிறீர்கள். குறி வைத்து விட்டோம். எந்த விநாடியும் நீங்கள் விழலாம்.

அந்தக் கடைசி வரியை படித்து முடிக்கும் போது கமிஷனர் பக்கத்திலும்- பின்னங்கழுத்திலும் கணிசமாய் வியர்த்துப் போயிருந்தார்.

கடிதத்தின் ஒவ்வொரு வாசகமும்- பூதாகரமாய் விஸ்வரூபமெடுத்து அவருடைய அடி வயிற்றைக் கலக்கியது.

மீனம்பாக்கம் ஏர்போர்ட்

நேரம் சாயந்தர 5.30

மும்பை புறப்பட்டு போக-ப்ளைட் 509/ஏபி/ இண்டியன் ஏர்லைன்ஸ் விமானம் ரன்வேயில் பசுமாடு மாதிரிக் காத்திருக்க, ஏர்போர்ட் லௌன்ச்சில் சகல மதங்களிலும் ஜனங்கள் கசகசத்தார்கள். பதவி போன தமிழ்நாட்டு அமைச்சர் ஒருவர் அநாதை மாதிரி ஒரு சூட்கேஸோடு நின்றபடி- தன்னை யாராவது கவனித்து வணக்கம் போட மாட்டார்களா என்று நாலா பக்கமும் பார்வையை போட்டுக் கொண்டிருந்தார். கமல்ஹாசனுக்கும், ரஜனிகாந்துக்கும் தங்கையாக நடித்து விட்ட புதுமுக நடிகை ஒருத்தி, அஜீத்துக்கும் விஜய்க்கும் அம்மாவாக நடிக்க, மும்பை போக ஹெவி மேக்கப்போடும் தன் பிந்து கோஷ் சைஸ் அம்மாவோடும் வினைல் நாற்காலியில் காத்துக் கொண்டிருந்தாள். வெளிநாடு போகவிருக்கும் ஒரு தொழிலதிபருக்கும் அவருடைய மனைவிக்கும் ரோஜா மாலைகளைப் போட்டு விட்டு, ஒரு சின்ன கும்பல் சோகையாய் கைதட்ட, ஒரு மத்திய மந்திரியின் காந்தி குல்லாய்க்குப் பின்னால், போலீஸ் போய் கொண்டிருந்தது.

ஏர்போர்ட் 'கபேடேரியா'வில் நின்றபடி அட்டை டம்ளர்களில் காப்பி உறிஞ்சிக் கொண்டிருந்த விவேக்கும், ரூபலாவும், அந்த மோசமான காப்பியை மேலும் குடிக்க முடியாமல், டம்ளர்களை எறிந்து விட்டு வெளியே வந்தார்கள்.

"எனக்கொரு ஆச்சர்யம்" என்றான் விவேக்.

"என்ன?"

"பெங்களுருக்குப் போனா உங்கம்மா போடற காப்பி மாதிரியே, இந்த ஏர்போர்ட் 'கபேடேரியா' க்காரனும் போடறானே அது எப்படி?"

ஏர் பேக்கை சுமந்தபடி நடந்து கொண்டிருந்த ரூபலா, சட்டென்று நின்று முறைத்தாள். விவேக் அப்பாவித்தனமாய் கேட்டான்.

"என்ன ரூபலா...நின்னுட்டே?"

"பெங்களுரில இருக்கிற எங்கம்மாவை எதுக்கு இழுக்கிறீங்க?"

"பெங்களுரில இருக்கிற உங்க அம்மாவை மீனம்பாக்கம் ஏர்போர்ட்டிலிருந்து நான் எப்படி இழுக்க முடியும் ரூபலா?"

"வர....வர.... நீங்க?"

"மேதாவியா மாறிட்டு வர்றேனா?"

"மண்ணாங்கட்டி..."

ஏர்போர்ட் லௌன்சின் மேற்கூரைகளில் ஒளிந்திருந்த ஸ்பீக்கர்களில் உயர்தரமான கான்வென்ட் ஆங்கிலத்தில் ஒரு பெண் குரல் கொஞ்சியது.

"மும்பை செல்லும் பயணிகள் ஃபிளைட் நெம்பர் ஃபைப் நாட் நைனில் சென்று அமரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விமானம் புறப்படும் நேரம், ஆறு மணி பத்து நிமிடம் பிரயாணிகள் முன்னதாகவே போய் விமானத்தில் அமர வேண்டுகிறோம்."

"ப்ளைட்டுக்கு போய் உட்கார்ந்துக்கலாமா ரூபலா?"

-"உங்க தொண தொணப்புக்கு அது எவ்வளவோ உத்தமம். வாங்க போலாம்.

"எம்மேல கோபமா ரூப்பு?"

"நீங்க ஒண்ணும் என்னைக் கொஞ்ச வேண்டாம். மும்பை போய் சேர்ற வரைக்கும் என்கூட பேச வேண்டாம்."

"ரெண்டரை மணி நேரம்.... உன்னால பேசாமே இருக்க முடியுமா?"

"இருப்பேன்..."

"எப்படி?"

"படிக்காமே விட்டுப் போன, நாலைஞ்சு க்ரைம் நாவல்களை கையோடு கொண்டு வந்திருக்கேன். மும்பை போய் சேருகிற வரைக்கும் அது போதும்."

"எங்கே கொஞ்சம் சிரி பார்க்கலாம்."

"என்னோட எரிச்சலைக் கிளப்பாமே- பேசாமே நடங்க."

"ஒரு ஜோக் சொல்லட்டுமா?"

"நீங்களே ஜோக்கை சொல்லிவிட்டு நீங்களே சிரிச்சுக்குங்க. நான் மும்பை போய் சேர்கிற வரை சிரிக்கவே மாட்டேன்."

"ஃபிளைட்டைப் போய் தொடறதுக்குள்ளே ஒரு ப்ளேபாய் ஜோக் சொல்லிடறேன். உன்னையும் அறியாமே நீ சிரிச்சுட்டா எம்மேல இருக்கிற கோபத்தை .விட்டுடணும்."

"சரி."

விவேக் சொல்ல ஆரம்பித்தான். "ஒரு கணவன் மனைவி கட்டிலில் படுத்துத் தூங்கிட்டிருந்தாங்களாம். நடு ராத்திரி மனைவிக்கு ஒரு கனவு. ஆபீஸ் மானேஜரும் அவளும் ஒரு ஹோட்டலில் ரூம் எடுத்துகிட்டு ஜாலியா இருக்கும் போது- கணவன் திடீரென்று கதவைத் திறந்து கொண்டு வந்து விடுவதைப் போல் ஒரு கனவு. உடனே தூக்கத்திலிருந்து எழுந்து கத்தினாள். ஐயோ! என் கணவர் வருகிறார்! அவ்வளவுதான்! அருகில் படுத்திருந்த அவளுடைய கணவன் திடீரென்று எழுந்து ஜன்னல் வழியாக வெளியே குதித்து ஓட ஆரம்பித்தானாம்."

ஜோக்கை சொல்லிவிட்டு ரூபலாவின் முகத்தைப் பார்த்தான் விவேக். முகத்தில் சிரிப்பே இல்லை. சீரியஸாய் ஃபிளைட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தாள்.

"இன்னொரு ஜோக் சொல்லட்டுமா?"

"நீங்க எதையுமே உளறாமே நடங்க."

விமானத்தின் இடுப்பில் ஒட்டியிருந்த படிகளில் ஏறினார்கள். படிகளின் உச்சியில் பைசா கோபுரம் கொண்டை போட்ட ஏர்ஹோஸ்டஸ் ஆரோக்கியமான ஈறுகள் தெரிய விரித்து, குட் ஈவினிங் சொன்னாள். பாசி நிறப் பட்டுச் சேலையும் அதே வண்ண ஜாக்கெட்டும் குளிர்ச்சியாய் கண்களைத் தழுவியது. அவளுக்கு அருகே நின்று- கோட் அணிந்த ஒரு ஆசாமி, கையில் இருந்த ட்ரிப் ஷீட்டை பார்த்து விட்டு விவேக்கை ஏறிட்டான்.

"யுவர் குட் நேம் ப்ளீஸ் ஸார்?"

"மனோஜ்குமார்"

"மிஸ்டர் அண்ட் மிஸஸ் மனோஜ்குமார். கோயிங் டு மும்பே" டைப் அடிக்கப்பட்ட ட்ரிப் ஷீட்டில் பெயர்களைப் பார்த்துக் கொண்டே பால் பாயிண்ட் பேனாவால் டிக் அடித்தார் அவர். "யுவர்ஸ் சீட் நெம்பர் செவண்டி செவன் அண்ட் செவண்டி எய்ட்."

"தாங்க்யூ" விவேக்கும் ரூபலாவும், விமான இருக்கைகளுக்கு மத்தியில் நடந்தார்கள். அந்த ஏர் பஸ்ஸின் எழுபது சதவீத சீட்களில் ஆட்கள் தெரிய, மற்ற இருக்கைகள் காலியாய் தெரிந்தன. கல்லூரி மாணவிகள் ஐந்து பேர் வேகமான ஆங்கிலத்தில் அரட்டையடித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு ஹிப்பி இளைஞன் தலையில் வாக்மெனை மாட்டிக் கொண்டு கண்களை மூடியிருந்தான். பெரும்பாலோர் புத்தகங்களில் மூழ்கியிருந்தார்கள். குழந்தைகள் கோழி முட்டை வடிவ கண்ணாடி ஜன்னலில் - தொலைவில் ஏறி இறங்கிக் கொண்டிருந்த. "யே.... கோன்சா ஃப்ளைட் பாபா?"என்று தோளைத் தட்டி அப்பாக்களிடம் சந்தேகம் கேட்டார்கள்.

விவேக்கும் ரூபலாவும் ஜன்னலோரமாய் இருந்து 77, 78 சீட்டுக்களை ஆக்கிரமித்தார்கள். உட்கார்ந்ததுமே ரூபலா, ஏர் பேக்கைப் பிரித்து ஒரு க்ரைம் நாவலைப் பிரித்து வைத்துக் கொண்டாள். விவேக் தலையை அவன் பக்கமாய் சாய்த்துக் கேட்டான்.

"நிஜமாகவே எம் மேலே கோபமா?"

"ஆமா...ஆமா..."

"என்னோட மூஞ்சியைப் பார்த்து சொல்லு பார்க்கலாம்."

"உங்க மூஞ்சியைப் பார்த்தா இன்னும் எனக்கு கோபம் வரும்."

"ஸாரி ரூபலா. இனிமே உன்னோட அப்பா, அம்மாவைப் பத்தி கேலியோ கிண்டலோ பண்ண மாட்டேன்."

"நிஜம்மா?"

"சத்தியமா."

"சரி, கோபம் வாபஸ்."

விமான பணிப்பெண் சாக்லேட் தட்டோடு இருவரையும் நெருங்கினாள்.

(குறி தொடரும்)






எழுதுவது

**ராஜேஷ்குமார்**

# ஆறுமனமே ஆறு!

## ஏமாற்றப்பட்டவளின் எதிர்நீச்சல்

திருச்சி பொன்மலைப்பட்டியில் வெளிப்பதிவு அகதியாக தங்கி வாழும் ரேவதி தன் குழந்தையுடனும் அவள் தங்கியிருக்கும் வீட்டுக்கார அம்மாவுடனும் எனது அலுவலகத்துக்கு வந்திருந்தாள். அவர்கள் மூவரையும் வரவேற்று இருக்கையில் அமரும் படி கேட்டுக் கொண்டேன். ரேவதி அழுகையுடனேயே இருந்தாள். உதவிக்கு வந்த அம்மாதான் விசயத்தை ஆரம்பித்தார். "வெளிநாட்டிற்குச் சென்ற இவளது கணவனை நீங்கள்தான் கண்டுபிடித்துக் கொடுக்க வேண்டும். இவளும் குழந்தையும் மிகச் சிரமப்படுகிறார்கள்" என்று கூறி அவரும் கண் கலங்கினார். பக்கத்திலிருந்த குழந்தை அங்கும் இங்கும் பரபரப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தது. எனக்குச் சற்றுக் குழப்பம் ஏற்பட்டதால் முதலில் ரேவதியுடன் தனியாகப் பேச முடிவு செய்தேன். உதவிக்கு வந்த அம்மாவையும் ரேவதியின் குழந்தையையும் சந்திப்போர் கூடத்திலேயே இருக்க விட்டுவிட்டு, ரேவதியை ஆற்றுப்படுத்தும் அறைக்கு அழைத்து வந்தேன்.

ரேவதியிடம் பேச்சை ஆரம்பித்தேன். "ரேவதி! காலை உணவு சாப்பிட்டுவிட்டா வந்தீர்கள்?" என்று கேட்டேன்.

"ஓம் பீட்டு சாப்பீட்டோம்" என்றாள்.

"குழந்தைக்கு இப்போது என்ன வயது?" என்று கேட்டேன்.

"ஐந்து வயது ஆகிறது" என்றாள்.

"பிள்ளையைப் பாலர் பாடசாலையில் சேர்த்து வீட்டீர்களா?"

"ஓம் இரண்டு வருடமாக இங்கிலீஸ் மீடியம் மொண்டிசரிக்கு போகிறாள்" என்றாள்.

"சரி! ரேவதி, உங்கள் பிரச்சனையைக் கூறுங்கள்" ரேவதி தனது பிரச்சனையைக் கூறினாள். "நான் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவள். நான் ஒரு போராளி இயக்கத்தில் சேர்ந்து இந்தியாவில் பயிற்சி பெற்றேன். எமது இயக்கத்தைச் சேர்ந்த திலீப் என்பவரைக் காதலித்துத் திருமணமும் செய்து கொண்டேன். திருமணம் கொழும்பில் நடந்தது. அவரது உறவினர்கள் இவரை வெளிநாடு எடுப்பதாகச் சொல்லியிருந்தனர். எனக்கு பெண் குழந்தை கிடைத்து மூன்றாவது மாதத்தில் எனது கணவர் பிரான்ஸ் நாட்டுக்குப் போய்விட்டார். நான் வத்தளையில் ஒரு வாடகை வீட்டில் தங்கியிருந்தேன். பிரான்ஸ் நாட்டுக்குச் சென்ற என் கணவர் முதல் கடிதத்திலேயே ஒரு வருடத்திற்குள் என்னையும் குழந்தையையும் பிரான்சுக்கு எடுத்து விடுவேன் என்று எழுதியிருந்தார். தொடர்ந்து கடிதங்கள் வந்தது. 1994ம் ஆண்டு தை மாதம் வந்த கடிதத்தில் அவர் என்னை இந்தியாவுக்குச் சென்று திருச்சி அல்லது சென்னையில் தங்கியிருக்கும்படியும், இந்தியாவிலிருந்து வெளிநாட்டுக்குச் செல்வது சுலபம் என்றும் எழுதியிருந்தார். இந்தியாவிற்குச் செல்வதற்கான செலவுகளுக்கும் பணம் அனுப்பியிருந்தார். குழந்தையுடன் இந்தியா வந்து திருச்சியிலுள்ள சுப்பிரமணியபுரம் என்ற இடத்தில் ஒரு வாடகை வீட்டில் தங்கியிருந்தேன். நான் இந்தியா வந்தது பற்றி கணவருக்குத் தொலைபேசி மூலம் அறிவித்தேன். இன்னும் ஆறு மாத காலத்திற்குள் வெளிநாட்டுக்கு வந்து விடலாம் என்று கூறினார். ஆறு மாதங்கள் கடந்தன. நான் போடும் கடிதங்களுக்குப் பதில் வருவதில்லை. அவரது தொலைபேசி இலக்கம் அவரது உறவினர்கள் வீட்டிலுள்ளது. தொலைபேசி மூலம் பேச முயற்சிக்கும் போதெல்லாம் அவருடைய மாமிதான் பேசுவார். உன்ர புருசன் வேலையில்லாமல் சுற்றுகிறான் என்றும், அவன் வீட்டிற்கு வருவதில்லை என்றும், அவன் எங்கே குடித்து வீட்டுக்கிடக்கிறானோ தெரியவில்லை என்றும், ஏனோ தானோ என்று தான் பதில் சொல்லுவார். பின் எந்தத் தொடர்பும் எனக்குக் கிடைக்கவில்லை" என்ற ரேவதி பெருமூச்சு விட்டாள். இரண்டு தரம் இருமினாள். தலையைக் குனிந்து கொண்டே கேவிக் கேவி அழத் தொடங்கினாள். சற்று நேரத்திற்குப் பின் ரேவதிக்குக் குளிர்பானம் வழங்க ஏற்பாடு செய்தேன்.

"ரேவதி! இந்த சோடாவைக் குடியுங்கள். கொஞ்சம் நிமிர்ந்து இருங்கள்" என்று கேட்டுக்கொண்டேன். தன் கண்களைச் சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்ட ரேவதி சோடாவைக் குடித்தாள். எனக்கு ஐந்து நிமிட இடைவேளை தேவைப்பட்டதால் ரேவதியிடம் சொல்லிவிட்டு வெளியில் சென்று வந்தேன். சந்திப்போர் கூடத்திலிருந்த ரேவதியின் குழந்தைக்கும் உதவிக்கு வந்த அம்மாவிற்கும் குளிர்பானம் வழங்கப்பட்டது.

சிறிது நேர இடைவேளைக்குப் பின் உரையாடலை ஆரம்பித்தேன். ரேவதி கூறிய விபரங்களைச் சுருக்கமாக எடுத்துச் சொல்லித் தொடர்ந்து கூறும்படி கேட்டுக் கொண்டேன். ரேவதி தொடர்ந்தாள்.

"எனது கணவனின் தொடர்பு கிடைக்காததால் மனக் கஸ்டம் ஏற்பட்டதுடன் பணக் கஸ்டமும் ஏற்பட்டது. நான் தங்கியிருந்த சுப்பிரமணியபுரம் வீட்டைவிட்டுக் குறைந்த வாடகையுடன் பொன்மலைப்பட்டியிலுள்ள இந்திரா அம்மா வீட்டில் தங்கினேன். இந்திரா அம்மாவிற்கும் ஒரு குழந்தை. அவளுடைய புருசனும் வேறு திருமணம் முடித்துவிட்டதால் இவள் தனியே தான் வாழ்கிறாள். சொந்த வீட்டிலேயே வசிக்கும் இந்திரா அம்மா தையல் தொழில் செய்தே வாழ்ந்து கொண்டிருக்கிறாள். இந்திரா அம்மா எனது மனக் கஸ்டத்தைப் போக்கப் பல ஆலோசனைகளைச் சொல்லுவாள். எனக்கு தையல் வேலை கற்றுக் கொடுப்பதிலும் ஆர்வமாக இருந்தாள். இப்போது நான் தையலில் ஒரளவு சம்பாதிக்கின்றேன். உணவிற்குக் கஸ்டமில்லாவிட்டாலும் என் பிள்ளையை நன்றாகப் படிப்பிக்க வேண்டும் என்று நினைக்கின்றேன். இதனால் செலவுகள் அதிகமாகின்றது. என் பிள்ளை ஆங்கிலத்தில் சரளமாக பேசுவாள்."

"சரி ரேவதி! நான் உங்களுக்கு என்ன உதவி செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"என்னுடைய இலட்சியம் எனது மகளைப் படிக்க வைத்து டாக்டர் ஆக்க வேண்டும் என்பதுதான்" என்று உணர்ச்சிபூர்வமாக கூறிய ரேவதி "எனது புருசனுடைய தொடர்பு பணத்திற்காக மட்டும்தான் தேவைப்படுகிறது. எப்படியாவது அவரது தொடர்பை ஏற்படுத்தி அவருடைய மகளுக்கு படிப்பிற்கு மட்டும் உதவச் சொல்லுங்கள்" என்று திடமாகச் சொன்னாள். கசந்து போன வாழ்க்கையிலும் ரேவதி தன் பிள்ளையை டாக்டர் ஆக்க வேண்டும் என்று விரும்புகிறாள். ரேவதியை மனதாரப் பாராட்டினேன். "ரேவதி! என்னால் முடிந்தளவிற்கு திலீப்புடைய தொடர்பை ஏற்படுத்த முயற்சி செய்கிறேன். அவருடைய முகவரி அல்லது தொலைபேசி இலக்கங்கள் இருந்தால் கொடுங்கள்" என்று கேட்டேன். கடைசியாகத் தொடர்பு கொண்ட முகவரியையும், தொலைபேசி இலக்கங்களையும் ஒரு கடதாசியில் எழுதிக் கொடுத்தாள். "எப்படியாவது தேடிக் கண்டு பிடிப்போம்" என்று நம்பிக்கையூட்டினேன்.

ரேவதிக்கு வாழ்க்கையில் ஒரு பிடிப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகச் சில ஆலோசனைகளைக் கூறினேன். "எமது போராட்டம் எத்தனையோ பெண்களை விதவையாக்கி விட்டது என்று உங்களுக்குத் தெரியும். அவர்களும் எதிர் நீச்சல் போட்டு வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். உங்களுக்கு வயது இருக்கின்றது. கையில் தொழில் இருக்கின்றது. வித்தியாசமான இலட்சியம் உள்ள தமிழ்பெண்ணாக நீங்கள் வாழ்ந்து காட்ட வேண்டும். அது மட்டுமல்ல தமிழ் இனத்தின் விடுதலைக்காக உங்களை அர்ப்பணிக்கத் துணிந்த வீரத் தமிழ்ப் பெண் நீங்கள்" என்று ரேவதிக்குத் தெம்பூட்டினேன்.

இறுதியாக நன்றி கூறிய ரேவதியும், இந்திரா அம்மாவும் குழந்தையுடன் விடை பெற்றனர்.

இருப்பினும் நான் செய்த முயற்சி பல மாதங்களாகியும் கைகூடவில்லை. திலீப்புடைய தொடர்பு கிடைக்கவில்லை. ரேவதி நம்பிக்கையுடன் தன் தையல் தொழிலின் வருமானத்தைக் கொண்டே மகளைப் படிப்பித்துக் கொண்டிருக்கிறாள்.

(சிதைந்து போன நெஞ்சத்துடன் கசந்து போன வாழ்க்கையில் எத்தனை ரேவதிகள்! ஈழப் போராட்டமும் அதனால் ஏற்பட்ட புலம் பெயர்வும், பிரிவுகளும், துன்பங்களும் ஈழத் தமிழர்களின் விழுமியங்களைச் சாக்கடையாக்கிவிட்டது.)

தொடர்ந்து வரும்...

**எஸ்.பி.லெம்பட்**
**வங்காலை**

# பார்த்த ஞாபகம் இல்லையோ...? 23

### தொகுப்பு என்.கே.எஸ். திருச்செல்வம்



'காஞ்சித் தலைவன்'-விஜயகுமாரி, எம்.ஜி.ஆர்., எஸ்.எஸ். ராஜேந்தரனுடன்

1940 களில் தமிழ், கன்னடம்,. தெலுங்கு முதலிய மொழிகளில் முன்னணி நட்சத்திரமாகத் திகழ்ந்தவர் எம்.வி.ராஜம்மா. இவர் நடித்த முதல் படம் 1936 இல் கன்னடத்தில் வெளிவந்த 'சம்சாரா நவுகா'. முதல் தமிழ் படம் 1938 இல் வெளிவந்த 'யயாதி'. தொடர்ந்து 'உத்தம புத்திரன்' பி.யூ. சின்னப்பாவின் ஜோடியாக நடித்தார். இருப்பினும் ராஜம்மாவுக்குப் பெரும் புகழை ஈட்டித் தந்தது 1941 இல் வெளிவந்த 'குமாஸ்தாவின் பெண்'.

'மதனகாமராஜன்', 'ஞானசௌந்தரி', பாலாஜி பிக்சர்ஸின் 'லைலா மஜ்னு','பாரிஜாதம்', 'தாயுள்ளம்', 'பெண் மனம்', 'உலகம்', 'குடும்பவிளக்கு','கண்ணின் மணிகள்', 'மணாளனே மங்கையின் பாக்கியம்' போன்ற தமிழ்ப் படங்கள் உட்பட மொத்தம் 200 படங்களில் நடித்த இவர் சிவாஜி கணேசனுடன் 'தங்கமலை ரகசியம்', 'பாவமன்னிப்பு', முரடன் முத்து', 'கர்ணன்' போன்ற படங்களில் நடித்தார். எம்.வி. ராஜம்மா கடைசியாக நடித்த தமிழ்ப்படம் 'தேடி வந்த மாப்பிள்ளை'-எம்.ஜி.ஆரின் தாயாக நடித்தார்.

டைரக்டர் பி.ஆர். பந்துலுவுடன் பல கன்னடப் படங்களில் ஜோடி சேர்ந்த இவர் நிஜ வாழ்க்கையிலும் அவரின் ஜோடியானார். ஜனாதிபதி விருது உட்பட பல விருதுகளைத் தனதாக்கிக் கொண்ட பண்பட்ட நடிகை இவர்.

1943 இல் விஜயா பிலிம்ஸ் என்ற பெயரில் சொந்தமாக பட நிறுவனமொன்றை ஆரம்பித்த ராஜம்மா 'ராதா ரமணா' என்ற படத்தைத் தயாரித்தார். 1923 ஆம் ஆண்டில் பிறந்த ராஜம்மா, 1999 இல் காலமானார்.



டி.எஸ். துரைராஜ்

'சகுந்தலை' படத்தில் நகைச்சுவை நடிகர் என்.எஸ். கிருஷ்ணனுடன் மீன் பிடித்துக் கொண்டு "வெகு தூரக் கடல் தாண்டி போவோமே மீன் பிடிப்போமே" என்று பாடிக் கொண்டு கடைசியில் அவரிடம் அடிவாங்கி அழுது அழுது கதைக்கும் அந்தப் பாத்திரம் இன்னும் பலருக்கு நினைவில் நிற்கும் ஒரு பாத்திரம். அந்தப் பாத்திரத்தில் பரிதாபத்துக்குரிய மீனவனாக நடித்தவர் நகைச்சுவைக்குப் பெயர் பெற்ற டி.எஸ். துரைராஜ்.

என்.எஸ். கிருஸ்ணனின் சிபாரிசின் பேரில் 1938 ஆம் ஆண்டில் 'பக்தநாம தேவர்' படத்தின் மூலம் திரையில் அறிமுகமானார். அதன் பின் 1939 இல் திருநீலகண்டர், பிரகலாதன் மாணிக்க வாசகர், ஆனந்தாஸ்ரமம் ஆகிய படங்களில் நடித்தாலும் அவரை நன்கு அடையாளம் காட்டிய படம் அதே ஆண்டில் வெளியான 'ரம்பையின் காதல்'. 'சகுந்தலை' படம் இவருக்குப் பெரும் புகழைத் தந்தது. இவர் சொந்தமாக சினிமாக் கம்பனி ஒன்றை ஆரம்பித்தார். 1948 இல் வெளியான 'பிழைக்கும் வழி' என்ற படம் இவரது முதல் தயாரிப்பாக இருந்தது. அதன் பின் 1958 இல் 'பானை பிடித்தவன் பாக்கியசாலி' என்ற படத்தைத் தயாரித்தார். "புருஷன் வீட்டில் வாழப்போற பெண்ணே தங்கச்சி கண்ணே...." என்ற பாடல் திருச்சி லோகநாதனின் குரலில் ஒலித்தது இப் படத்தில்தான். 'ஓர் இரவு', 'மலைக்கள்ளன்', 'போட்டர் கந்தன்', 'இரு சகோதரிகள்', 'மணமகள்' போன்ற படங்கள் இவருக்குப் பெருமை தேடித் தந்தன. நடிகர் ஏ.வி.எம். ராஜனுக்கு முதன் முதலில் திரையில் நடிக்க வாய்ப்பளித்தவர் துரைராஜ். சுமார் 100 படங்களில் தன் நடிப்புத் திறமையைக் காட்டிய துரைராஜ் தனது 76வது வயதில் 1987 இல் காலமானார்.

பதின்மூன்று வயதில் 'மாங்கல்யம்' என்ற படம் மூலம் அறிமுகமானவர் விஜயகுமாரி. இவர் 1954 இல் வெளியான இப் படத்தின் பின் 'தெனாலி' வரை சுமார் 150 படங்களுக்கு மேல் நடித்துள்ளார். அடுத்து 'மதியும் மமதையும்' என்ற படத்தில் வில்லிப் பாத்திரத்தில் நடித்தாலும், இவர் பின்னாளில் சிறந்த குணசித்திர நடிகையானார்.

'நானும் ஒரு பெண்', 'சாரதா', 'பச்சை விளக்கு', 'பூம்புகார்', 'காக்கும் கரங்கள்' உட்படப் பல படங்களில் தனது குணசித்திர முத்திரையைப் பதித்தவர் விஜயகுமாரி. இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரனின் மனைவியாகிய இவர் பல படங்களில் எஸ்.எஸ். ஆருடன் ஜோடியாக நடித்தார். சிவாஜியுடன் 'குங்குமம்' படத்தில் ஜோடி சேர்ந்து நடித்தார். எம்.ஜி.ஆருடன் 'காஞ்சித் தலைவன்' படத்தில் சகோதரியாக நடித்தார். அப் படத்திலும் 'காவல்காரன்' படத்திலும், எம்.ஜி.ஆருடன் ஜோடியாக நடிக்கச் சந்தர்ப்பம் கிடைத்ததாம். ஆனால்,

"ராஜா எனக்குத் தம்பி. (எஸ்.எஸ். ராஜேந்திரன்) தம்பியின் மனைவியுடன் ஜோடி சேர்ந்து நடிக்க நான் விரும்பவில்லை" என்று எம்.ஜி.ஆர். மறுத்துவிட்டதாக விஜயகுமாரியே கூறியுள்ளார்.

தான் நடிக்காத, ஆனால் நடிக்க வேண்டும் என்று விரும்பிய பாத்திரம் பைத்தியக்காரி வேடமாம். அண்மையில் வெளியான கமலின் 'தெனாலி' மூலம் அவரது ஆசை நிறைவேறியது. சிலப்பதிகாரத்தின் கண்ணகியை யாரும் நேரில் பார்த்ததில்லை. 'பூம்புகார்' மூலம் கண்ணகியை இரசிகர்களின் கண்முன் கொண்டு வந்து நிறுத்தியவர் விஜயகுமாரி.



'தேடிவந்த மாப்பிள்ளை'-எம்.வி. ராஜம்மா, எம்.ஜி. ஆருடன்

# காற்றுவாக்கில்...

### தனியார்மயப் படுத்தல்

அரச ஊடகங்கள் உட்பட சகல ஊடகங்களும்-பத்திரிகைகளாகட்டும், வானொலிகளாகட்டும், தொலைக்காட்சிகளாகட்டும்- இவை எல்லாமே தமது செய்திகள் விவகாரத்தில் நடுநிலைமையைக் கடைப்பிடிப்பதாகத்தான் கூறுகின்றன.

இக் கொள்கை எவ்வளவுக்கு கடைப்பிடிக்கப்படுகின்றது என்பது சர்ச்சைக்கு உரிய விடயமே. உதாரணத்துக்கு "தெரிவிப்பது நாங்கள் தீர்மானிப்பது நீங்கள்" என்று கூறிக் கொண்டாலும், அது நடுநிலைமைக் கொள்கையை பிரதி பலிப்பதாகக் கருதலாமா? "தெரிவிக்கப்படுவது எவை" என்று ஒரு வினாவை எழுப்பினால், அங்கு தெரிவு ஒன்று நடைபெறுவதையே அது எடுத்துக் காட்டுகின்றது. அந்தத் தெரிவில் நடுநிலைமைக் கொள்கை அடிபட்டுப் போகிறதல்லவா? தனியார் மயப் படுத்தலை ஆதரித்தும் அதுவே நாட்டுக்கு நன்மை பயக்கக் கூடியது என்றும் ஒரு விளம்பரம் ஒரு தொலைக்காட்சிச் சேவையில் ஒளிபரப்பாகியது. தனியார் மயப் படுத்தல் ஐக்கிய தேசிய முன்னணியின் நாட்டின் பொருளாதார விடியலுக்கு உரிய 'சர்வரோக நிவாரணி'. இதை அந்தத் தொலைக் காட்சி நிலையத்தின் விளம்பரமாக, (அதா வது அனுசரணை என்று ஒன்றும் குறிப்பிடப்படவில்லை) ஒளிபரப்பப் பட்டிருப்பதனால் அந்த நிலையம் தனியார்மயப்படுத்தலை ஆதரிக்கிறது என்று வெளிப்படையாகக் காட்டியிருப்பது மட்டுமல்லாமல், அதை முன் வைப்பதாகவே கொள்ளலாம். இதை நடுநிலைமை என்று கூறலாமா?

### 'சோப்' விளம்பரமும் ஒரு செய்தியே!

ஒரு தனியார் தொலைக்காட்சியில் செய்திக்கு முன் 'சோப்' விளம்பரம் ஒன்று செய்யப்பட்டது. அதையும் ஒரு செய்தி என்று அந்த அறிவிப்பாளர் அறிவித்தார். அந்தச் செய்தியின் பின்னர் செய்திக்குரிய குறியிசை ஒளிபரப்பப் பட்டு பின் செய்திகள் வழமை போல் வாசிக்கப்பட்டன. இதில் அந்த 'சோப்' செய்தியை வாசித்த அதே அறிவிப்பாளர்தான் தொடர்ந்து வந்த செய்திகளையும் வாசித்தார். 'சோப்' விளம்பரத்தைச் செய்தியாக்கி 'புரட்சி' செய்தோருக்கு அனுதாபம் தெரிவிக்கும் அதே வேளை, அவ்வாறான புரட்சியாளர்கள் செய்தி ஒலிபரப்பி வந்த மரபு பற்றியும் சற்றுச் சிந்தித்தால் நல்லது. செய்தி அறிக்கை மீண்டும் ஒரு முறை "எதிரோளி"யாகி, அதற்குக் கிடைத்த கண்டனக் கணைகள் போதாதா?

### 'ஐ'யில் ஐந்து மணி நேரம்!

ரூபவாஹினிப் பக்கத்திலிருந்து நல்ல செய்தி ஒன்று காற்றுவாக்கில் கிடைத்துள்ளது. நவம்பர் முதலாம் தேதி தொடக்கம் 'ஐ' அலைவரிசையில் மேலும் ஐந்து மணிநேரம் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாம். ஆயினும், இந்தியாவிலிருந்து 'விஜே' ரி.வி. யின் நிகழ்ச்சிகள்தான் அந்த 5 மணி நேரத்தை நிரப்பப்போகின்றன. ஏற்கனவே, மற்றுமொரு தொலைக்காட்சி நிறுவனம் "சன்" ரி.வி. நிகழ்ச்சிகளைக் கொண்டு நேரத்தை நிரப்பிவருகின்றது. அத்தோடு இதுவும் ஒன்று என்பதனால், அவர்களின் 'ரெலி' நாடகம், சினிமாப் படங்கள் என, ஓகோ என்று இருக்கப் போகின்றது. இப்படியான செயல்கள் மூலம் தான் நம் நாட்டுக் கலாசாரம், பண்பாடு மேம்படுத்தப்படப்போ

## காற்றாடி

கின்றன. உள்ளூர்க் கலைஞர்களுக்கு ஒரே யோகம்தான் போங்கள்! "தமிழ் நிகழ்ச்சிகள் தானே கேட்டீர்கள், இதோ தந்துவிட்டோம்" என்று வரம் கொடுத்தவர்களுக்கு இப்போதைய வழக்கத்தின்படி பொன்னாடை போர்த்தலாமா?

### செய்தி வாசிக்கத் தடை

நாடறிந்த கவிஞர்; நல்ல தமிழ் பேசுவதில் வல்லவர். ஆனாலும் இலங்கை வானொலியில் காலையில் செய்தி வாசிப்பதற்கு அவருக்குத் தடை. ஏனைய நேரங்களில் அவர் செய்தி வாசிக்கலாமாம். "ஏன் இந்தத் தண்டனை" என்று பலர் கேட்கிறார்கள். ஒரு வேளை தமிழைத் தமிழாகவே வாசிப்பதால், ஒரு சில காதுகளுக்கு அது நாராசமாக இருக்குதாம். தானுண்டு, தன்பாடுண்டு என்று இருக்காமல், அடுத்த வீட்டு விவகாரத்தில் தலையிடும் இந்த 'வேடிக்கை விநோதம்' இலங்கை வானொலிக்கு ஒன்றும் புதியதல்ல என்கின்றனர் விடயம் தெரிந்த நேயர்கள் சிலர்.

### இளசுகளின் வரவு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் "தென்றலுக்கு" இப்பொழுது இளசுகள்தான் வேண்டுமாம். இதனால் அதைக் கட்டிக் காத்துவந்தவர்களின் குரல்களை இனி காலை ஒலிபரப்பு வேளைகளில் கேட்க முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகக் காற்றில் மிதந்து வந்த செய்தி ஒன்று கூறுகின்றது. புதிதாக வந்துள்ள இளசுகள்தான் இனி காலை நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவார்களாம். புதியவர்களை அறிமுகப்படுத்துவதில் தவறே இல்லை என்றாலும், அனுபவம் பெற்றவர்களை அங்கலாய்க்க வைக்கும் இந்த நிலையினைச் சீராக்க யார்தான் முன் வரப் போகிறார்கள்? அந்த அனுபவம் வாய்ந்தவர்களின் பாடு அங்கு திண்டாட்டந்தான் போலும்!

## 440 ஆண்டு சிறைத் தண்டனை பெற்ற கைதியைக் குத்திக் கொன்ற சக கைதிகள்

ஸ்பெயின் நாட்டில் அடுத்தடுத்து பதினாறு விதவைகளைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திக் கொலை செய்த குற்றத்துக்காக 440 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டு இருந்தான் ஜோன் அன்டோனியோ ரொட்ரிகஸ் வேகா (44). சலமங்கா மாகாணத்தில் டோபாஸ் சிறையில் இருந்த அவனை, அவனுடன் இருந்த வேறு இரு கைதிகள் கத்தியால் குத்திக் கொலை செய்துவிட்டனர்.

ஜோஸ் அன்டோனியோ பாலியல் வல்லுறவுக் குற்றத்தைப் புரிந்துள்ளான். அத்தகைய காமுகனுக்கு எங்கள் (கைதிகள்) சமூகத்தில் இடமில்லை; ஒதுக்கப்பட வேண்டியவன் அவன். எனவே, அவனைக் கொலை செய்கிறோம்" என்று கூறிக்கொண்டே இருவரும் அவனை மாறி மாறிக் குத்திக் கொன்றனர்.

தடுக்கச் சென்ற சிறை அதிகாரியிடம், "இது எங்கள் பிரச்சினை. இதில் தலையிடாதீர்" என்று அவர்கள் கூறிவிட்டனர்.

வேறொரு சிறையில் இருந்த ஜோஸை, அங்குள்ள கைதிகள் தாக்கியதால்தான் டோபாஸ் சிறைக்கு அவன் மாற்றப்பட்டான். ஆனால், அங்கு அவனைக் கொன்றே விட்டனர்.

# ஸ்போர்ட்ஸ்

## சர்வதேச ஆட்டங்களிலிருந்து

## மார்க் வோவ் ஓய்வு



ஆஷஸ் தொடருக்கான அணியில் 'இடம்பெறாத அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மார்க் வோவ்(37) சர்வ தேச ஆட்டங்களிலிருந்து ஓய்வு பெறுவதாகத் திங்கள் கிழமை அறிவித்தார்.

அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியின் கப்டன் ஸ்டீவ் வோவ்வும், மார்க் வோவ் வும் இரட்டையர்கள்.

128 டெஸ்ட்களில் விளை யாடியுள்ள மார்க் வோவ், 20 சதங்களுடன் 8, 029 ரன் கள் (சராசரி 41.81) குவித்துள் ளார். சர்வதேச அளவில், அதிக ரன்கள் குவித்தவர் கள் பட்டியலில் 11-வது இடத் தில் உள்ளார்.

59 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ள மார்க், 181 காட்ச்கள் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

1991-இல் அடிலெய்டில் இங்கிலாந்துக்கு எதி ராக, தனது முதல் டெஸ்டிலேயே 138 ரன்களு டன் தனது டெஸ்ட் வாழ்க்கையைத் தொடக்கியவர்.

1993-இலிருந்து தொடர்ந்து 107 டெஸ்ட்களில் விளையாடியுள்ளார். ஆஸி. அணியின் முன்னாள் கப்டன் ஆலன் பார்டர் (153 டெஸ்ட்) மட்டுமே மார்க் வோவ்வை விட அதிக டெஸ்ட்களில் தொடர்ச்சியாக விளையாடியுள்ளார்.

ஒரு நாள் ஆட்டங்களில் 18 சதங்களுடன் 8,500 ரன்கள் குவித்து, 85 விக்கெட்டுகளைக் கைப் பற்றி, 108 காட்ச்களைப் பிடித்துள்ளார். ஒரு நாள் ஆட்டங்களில் அதிக ரன்கள் குவித்த ஆஸி. வீரர் மார்க் வோஹ். இவருக்கு அடுத்தபடியாக ஸ்டீவ் வோவ் 7,569 ரன்கள் எடுத்துள்ளார்.

அவுஸ்திரேலியா உருவாக்கிய மிகச் சிறந்த வீரர்களுள் ஒருவரான மார்க் வோவ், ஆஷஸ் தொடரின் கடைசி டெஸ்ட் நடைபெற உள்ள அவரது சொந்த மைதானமான சிட்னியில் கௌர விக்கப்படுவார் என அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரிய தலைமை நிர்வாகி ஜேம்ஸ் சுதர்லாண்ட் அறிவித்தார்.

1994- 95 இல் இலங்கைச் சுற்றுப்பயணத்தின் போது, மைதானம் மற்றும் தட்ப வெப்பநிலை குறித்து இந்திய சூதாட்டக்காரருக்குத் தகவல் அளித்ததாக மார்க் வோவ் ஒப்புக் கொண் டார். இதே குற்றத்தை ஷேன் வார்னும் செய் தார். இருவருக்கும் அபராதத் தொகை விதித்த ஆஸி. கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை தடை விதிக் கவில்லை. இச் சம்பவம் மார்க் வோவ்வின் கிரிக்கெட் வாழ்வில் களங்கத்தை ஏற்படுத்தியது.

ஒரு நாள் அணியிலிருந்து வோவ் சகோ தரர்கள் இந்த ஆண்டுத் தொடக்கத்தில் நீக்கப்பட் டனர்.

# உனக்காய்க் காத்திருப்பேன்...

இலக்கிய நயம்

தருவது

முழடில்யன்

பொழுது இருட்ட ஆரம்பித்தது மட்டுமல்லாமல், மழையும் சிறு தூற்றலாகப் பெய்ய ஆரம்பித்தது.

தருண்யன் எழுந்து போய்விடலாமா என்று நினைத்தான். இன்னும் கொஞ்சம் மழை பலக்குமாக இருந்தால் இந்த மரக் கிளைகள் அவனைப் பாதுகாக்காது.

ஆர்த்தியிடம் அப்படிப் பட்டவர்த்தனமாக உடைத்துப் பேசியிருக்க வேண்டாமோ... அவள் பயந்த மாதிரித் தெரியவில்லையே... வருவதாகத்தானே சொல்லியிருந்தாள்!

அவளை நம்பி நிற்கலாமா அல்லது போய்விடுவதா என்று ஒரு முடிவுக்கு வரமுடியாமல் கீழிருந்த இலைகளில் 'தொத் தொத்' தென்று விழுந்துகொண்டிருந்த மழைத் துளிகளைப் பார்த்தபடியிருந்தான்.

ஆர்த்தியிடம் மனம் விட்டுப் பேசுவதற்கு முன் தருண்யன் இதைவிடப் பெரிய குழப்பத்திலிருந்தான்.

தனக்குள்ளிருந்து பிறாண்டித் திமிறி இம்சைகள் செய்யும் மிருகத்தைப் பற்றி அவளுக்குச் சொல்லி விடுவது என்று தீர்மானித்த பிறகு அவளுக்கு முன்னால் நிற்கவே அவனுக்கு நடுங்கியது. ஆனால், அவளை நினைக்கையிலேயே நாளுக்கு நாள் அதிகரித்து வந்த வெறி அவனைப் பேச வைத்தது.

"ஆர்த்தி"

'என்ன?' என்ற கேள்வியாக விழிகளை உயர்த்தினாள்.

"இரவில் உன்னால் தூங்க முடிகிறதா?"

"ம்" என்றாள், குழப்பம் கண்களில் படர.

"என்னால் தூங்க முடியவில்லை. அது மட்டுமில்லை, எந்நேரமும் ஒரு மிருகம் என்னைத் தொந்தரவு படுத்திக் கொண்டிருக்கிறது...."

அவள் இவனை மிக விநோதமாகப் பார்த்தாள்.

"உன்னை எண்ணினாலே எனக்குள் திமிறியெழும் மிருக வெறியை இப்போதெல்லாம் அடக்கிக் கொள்ள முடியவில்லை. என் அறிவின் கட்டுப்பாட்டினுள் என்னுடலைக் கொண்டு வரவே முடியவில்லை.

என் மிருகம் என்னுடைய எல்லாத் தடைகளையும் மீறி உன்னைப் பாய்ந்து பிடுங்கி விடுமோ என்று பயமாக இருக்கிறது..."

இப்போது அவள் சிரித்தபடியே, "என்னை எண்ணாமலிருந்து விடேன்" என்றாள்.

அவனுக்கு ஆசுவாசமாக இருந்தது. அவள் கோபித்துக் கொண்டு விடவில்லை. 'போடா மிருகமே' என்று திரும்பி விடுவிடென்று நடந்து விடவில்லை.

மனதில் களி துள்ள, "எண்ணாமலிருப்பதா? அதற்கு என் இதயத்தையல்லவா செயற்படாமல் நிறுத்த வேண்டும்!" என்றவன், பிறகு மென்மையாக "ஆர்த்தி" என அழைத்தான். தாயின் சேலையைப் பற்றிக் கொண்டு அரவணைப்புக்காக ஏங்கிக் கூப்பிடும் குழந்தையின் குரல் போல இருந்தது.

அவளது வட்ட நிலவு முகத்தில் மிதந்த மான் விழிகள் அவனை அள்ளி விழுங்கும் விருப்பத்துடன் பார்த்தன. "என்ன?" என்று உதடுகள் அசைந்தன.

"கண்ணே, கரு மணியே, கனிரசமே, கற்கண்டே! பெண்ணாய் மலர்ந்த என் உயிர் விதையே!" மண்டியிட்டு அவள் கரமொன்றைத் தன் கைகளில் ஏந்தியவாறு தாபம் பொங்கப் பேசினான்.

உதடுகளில் ஒட்டியிருந்த சிரிப்பை அழித்துவிடாமல் இவன் நாடக பாணியைப் பார்த்து நின்றிருந்தாள் ஆர்த்தி.

"என்னை நம்புகிறாயல்லவா?"

கண்களை ஒரு முறை மூடித் திறந்து ஆமோதித்தாள்.

"உன் தாய் தந்தையர் அளிக்க இயன்றதையெல்லாம் உனக்கு அளித்துவிட்டார்கள். இப்பொழுது நீ வேண்டுவதை அளிக்க அவர்களால் இயலாது. அது உன் மனங்கவர்ந்த என்னிடம் இருக்கிறது. வருவாயா என் உயிரே? குறை கொண்ட நம்முடல்களின் பூரணத்துவத்தை அறிய வேண்டும். உன் மலர்க் கன்னங்களின் மென்மைச் சூட்டை என் இதழ்கள் அறிய வேண்டும். என் மார்புக்குள் உன்னைப் புதைத்துக் கொள்வேன். காலாதி காலமும் உன் மேனியில் தங்கி இளைப்பாறும் வரத்தை எனக்கருள். அந்தப் பசுங் குளிர்ப் பூஞ்சோலையில் இன்று உனக்காய்க் காத்திருப்பேன்...வா!"

அவள் கண்களில் நீர் படர்ந்தது. கைகளால் முகத்தை மூடினாள். உடல் குலுங்கிற்று. மெல்லிய விம்மல் பிறந்து வந்து தருண்யனின் நெஞ்சில் பாய்ந்தது.

ஆர்த்தி திரும்பி ஓடினாள்.

"காத்திருப்பேன்" என்று இவன் கூவினான்.

மழை சற்றுப் பலத்தது. தூரத்துப் பொருள்கள் இருளாகின. அவள் வருவாள் என்ற நம்பிக்கை தருண்யனுக்கு இருந்தது. அவனிடமிருக்கும் மிருகத்தின் ஒரு பாதி அவளிடமுமிருக்கிறது!

மழையொலியை மீறி 'கிணிக்' கிட்ட காற்கொலுசொலி காதில் தேனாய் விழுந்தது. பார்வையால் துழாவினான். ஆர்த்திதான் மறைந்து மறைந்து தளர் நடையுடன் வந்து கொண்டிருந்தாள்.

வில்போல் வளைந்த கால் கொலுசுகள் ஒலியெழுப்பி விடக் கூடாதென்ற கவனத்துடன் அடி மேல் அடி வைத்து வந்தாள். அதனால் அவள் அருகில் வந்த பிறகே அவை காட்டிக் கொடுத்தன.

அவள் அணிந்திருந்த நுண்ணிய ஆடை மழையின் உபகாரத்தால் உடலோடு ஒட்டியிருந்தது. அவள் நடந்த போது அது அசைய நேரிட்டதால் அடிக்கடி கால்களின் வெண்மையைக் காட்டி, ஏதோ அலைகளில் அவ்வப்போது பட்டுத் தெறிக்கும் ஒளிபோல பளீர் பளீரென அவனைத் தாக்கியது. அந்த மெல்லிய துணி அடிக்கடி அவள் மீது தவழ்ந்தும் அலைந்தும் சரிந்தும் விழுந்ததை அவ்வப்பொழுது சரிசெய்தபடி அவள் நடந்து வந்தது அவனைப் படுத்தும் அழகு நாடகமாக அமைந்தது. இடையிடையே கண்களுக்குப் புலப்பட்ட எழிலிடங்களால் சித்தங் கலங்கிய நிலையில் அவள் வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தான் தருண்யன்.

அழகிய வேலைப்பாடமைந்த மெல்லிய நூலாடை, கார்காலத்து நறுமணம் கமழும் கூந்தல், அந்தக் கூந்தலில் சூடியிருந்த மலர்களை வண்டுகள் மொய்த்து வர, மழைக்கு ஆடும் மயிலின் அசைவோடு மெல்ல மெல்ல ஒயிலாக வந்தவளைத் தாபமுடன் பார்த்திருந்தான்.

ஆசை மனதை உந்தியது.

"ஆர்த்தி" நெஞ்சாழத்திலிருந்து காதலோசை தேனாய், பாலாய், கனிரசமாய்க் கிளம்பிற்று. தருண்யனின் கரங்கள் அவளை நோக்கி நடுக்கத்துடன் நீண்டன.

விரிந்த கரங்களினுள் ஆர்த்தி புகுந்து கொண்டாள். தன் கைகளை அவன் முதுகைச் சுற்றி இறுக்கினாள். பெண்மைச் சுடுமூச்சு அவனைத் தளர்த்திக் குலைத்துப் புலன்களை வசப்படுத்திற்று.

"உள்ளம் தாங்கா வெள்ளம்" என்று புலவர்கள் சொல்லியிருப்பதை நினைத்தான்.

ஒரு மழைத் துளியோடு இணைந்து கொண்ட மற்றொரு மழைத் துளி போல இருவரும் இணைந்தனர்.

ஊருறங்கிவிட்ட அந்த மழைப் பொழுதில் அவனை முழு நிறை வுபடுத்தினாள் ஆர்த்தி. பின் பிரிந்து சென்றாள். தருண்யன் மீண்டும் குறை கொண்ட உடலானான்.

**கூறுவம் கொல்லோ? கூறலம் கொல்?**

**–எனக்**

**கரந்த காமம் கைந்நிறுக் கல்லாது**
**நயந்து நாம் விட்ட நல்மொழி நம்பி**
**அரைநாள் யாமத்து விழுமழை கரந்து**
**கார்விரை கமழும் கூந்தல், தூவினை**
**நுண்நூல் ஆகம் பொருந்தினள், வெற்பின்**
**இளமழை சூழ்ந்த மடமயில் போல**
**வண்டு வழிப் படரத் தண்மலர் மேய்ந்து**
**வில்வகுப் புற்ற நல்வாங்கு குடைச்சூல்**
**அஞ்சிலம்பு ஒடுக்கி அஞ்சினள் வந்து**
**துஞ்சு ஊர் யாமத்து முயங்கினாள்;**
**பெயர்வோள்....**

**(அகம்: 198: 1-11)**

# சிந்தியா

பதில்கள்

**► உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி களுக்கான போட்டி நிரல் அறிவித்து விட்டார்களே, சிந்தியாவின் கணிப்பில் வெற்றி வாய்ப்பு யாருக்கு?**

எச்.எம்.றிபாஜி, திருகோணமலை.

இப்போதைய தரக் கணிப்பின்படி அவுஸ்திரேலியாவுக்குத்தான் கிண்ணம் என்று சொல்லப் பெரிய ஆராய்ச்சி ஒன்றும் தேவையில்லை. ஆனால், கிரிக்கெட் அவ்வளவு சர்வ நிச்சயமாய் முடிவு சொல்லக் கூடிய விளையாட் டல்ல. அந்த நேரத்துக் காலநிலை, வீரர்களின் தேக, உள ஆரோக்கிய வளர்ச்சி நிலைமை, சந்தர்ப்பத்திற் கேற்ப உடனடி வியூகங்களை வகுக்கும் திறன், அணியின் வீரர்களுக்கிடை யிலான உறவு, வெற்றி மீதான அவர்கள் நம்பிக்கை போன்ற காரணங்கள் எந்த அணிக்கும் சாதனை நிகழ்த்த வாய்ப் பைத் தரும். அந்த வகையில் அரை யிறுதி வரை வருவதற்கு வாய்ப்பிருக் கும் தென்னாபிரிக்கா, இந்தியா, இலங்கை அணிகள் சவாலைத் தரக் கூடியன.

1996 ல் எதிரணிகளைப் பயமுறுத் தும் ஆரம்பத் துடுப்பாட்டக்காரராக ஜெயசூரியா இருந்ததுபோல இந்தியா வுக்கு செவாக்கும், அவுஸ்திரேலியா வுக்கு கில்கிறிஸ்டும் இப்போது இருக் கிறார்கள். இலங்கை அப்படி ஒரு புதிய அதிரடியாளரை அணியில் சேர்த் துக் கொள்ள வேண்டுமென்பது என் எதிர்பார்ப்பு.

★★★

**► தமிழ்ப்பட நடிகைகளில் தற்போது முதலிடம் யாருக்கு ?**

ந.நவா, பண்டாரவளை.

அவசரப்பட வேண்டாம் நவா. இந்த 'இட' மாற்றம் அடுத்த வருடக் கடைசியில்தான் நடக்க வாய்ப்பிருக் கிறது. இப்போதுள்ள நிலைவரம் தொடர்ந்தால் அந்த இடத்துக்கு வரு வதற்கான கூடுதல் வாய்ப்பு சிநேகா வுக்கு.

★★★

**► நோர்வீஜியக் குழுவினரை ஜனாதிபதி சந்திக்க நேரமில்லை என்று சொன்னது குறித்துத் தமிழ்ப் பத்திரிகைகள் நார் நாராகக் கிழக்கின்றனவே?**

இ.கமலரூபன், கொழும்பு-12.

நாம் விரும்புகின்ற அதிகாரங்கள் அனைத்துடனும் இடைக்கால நிர்வா கத்தை ரணில் தந்துவிடுவார் என்ற நம்பிக்கை இருக்கும் வரை ஜனாதி பதிக்கு 'வில்லி' வேஷம்தான்!

★★★

**► ஆசை என்ற ஒன்று இல்லாவிட்டால்..?**

க.கமலதாசன், வந்தாறுமூலை.

வாழ்க்கை 'சப்'பென்று ஆகிவிடும்!

★★★

**► காதலுக்குக் கண்ணில்லை என்பது உண்மையா சிந்தியா?**

ஏ.எஸ்.றியாஸ், ஏறாவூர்-01.

விவாகரத்துகளை விசாரிக்கும் நீதி பதி ஒருவர் சொல்லியிருந்ததாக எங்கோ வாசித்தேன்: "நல்ல காலமாக காதலுக்குக் கண்ணில்லை. இல்லாவிட் டால் எங்களுக்கு வேலையல்லவா போய்விடும்!"

★★★

**► இப்போது சமாதானத்தைக் குழப்பு வதற்கு முஸ்லிம்களும் முயன்று வருகி றார்கள் என்று தமிழ்ப் பத்திரிகைகள் எழுதுகின்றனவே?**

இ.மகேஸ்வரி, உவர்மலை.

சிங்களவர்களை எதிரிகள் என் றோம், இந்தியாவை எதிரி என்றோம், தமிழ்நாட்டையும் எதிரி என்றோம், அமெரிக்கா, ஐரோப்பா எல்லாமே நமக்கு எதிரிகள்தான் என்றெழுதி னோம். இப்போது முஸ்லிம்களும் எதிரி கள் என்பது போல எழுதி வன்மமே விதைத்து வருகிறோம். தமிழ்த் தேசி யத்தை உயர்த்திப் பிடிப்பவர்கள், தாங் கிப் பிடிப்பவர்கள் தவிர மற்ற எல்லோ ருமே எதிரிகள் என்று கூசாமல் விலக்கி, நம்மை நண்பர்களற்ற சிறையில் தள்ளி வருகின்றன இந்த எழுத்துக்கள். எங்களிடமும் ஏதாவது பிழையிருக்கக் கூடுமா என்று எப்போது திரும்பிப் பார்க்கப் போகிறோம்?



**► சும்மா இருந்தாலும் இந்த உலகம் விடாது போலிருக்கிறதே! ஏதாவது நொட்டை சொல்லி நம்மை எரிச்சல் படுத்திக் கொண்டே இருக்கிறார்கள். என்ன செய்வது?**

டேவிட் டொறின், கொட்டகலை.

சும்மா இருக்காதீர்கள். எதையா வது செய்து எப்போதும் பிஸியாக இருங்கள். ஓடுகிற கார் மீது நாய் ஒன்று கடிப்பதில்லை.

★★★

**► நீங்கள் படித்தவற்றில், உங்களைக் கவர்ந்த நகைச்சுவைக் கதைப் புத்தகம் ஒன்றைச் சொல்ல முடியுமா?**

ஆர்.ராமச்சந்திரன், இரத்தினபுரி.

அதை நகைச்சுவைக் கதைப் புத்த கம் என்று சொல்ல முடியாது; கதைப் புத்தகம் என்று கூடச் சொல்லலாமா தெரியவில்லை. அசோக மித்திரனின் 'ஒற்றன்' நாவலை மிக அனுபவித்துச் சிரித்தபடியேதான் படித்து முடித் தேன்-கடைசிக்கு முந்திய பக்கம் வரை.

★★★

**► சிந்தியா, 007 என்பது என்ன?**

இரா.நரசிம்மன், முந்தல்.

இயன் ஃபிளெமிங் என்ற எழுத்தாள ரின் கற்பனையில் உருவான ஒரு துப் பறியும் கதாபாத்திரம் ஜேம்ஸ் பொண்ட் 007.1953 ல் வெளியான அவரது Casino Royale என்ற நாவலில் இந்த சாகசத் துப்பறிவாளன் அறிமுகமா னான். இந்த நாவலின் வெற்றியைத் தொடர்ந்து பத்துக்கு மேற்பட்ட ஜேம்ஸ் பொண்ட் நாவல்களை இயன் ஃபிளெ மிங் எழுதினார்.

1962 ல் இந்த அசகாய துப்பறிவா ளன் திரைக்கு வந்தான். Dr. No என்ற அந்த முதல் படத்தில் ஜேம்ஸ் பொண் டாக நடித்தவர் சீன் கொனரி. இதன் வெற்றியைத் தொடர்ந்து இன்றுவரை 19 ஜேம்ஸ் பொண்ட் படங்கள் வந்து விட்டன. ஜேம்ஸ் பொண்டாக ஐந்து கதாநாயகர்கள் நடித்திருக்கிறார்கள். இவர்களில் ஆரம்பத்தில் பொண்ட் பாணியைத் தன் நடிப்பில் அறிமுகப் படுத்திப் பிரபலமாக்கிய சீன் கொனரி யும் (6 படங்கள்), பொண்டிற்கு நகைச் சுவைச் சாயலை அழுத்திய ரோஜர் மூரும் (7 படங்கள்), சிறிய தேக்கத்திற்குப் பின் இப்போது பொண்ட் பாத்தி ரத்தை மிக வெற்றியடைய வைத்திருக் கும் பியர்ஸ் ப்ரொண்ஸனும் (இதுவரை 3 படங்கள்) வெகு பிரபலமானவர்கள். இடையில் ஜோர்ஜ் லஸென்பி ஒரு படத்திலும், திமோதி டால்டன் இரண்டு படங்களிலும் நடித்தார்கள். அவை எடுபடவில்லை. கடைசியாக வந்திருக்கும் 007 படம் பியர்ஸ் ப்ரொன்ஸன் நடித்திருக்கும் The World is Not Enough (1999). இவர் பொண்டா கத் தோன்றிய மூன்று படங்களும் முன்னெப்போதுமில்லாத, வகையில் வசூலை அள்ளிக் குவித்திருக்கின்றன. (ஒவ்வொரு படத்திற்கும் 350 மில்லியன் டொலர்களுக்கு மேல்). ப்ரொன்ஸன் நடிப்பில் இம்மாதம் வெளியாக இருப் பது Die Another Day).

முழு மூடனாக வீட்டை விட்டு விரட்டப்பட்ட நந்த கோபன் வித்தைகள் பல கற்று வித்தகனாக வீடு திரும்பியதைக் கண்ட அவனுடைய தந்தை அக மகிழ்வுடன் அவனை வரவேற்றார். உஜ்ஜயினி நகரில் வாழ்பவர் எவரேனும் தேச சஞ்சாரம் செய்துவிட்டுத் திரும்பிய தும் மாமன்னர் விக்கிரமாதித்தனிடம் சென்று தங்கள் பயண அனுபவங்களைக் கூறுவார்கள். அவர்களுக்குப் பொன்னும் மணியும் வழங்கி மன்னர் மகிழ்விப்பார்.

யாத்திரை சென்றவர்களின் அனுப வங்களை அவதானமாக மன்னர் கேட்ப துண்டு. அந்த வழமைப்படி நந்தகோபனு டைய பயண அனுபவங்களையும் மன் னர் கேட்டார். திருக்காளத்தி நகரில் தான் கண்ட அழகி தாசி நவமோகினி யின் கதையை நந்தகோபன் கூறக் கேட்ட மன்னர், பல நூற்றுக் கணக்கான இளை ஞர்களை அந்த அழகியான காசி நவ மோகினி மாண்டு மடிய வைத்த கதை யைக் கேட்டுக் கொதிப்படைந்தார்.

தாசி நவமோகினியின் கொட் டத்தை அடக்கச் சித்தம் கொண்ட மன் னர் வேதாளத்தின் உதவியுடன் நந்தகோ பனையும் அழைத்துக் கொண்டு திருக் காளத்தி நகரை வந்தடைந்தார். நந்த கோபனை நகரிலிருந்த சத்திரத்தில் தங்க வைத்துவிட்டுத் தாசியின் வீட்டை அடைந்தார். மாறு வேடத்தில் வந்த மன்னரை ஒரு வேற்று நாட்டு வணி கர் என்றெண்ணி தாசி வரவேற்றாள்.

"அந்நிய நாட்டிலிருந்து தனது உயிரை மாய்ப்பதற்காக ஒருவர் வந்தி ருக்கிறாரே" என்று உள்ளூர எண்ணிக் கொண்டு மன்னரை வரவேற்று உப சரித்தாள். தாசி நவமோகினி நந்தகோ பன் வர்ணித்ததை விடப் பல மடங்கு அழ குள்ளவளாக மன்னவருக்குக் காட்சி தந்தாள். மன்னரைப் பார்த்து அவள் சற்று மனம் வருந்தியவளாக, "ஐயா, தாங்கள் என்னுடன் உல்லாசமாக இருக் கலாம் என்ற எண்ணத்துடன் வந்திருக்கி றீர்கள். ஆனால், நான் எட்டிக்கனி. என்னை நாடி வருபவர்களை என்னை ஆட்டிப் படைக்கும் ஓர் அரக்கன் திடீரெ னத் தோன்றிக் கொன்று தின்றுவிடுவான். இவ்வாறு என்னிடம் வந்த பல இளைஞர்கள் பலியாகிவிட்ட னர். தாங்கள் உடனடியாக இங்கிருந்து போய்விடுங்கள்" என்று கூறினாள். மன் னர் அவள் கூறிய தகவலை அறிந்தும் அலட்சியமாக இருந்தார். நந்தகோபன் கூறியதைப் போலன்றி நவமோகினி நல்லவள் என்பதைக் கண்டு கொண்டார்.

கலக்கமுடனிருந்த நவமோகினி யைப் பார்த்து மன்னர் "பெண்ணே கவ லைப்பட வேண்டாம். உன் துயரங்களைக் களையவே நான் இங்கு வந்திருக்கி றேன். அரக்கன் வரட்டும் அவனுக்கு இன்றே முடிவு கட்டுகிறேன். அமைதி யாக இரு பார்க்கலாம்", என்று கூறி அவளை அமைதியடையச் செய்தார்.

சற்று நேரத்தில் பயங்கர உருவம் கொண்ட அரக்கன் ஒருவன் அங்கு தோன்றி, மன்னரைக் கொல்வதற்கு ஆயத்தமானான். மன்னர் தன்னிட மிருந்த மந்திரவாளை உருவி அவ்வரக் கனை வெட்டிக் கொன்றார். நவ மோகினி பெருமகிழ்ச்சியுடன் மன்ன ரின் தாள் பணிந்து நன்றி கூறினாள்.

மன்னர் விக்கிரமாதித்தன் நந்தகோ பனை அழைத்து நவமோகினிக்கு மணம் முடித்து வைத்து, அவர்கள் நலமுடன் வாழ்வதற்கேற்ப ஏராளமான பொன்னும் பொருட்களும் கொடுத்து வாழ்த்தி னார்.

இருபத்தைந்தாம் படிக்குக் காவலாக நின்ற மோகனகாந்தவல்லிப் பதுமை இக்கதையைக் கூறி முடிக்கும் போது கதிரவன் மறையும் நேரமாகி விட்டது. போஜ மன்னர் கதை கூறிய பதுமைக்கு நன்றி கூறிவிட்டுத் தனது அரண்மனை திரும்பி ஒய்வெடுத்தார்.

## சித்திருத்தி மலை உச்சியில்...

## மன்னாதி மன்னன்

128

இராஜகுமாரன்

அடுத்த நாட்காலையில் எழுந்த போஜ மன்னர் அவசர அவசரமாகத் தனது காலைக்கடன்களை முடித்துவிட்டு அரியணை வைக்கப்பட்டிருந்த மண்ட பத்தை வந்தடைந்தார். அரியணைக் குரிய பூசைகளை முடித்துவிட்டு அரிய ணையின் படிகளில் ஏறினார். இருபத்தா றாவது படிக்கட்டில் காலடி எடுத்து வைத் ததும் அப் படிக்குக் காவலாக இருந்த சகலகலாவல்லிப் பதுமை மன்னரின் வேகத்தைத் தடுத்து நிறுத்திவிட்டு மாமன்னர் விக்கிரமாதித்த பூபதியின் ஆட்சிக் காலத்தில் நடந்த மற்றுமொரு கதையைக் கூறத் தொடங்கியது.

விக்கிரமாதித்த மாமன்னர் வேதா ளத்தை அழைத்து, "பல தேசங்களுக்குச் சென்று ஆங்காங்கே காணப்படும் அதிசயங்களை அறிந்து வந்து என்னிடம் கூறு" என்று பணித்தார்.

வேதாளம் ஒரு வாரம் வரை பல நாடுகளுக்கும் சென்று பல புதினங் களைத் திரட்டிக் கொண்டு வந்து சேர்ந் தது. வேதாளம் விவரித்த கதைகளில் சித்திருத்தி என்ற மலையின் உச்சியி லுள்ள காளிகோவிலில் கண்டதாகக் கூறிய கதையே மன்னரைக் கவர்ந்தது.

சித்திருத்தி மலையின் உச்சியி லிருந்த காளி கோவிலின் முன் புறத்தில் வேதநாயகன் என்ற ஒருவன் தவம் இயற்றிக் கொண்டிருந்தான். அவன் வளர்க்கும் ஓமத் தின் முடிவில் சேரும் சாம்பல் கொட்டப்பட்ட இடத்தில் ஒரு மலை போல் அச் சாம்பல் வளர்ந்திருக்கி றது. இந்த ஓமத்தீக்குப் பயன்படுத்தப் படும் நெய் காளி கோவிலின் கூரையி லிருந்து தானாகவே சுரந்து ஓமகுண்டத் தின் தேவைக்கு ஏற்றபடி துளித்துளியாக வந்து விழுவதையும் கண்டதாக வேதா ளம் கூறியது.

இக் கதையைக் கேட்டதும் மன் னர் விக்கிரமாதித்தன் தானும் நேரடி யாகச் சென்று பார்க்க வேண்டும் என்று கருதினார். வேதாளத்தின் துணையுடன் சித்திருத்தி மலைக்குச் சென்று உச்சி யிலிருந்த காளி கோவிலில் வழிபட் டார். வேதாளம் கூறியது போல் ஓமகுண் டத்தின் முன்னால் ஒற்றைக் காலில் நின்ற வண்ணம் தவம் செய்து கொண்டி ருந்தான் அந்தணன். தவம் கலைந்ததும் மன்னர் வேதநாயகனை அணுகினார். அவனருகில் மலைபோல் வளர்ந்திருந்த சாம்பல் மேட்டையும் கண்டார்.

வேதநாயகனிடம் "எவ்வளவு கால மாக நீர் தவம் இயற்றிக் கொண்டிருக் கிறீர்?" என்று மன்னர் கேட்டார். "நான் நூறு வருடங்களுக்கு மேலாகக் காளி அம்மனின் அருள் வேண்டித் தவ மியற்றி வருகிறேன்" எனத் தெரிவித் தான் வேதநாயகன்.

மன்னர் விக்கிரமாதித்தன் ஆலயம் சென்று அம்பாளை வணங்கி, "தாயே காட்சி தர வேண்டும்" என்றார்.

வழமையாக மன்னர் விக்கிரமாதித் தன் வேண்டியதும் காட்சியளிக்கும் காளி அம்மன் இப்போது காட்சி தரவில்லை. வியப்படைந்த மன்னர் தனது உடைவாளை எடுத்துத் தன் சிரசைக் கொய்ய முற்பட்டார்.

அப்போது காளி அம்மன் மன்னர் முன் தோன்றி "மகனே என்னை அழைத்த தன் காரணம் என்ன?" என்று வினவினாள்.

(மன்னன் வருவான்...)

## காதில பூ கந்தசாமி

நோட்டீஸ் பலகை



• நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை •

-காதில பூ கந்தசாமி-

அன்பின் வாசகர்களுக்கு காதில பூ கந்தசாமியின் தீபாவளி வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வளவு காலமும் நான் குடுத்த பூக்களையெல்லாம் காதுகளில் சூடி மகிழ்ந்த உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். தொடந்தும் நான் கூறும் புடம் போட்ட புலுடாக்களையெல்லாம் உண்மை களெண்டே நம்பி, ஏமாந்திருக்கக் கடவீ ரெண்டு உங்களை ஆசீர்வதித்துக்கொள் கிறேன்.

எனது நெருங்கிய நண்பர்களான சில அரசியல்வாதிகளும் பிரமுகர்களும் என்னூ டாக உங்களுக்கு தமது தீபாவளி வாழ்த் துக்களை தெரிவிக்க விரும்பி கற்பனை மெயிலில அனுப்பி வைத்துள்ளார்கள். அவற்றை இங்கே தருகிறேன். இத்தினத் தில் அவர்களின் அபிமானப் பாடலையும் ஒரு வரி பாடிக் காட்ட ஆசைப்படுகிறார்கள். சகித்துக் கொள்ளுங்கள்.

**ஜனாதிபதி சந்திரிகா:** வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும். அதை வாங்கித் தந்த பெருமை எல்லாம் பீரிஸைச் சேரும்! நாட்டு மக்களே, நரகாசுரனை வதம் செய் ததுபோல் நான் எனக்கெதிராக வந்த 19ம் திருத்தச் சட்டமூலத்தில் பெற்ற வெற்றியைக் கொண்டாடி மகிழும்படி இத் தீபாவளி தினத்தில் வாழ்த்திக் கொள் கிறேன். பாராளுமன்றத்தைக் கலைக்கா மலே ஆட்சியைப் பிடிக்க, அதிருப்தியாளர் களை என்பக்கம் சேரும்படி இத் தினத் தில் பிரார்த்தனை செய்யும்படி உங்களை வேண்டிக் கொள்கிறேன்.

**ரணில்:** நானொரு முட்டாளுங்க! நல்லாப் படிச்சவங்க நாலு பேரை நம்பின னுங்க, நானொரு முட்டாளுங்க... நாட்டு மக்களுக்கு எனது சோகம் ததும்பிய தீபா வளி வாழ்த்துக்கள். பெரும்படிப்புக்காறரை நம்பி சிறகை வெட்டித்தாறன், அதிகா ரத்தைப் பறிச்சுத்தாறன் எண்ட ஆசை வார்த்தைகளுக்கு எடுபட்டு நீங்களும் மண்கவ்வி விடக்கூடாது எண்டு அறிவுரை கூறி அடுத்த தீபாவளி வரையாவது எனது ஆட்சியை காப்பாத்த வேணுமெண்டு இத் தீபாவளி தினத்தில் பிரார்த்திக்கும்படி உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

தப்பித்தவறித் தேர்தல் வந்தால், கூட்டுக்கட்சிகள் கூட்டை விட்டுப் பறந்து விடாமல் பார்த்துக்கொள்ள ஆண்டவனை வேண்டிக்கொள்கிறேன்.

**பீரிஸ்:** தப்புக் கணக்கைப் போட்டுத் தவிச்சேன் தங்கமே ஞானத் தங்கமே, பட்ட பிறகே புத்தி தெளிஞ்சேன் தங்கமே ஞானத் தங்கமே......

நான் எழுதிறது எல்லாம் பிழைக்கிறது தான் கைராசியாகப் போட்டுது. சந்திரிகா தந்த அரசியல் அமைப்புச் சட்டத்தை திருத்த வெளிக்கிட்டன், கிழிச்சு வீசிட் டாங்கள். கட்சிமாறிப் போய் 19வது திருத் தம் எண்டு எழுதப் போனால் பிழை எண்டு தீர்ப்பளிக்குது நீதிமன்றம். எக்கணம் உங் களை வாழ்த்தப் போய் பிழைச்சிட்டுதெண் டால் உங்கட வாழ்க்கைக்கு என்ன நடக் குதோ, எனக்குக் கிடைக்கிற வாக் குக்கு என்ன நடக்குமோ எண்ட டவுட்டில இருக் கிறன். எதுக்கும் இப்ப நான் இறங்கி இருக்கிற பேச்சுவார்த்தை மட்டுமாவது சரிவந்தால் போதும். அதுக்கு நீங்கள் தான் என்னை வாழ்த்த வேணும். தேங்யூ.

**ஆனந்தசங்கரி:** துணிந்தபின் மனமே துயரம் கொள்ளாதே, சோகம் கொள் ளாதே... தீபாவளியா? வாழ்த்தா? அமிர் அண்ணையின்ர பிறந்தநாளுக்கே வாழ்த் துச் சொல்ல விடுறாங்கள் இல்லை. தீபா வளிக்கு வாழ்த்தவாவது அனுமதி கிடைச்சதையிட்டு மகிழ்ச்சி.

அடுத்த தீபாவளிக்காவது நான் ஐ.நா.சபையில பேச ஆண்டவன், ஆழ் பவன், ஆட்டுவிப்பவன் யாராவது சரி அனுமதி தரும்படி பிரார்த்தியுங்கள் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மகேஸ்வரன்:** ஆடிய ஆட்டம் என்ன, பேசிய வார்த்தை என்ன, தேடிய செல் வம் என்ன, சிதைந்ததோர் அமைச்சும் என்ன..

ஆடறுத்து விருந்தளிக்க முடியாத அமைச்சை பெற்றுக் கொண்ட அபாக்கிய வான் நான். தீபாவளிக்கு எப்பிடி வாழ்த்து வன்? உருப்படியான அமைச்சும் கிடைக் கேல்லை. உழைச்ச காசை மறைச்சு வைச்சாலும் வன்னிக்காறர் கண்ணில மண்தூவ முடியேல்லை. இதுக்கு நடுவில அடுத்த இலக்சன் வந்தால் அனுமதி கிடைக்குமோ எண்டும் தெரியேல்லை. வாழ்த்தி என்ன மிச்சம்?

**டக்ளஸ்:** எல்லோருக்கும் நல்ல கால முண்டு நேரமுண்டு வாழ்விலே. எல்லோருக் கும் நல்ல ஏற்றமுண்டு மாற்றமுண்டு உறவிலே.

அரசியலில கஷ்ட காலமும் வரும். அதக் கெட்டித்தனமாக் கடக்கிறதுதான் புத்தி. ஆளும் கட்சியையோ எதிர்க்கட் சியையோ பகைக்காமல் பக்குவமாக் காய் நகர்த்தினபடி காலத்துக்காகக் காத்திருக் கிறன். தீபாவளியை நம்பிக்கையோட கொண்டாடுங்கோ. அடுத்த தீபாவளிக் கிடையில நான் சீனுக்கு வந்திடுவன்.

யாவும் கலப்படமற்ற கற்பனை -

## இந்தவாரம் உங்கள் பலன்

03.11.2002 தொடங்கி 09.11.2002வரை

சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை

துலாம் - சூரியன், வெள்ளி, புதன், விருட்சிகம் - கேது, இடபம் - இராகு, மிதுனம் - சனி, கர்க்கடகம் - வியாழன், கன்னி–செவ்வாய்.

சந்திரன் கன்னி, துலாம், விருட்சிகம், தனு இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்**

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) எடுத்த கருமங்களில் வெற்றியும், குடும்ப மகிழ்ச்சியும் சந்தோசமும் நிலவும். பணவரவு திருப்தி தரும். உத்தியோகத்தில் இருந்து வந்த தொல்லைகள் மறையும். மாணவர்களுக்குக் கல்வி சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்..

அதிஸ்ட நாள்: செவ்வாய்.

அதிஸ்ட இல.: 1.

**இடபம்**

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் கஷ்டங்கள் தீரும். பெரியோர்கள் உதவியுண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் உதவி கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் கூடிய முயற்சியெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் எதையும் திட்டமிட்டுச் செய்வது சிறப்புத் தரும்.

அதிஸ்ட நாள்: வெள்ளி.

அதிஸ்ட இல: 6.

**மிதுனம்**

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முதற்கால்) எதிர்பார்த்த கருமங்களில் தடையுண்டு. பொருள் வரவு தாமதமாகும். குடும்பத்தில் சிறிது பிரச்சனைகள் தோன்றும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்புகள் தோன்றும். மாணவர்கள் கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: புதன்.

அதிஸ்ட இல.: 5.

**கர்க்கடகம்**

(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழில் நிலை உயர்ச்சியும், பண வரவும் உண்டாகும். உத்தியோகத்தர்கள் விழிப்புடன் நடந்து கொள்ளவும். மாணவர்கள் கல்வியில் மந்தநிலை தொடரும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: வியாழன்.

அதிஸ்ட இல.: 4.

**சிங்கம்**

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) கருமங்களில் வெற்றியுண்டாகும். பொருள் வரவு சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் சிலருக்கு மாற்றம் ஏற்படும். மாணவர்களுக்குக் கல்வியில் குழப்பநிலை உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: செவ்வாய்.

அதிஸ்ட இல.: 3.

**கன்னி**

(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழிலில் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கும். அன்னியர் உதவியுண்டு. காரியானுகூலம், பொருள் வரவுண்டாகும். உத்தியோகத்தில் சிலர் ஏமாற்றமடைவர். மாணவர்களுக்குக் கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: புதன்.

அதிஸ்ட இல.: 5.

**துலாம்**

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) பெரியோர் உதவியும், முயற்சிகளில் வெற்றியும் உண்டாகும். பண வரவு தாமதமாகும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்வர். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: வெள்ளி.

அதிஸ்ட இல.: 6.

**விருட்சிகம்**

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) முயற்சிகளில் சிறு தடையுண்டாகும். பணவரவு திருப்திதரா. வெளியிடப் பிரயாணங்களால் தொல்லைகள் சேரும். உத்தியோகத்தில் உள்ளோர் மறைமுக எதிர்ப்புக்கு ஆளாகுவர். மாணவர்களுக்குக் கல்வியில் இருந்த நாட்டம் குறைவடையும்.. விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: செவ்வாய்.

அதிஸ்ட இல.: 7.

**தனு**

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழிலிலும் குடும்பத்திலும் இருந்து வந்த கஷ்டங்கள் தீரும். பொருள் வரவு சிறிது பாதிப்புறும். உத்தியோகத்தர்கள், பதவிகளில் பிரச்சனை தோன்றும். மாணவர்களுக்குக் கல்வி சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் கவனமுடன் நடந்து கொள்ளவும்.

அதிஸ்ட நாள்: வியாழன்.

அதிஸ்ட இல.: 4.

**மகரம்**

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் சிறப்பும், பணவரவும் பாதிப்புறும். பெரியோர்வீண் பகை கொள்வர். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளுடன் அவதானமாக நடந்து கொள்ளவும். மாணவர்கள் கல்வியில் மந்தமடைவர். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: புதன்.

அதிஸ்ட இல.: 2.

**கும்பம்**

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) குடும்பத்தில் ஏற்பட்டிருந்த சச்சரவுகள் மறையும். பொருள் வரவு திருப்தி தரும். உத்தியோகத்தர்கள் விழிப்புடன் நடந்து கொள்ளவும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: திங்கள்.

அதிஸ்ட இல.: 4.

**மீனம்**

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) எடுத்த கருமங்களில் தடையும், தேகாரோக்கியக் குறைவும் உண்டு. பணவரவு சிறிது தடைப்படும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புக்கள் தோன்றும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமெடுக்க வேண்டும்.. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.

அதிஸ்ட நாள்: வியாழன்.

அதிஸ்ட இல.: 1.



ஜுவல்ஸ்
கல்யாணி

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323651


# சுதந்திர அழகிகள்

➘ **தி**பெத், இந்திய-சீன எல்லையிலுள்ள ஒரு சிறிய நிலப் பிரதேசம். இதைச் சுதந்திர நாடாக அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை வெகு நாட்களாக இருந்து வந்தாலும், சீனா திபெத்தைத் தனது ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசம் எனக் கூறிச் சுதந்திரம் வழங்க மறுத்து வருகிறது.

தமது அடையாளத்தை நிலைநிறுத்தும் முயற்சியில் திபெத்தியர்கள் தொடர்ந்தாக ஈடுபட்டு வருகின்றனர். அவர்களது அரசாங்கத் தலைவர், ஆன்மீகத் தலைவர் எல்லாம் தலாய்லாமாதான்.

முதன் முறையாகத் திபெத்தில் அந்நாட்டு அழகுராணியைத் தெரிவு செய்வதற்கான போட்டி சமீபத்தில் நடைபெற்றது. இதில் மிஸ் திபெத்தாக லொப்சாங் வாங்மால் என்ற அழகி தெரிவானார். (படத்தில் இருப்பவர்).

இவர் பகுதிநேரப் பத்திரிகையாளர். தலாய்லாமாவின் தீவிர பக்தர். திபெத்திய எதிர்கால சந்ததியினருக்கு முன்மாதிரியாகத் தனது அழகிப் பட்டத்தைப் பயன்படுத்தப் போவதாகக் கூறும் இவர் நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபடப் போவதாகவும் தெரிவிக்கிறார்.



ஆனால் துரதிஷ்டம் என்னவெனில் இவர் சுதந்திர அழகியாக சர்வ சுதந்திரமாக நடமாட முடியாது. ஏனெனில் சீன உளவுப் பிரிவுகள் திபெத்தின் சுயாதிபத்தியத்தை நிலை நிறுத்த முயற்சிக்கும் எவரையும் இலகுவில் வாழ விட்டதில்லை. திபெத்தின் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா ஏற்கனவே சீனாவின் அழுத்தம் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாடுகளில் அஞ்ஞாதவாசம் இருந்து வருகிறார். சுதந்திரப் பிரகடனம் செய்து கொள்ளாத நிலையில் ஒரு நாடு என்ற கோதாவுடன் திபெத்தில் நடைபெற்ற அழகுராணிப் போட்டி சீனாவைச் சீண்டிக்கொள்ள வைத்தாலும் சர்வதேச ரீதியில் மிகுந்த கவனத்துடன் அவதானிக்கப் பட்டது.

## 2வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி ம.திலக்ஷியா 29.10.2002

[illegible] தம்பதிகளின் செல்வப் புதல்வி திலக்ஷியா தனது இரண்டாவது பிறந்தநாளை [illegible] 29.10.2002 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா அம்மா, [illegible] வாழ்த்துகிறார்கள். தகவல்: அப்பா-அம்மா, [illegible]

# அதிசயம்




→ **ம**னித சக்திக்கு அப்பாற்பட்ட அல்லது விஞ்ஞான பூர்வமற்ற அதிசயங்கள் குறித்த செய்திகளுக்குப் பஞ்சமே இல்லாத நாடு இந்தியா. இப்போது இத்தகைய அதிசயம் ஒன்று பற்றிய சர்ச்சையில் பரவலாகப் பேசப்படுகிறது மறைந்த அன்னை தெரேசாவின் பெயர்.

மொனிகா பெசிரா கல்கத்தா நகருக்கு வடகிழக்காக 460 மைல் தொலைவிலுள்ள தங்ராம் என்ற கிராமத்தில் வசிக்கும் ஒரு பெண். இவரது வயிற்றில் சில காலமாகக் காணப்பட்ட ஒரு கட்டி, புற்றுநோய் என வைத்தியர்களால் அறியப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. பல காலம் சிகிச்சை செய்தும் முற்றாகக் குணமாகவில்லை.

அன்னை தெரேசா மீது மிகுந்த பக்தி கொண்டிருந்த மொனிகாவிற்கு தெரேசாவின் ஆசிரமத்தைச் சேர்ந்த ஒரு கன்னியாஸ்திரியினால் வழங்கப்பட்ட அன்னையின் படத்தை மொனிகாவின் வயிற்றில் வைத்ததன் மூலம் அவரது புற்றுநோய் குணமடைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொனிகாவின் வயிற்றில் இருந்த புற்றுநோய் அகன்றுவிட்டதாக அவரைப் பரிசோதித்த மருத்துவர்களும் கூறுகின்றனர். இதன் பின்னர்தான் சர்ச்சை ஆரம்பமானது.

இந்த அதிசயம் அன்னை தெரேசாவின் புனிதத் தன்மையால் நடைபெற்றது என்பதால் அன்னைக்குப் புனிதப் பட்டம் வழங்குமாறு அவரது ஆசிரமம் சார்பாக விடுக்கப்பட்ட வேண்டுகோளை வத்திக்கானிலுள்ள கத்தோலிக்க திருச்சபை ஏற்றுக்கொண்டது. இதனை எதிர்த்து இந்தியாவிலுள்ள மூடநம்பிக்கைகளுக்கு எதிராகச் செயற்படும் பல அமைப்புகள் போர்க்கொடி தூக்கியுள்ளன.

அன்னை தெரேசா மகத்தான சேவை ஆற்றியவர். அனாதைகளுக்கும் ஏழைகளுக்கும் அவர் ஆற்றிய சேவை குறித்து மாறுக் கருத்துக்கு இடமிருக்க முடியாது. இந்த சேவைகளுக்காக வேண்டுமானால் அன்னை தெரேசாவுக்கு புனிதப் பட்டம் கொடுத்து அவரைக் கௌரவிக்கலாம். அதைவிடுத்து இத்தகைய அதிசயங்களை நிகழ்த்தினார் எனக் கூறி அவரைப் புனிதத் தன்மைக்குக் கொண்டு செல்வது அவரது உண்மையான கௌரவத்திற்கு இழுக்கை ஏற்படுத்தும் என்று மூடநம்பிக்கைகளுக்கெதிரான பல அமைப்புக்கள் கூறுகின்றன.

இத்தகைய விடயங்களுக்கு அதிசயம் என்ற பெயரில் அதிகபட்ச பிரச்சாரம் வழங்கப்படுவதால், பாமர ஏழை மக்கள் நோய் மற்றும் உள்ள பிரச்சனைகளின் போது அவற்றை யதார்த்தமாகவும் விஞ்ஞான பூர்வமாகவும் அணுகாமல் தவறான வழியில் சென்று போலிச் சாமியார்களிடம் ஏமாற்றமடைவதற்கான சாத்தியங்களை இது ஏற்படுத்திவிடும் என்று அந்த அமைப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன.

எவ்வாறெனினும் இந்தப் பெண்ணின் புற்றுநோய் மருந்தின் பயனாகவே குணமடைந்தது என நிரூபிக்க அறிவு பூர்வமாகச் சிந்திக்கும் பலர் முயற்சி செய்து வருகின்றனர். மொனிகாவின் நோய் சில காலமாகப் படிப்படியாகக் குணமடைந்து வந்ததை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எது எப்படி இருந்தாலும் மொனிகாவின் கணவருக்குக் கூட இந்த அதிசயத்தில் நம்பிக்கை இல்லை. தனது மனைவியைப் படம் பிடிக்கவும் பேட்டி எடுக்கவும் தினசரி வந்து குவியும் பத்திரிகையாளர்களை அடித்துத் துரத்தாத குறையாக ஆத்திரத்துடன் பார்க்கிறார் சிகு மூர்மா என்ற அந்த நபர்.

# செக்ஸ் மியூசியம்



↑ **ப**ழைய பொருட்களைப் பாதுகாத்து வைத்திருக்கும் இடத்திற்கு மியூசியம் என்று பெயர். ஆனால் உலகின் மிகப் பழமையான விசயமாகிய செக்ஸ் பற்றிய தகவல்கள் ஆவணங்கள் என்பவற்றைப் பத்திரப்படுத்த ஒரு மியூசியம் இல்லையே என்று சிந்தித்த டானியல் குழுக் என்ற அமெரிக்கர் அந்தக் குறையை நிவர்த்தி செய்யும் முகமாக செக்ஸ் மியூசியம் ஒன்றைத் தொடங்கியிருக்கிறார். அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த செக்ஸ் மியூசியத்தில் ஏகப்பட்ட பாலியல் படைப்புக்கள், புகைப்படங்கள், சித்திரங்கள் எனக் குவிந்து கிடக்கின்றன.

பலர் தம்வசம் உள்ள செக்ஸ் சம்பந்தமான கலைச் சிற்பங்களை இந்த மியூசியத்திற்குக் கொடுத்துப் புண்ணியம் தேடிக் கொண்டுள்ளார்கள். இந்த மியூசியத்திற்குள் இலவசமாக நுழைய முடியாது. ஒரு ரிக்கட் 17 டொலர்களுக்கு விற்கப்படுகிறது.

இந்த மியூசியத்தை வடிவமைக்கவும் பார்வையாளர்களைக் கவரும் விதத்தில் இதனைச் செய்து முடிக்கவும் டானியலுக்கு அவரது நண்பர்கள் பலர் உதவியுள்ளார்கள். செக்ஸ் மியூசியத்தில் பார்வையாளர்களைக் கவரும் ஒரு ஓவியத்தையே இங்கு காண்கிறீர்கள்.

## முதலாவது பிறந்த தின வாழ்த்து



செல்வி த.ஜீவனா 24.10.2002

தவராஜா-பாமினி தம்பதிகளின் திருமகள் செல்வி ஜீவனா தனது முதலாவது பிறந்த தினத்தை 24.10.2002 வியாழனன்று நெல்லியடியில் அமைந்துள்ள அப்பம்மாவின் இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மா, மாமாமார்கள், அத்தைமார்கள், மைத்துனிகள் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் எல்லாம் வல்ல செல்வச் சந்நிதி முருகன் அருளால் சகல செளபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: தந்தை மி. தவராஜா
Jeevanals SuperStore
143, Brookmill Road,
London SE84JH
England




அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

436331




இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. எண்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவயில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் நவ. 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.